# திருக்கோயில்



மே 1978 ரு 1-25



பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி

திருக்கோயிலில் நடைபெற்ற

பாவை விழாவில், அறநிலைய ஆணையர்

திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.

அவர்கள், குழந்தைகளுக்குப்

பரிசு வழங்குதல்.

மதுரை மாவட்டம்

அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலின்

நூபுரகங்கைத் தீர்த்தத்திற்குச்

செல்லக், கட்டப் பெற்ற

புதிய படிக்கட்டினை,

ஆணையர்

திரு எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.

அவர்கள் திறந்துவைத்தல்.



COMMISSIONER OF TAMIL NADU ARCHIVES AND HISTORICAL RESEARCH
27 மே 1978
EGMORE, MADRAS

S5 126

முகப்பு:

அருள்மிகு தேவி பகவதி அம்மன்,
கன்னியாகுமரி.

# திருக்கோயில்

மாலை : 20 || காளயுக்தி ஆண்டு—வைகாசித் திங்கள் மே—1978 || மணி : 8

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர் களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

**ஆணையர் அவர்கள்,**
**அறநிலைய ஆட்சித்துறை,**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப் பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. **15—00** உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங் களுக்கு, ஒரு இதழ் ரூ. **1—25** வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் '' சந்தாதாரர் '' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொரு வரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும் பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடு மாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் *[PINCODE]* எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறை யாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற் பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொரு வருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. **9—60** ஆகின்றது. ஆதலால் வெளி நாட்டுச் சந்தா, ரூ. **20—00**-ல் இருந்து ரூ. **25—00** ஆக ஜனவரி **1978** முதல் மாற்றி அமைக்கப் பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப் போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

அடைக்கலம் அளித்த அருளாளர்
—திரு எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.,

செங்கற்பட்டு மாவட்டக் கோயில்கள் பற்றிய குறிப்புகள் —ஆசிரியர்.

நத்தத்தனார் முத்தமிழ் விழா

கந்தபுராணக் காப்பிய நலம்
—திரு க. த. திருநாவுக்கரசு, எம்.ஏ., எம்.லிட்.,

சம்பந்தரும் சங்க நூல்களும் —தமிழ் விரகன்.

திருவள்ளுவரின் சிறப்பியற் கொள்கைகள் ✓
—திரு ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.,

தண்டமிழின் மேலாம் தரம் —சிவநேசன்.

சமயம் பரப்பிய சான்றோர்
—திரு ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.,

உலோப குணம்
—திருமுருக கிருபானந்தவாரியார்

திருச்சிற்றம்பலக் கோவையார் —ஆசிரியர்

காஞ்சியில் திருமால் கோயில்கள்
—திரு. பி. ப. அண்ணங்கராச்சாரிய சுவாமிகள்.

தாமரைக் கண்களால் நோக்காய்
—அடியார்க்கு நல்லான்.

நீத்தார் பெருமை ✓
—தவத்திரு அழகர் அடிகளார்.

எண் அணி அமைந்த நுண்ணியற் செய்யுள்
—ஆசிரியர்.

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

**"என் கடன் பணி செய்து கிடப்பதே"**

# "அடைக்கலம் அளித்த அருளாளர்"

158632

திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I.A.S.,
ஆணையர், அறநிலையத்துறை, சென்னை-34

Q2 ன211, N58
N78.21.8

இந்திய நாட்டின் பழம் பெரும் புனிதத் தலங்களுள், இணையற்றுச் சிறந்து திகழ்வது இராமேசுவரம். இராமேசுவரத்திற்குச் செல்லும் யாத்திரிகர்களும், பக்தர்களும் தவருமல் தரிசிக்க வேண்டியவற்றுள், அங்குள்ள கோதண்டராமர் கோயில், மிகவும் குறிப்பிடத்தக்க சிறப்புடையதாகும். கோதண்டராமர் கோயிலின் வரலாறும், சிறப்பும் நினைந்துணர்ந்து மகிழத் தக்கவை.

இலங்கையில், இராம தூதுவராகிய ஆஞ்சநேயரின் வீரச் செயல்களால் மனங் கலங்கிய இராவணன், இனி யாது செய்யலாம் என்று மந்திராலோசனை நிகழ்த்தினுன். அப்போது விபீடணன் இராவணனை நோக்கி, ''இசையும் உயர் குலப்பிறப்பும் குன்ற, வசையும் கீழ்மையும் மேற்பட, சுற்றத்தினருடன் முற்றும் அழிந்தொழிந்து போகாமல் இருக்க, நீ விரும்புவாயேயாயின், சீதையை இராமன்பால் ஒப்படைத்து விடுவதே முறைமையாகும் என்று எத்துணையோ பல நீதி மொழிகளை எடுத்துக் கூறித் திருத்த முயன்ருன். அது கேட்ட இராவணன் மிகவும் சினந்து, ''நீ இனி என் கண்ணெதிரில் நிற்காதே! நின்ருல் இறந்தொழிவாய்'' என்று கடிந்து பழித்துரைத்தான். அதனுல் விபீடணன் தமையனின் அழிவிற்காக மிகவும் மனம் நொந்தும், வேறு வழியின்றியும், அனலன், அனிலன், அரன், சம்பாதி என்னும் துணைவர்கள் நால்வருடன், இலங்கையை விட்டு நீங்கினுன்.

''எல்லையில் பெருங்குணத்து இராமன் தாளிணை
புல்லுதும்; புல்லி இப்பிறவி போக்குவோம்''

என்று துணிந்து, இராமனைச் சென்று கண்டு அடைக்கலம் புகப் புறப்பட்டான். இராமபிரான் இலங்கைக்கு வட திசையில், கடற் கரையருகில்,

''தருமமும் ஞானமும் தவமும் வேலியாய்,
மருவரும் பெருமையும் பொறையும் வாயிலாய்க்
கருணையங் கோயிலுள் கனிவுற இருந்தான்''.

அந்நிலையில், விபீடணன், ''எந்தையே இராகவ சரணம்'' என்று கூவிப் பணிந்து தூரத்தில் நின்ருன். அதுகேட்ட இராமன் தன் அருகிருந்த வானரச் சேனையின் தலைவர்களை நோக்கி, இவன் நம்மால் ஏற்றுக் கைக்கொள்ளத் தக்கவனே? அல்லது போக்கிக் கைவிடுதற்கு உரியவனே? என்று வினவினுன். அப்போது சுக்கிரீவன், ஜாம்பவான், நீலன் முதலியோர், அரக்கனும் இராவணனின் தம்பியுமாகிய இவனை நம்பி ஏற்றுக் கொள்ளுதல் குற்றமாகும் என்று வற்புறுத்திக் கூறினர். அவைகளைக் கேட்ட இராமபிரான், அனுமனை நோக்கி நின் கருத்து யாது என வினவினுன். அதற்கு அனுமன், ''விபீடணனுகிய இவனைத் தீயவன் என்று யான் சிறிதும் ஐயுறவில்லை. இலங்கையில் இராவணன் என்னைப் பிடித்துக் கொல்லுமாறு ஏவலர்களை நோக்கிக் கூறியபொழுது, இவன் ஒருவனே எனக்கு அவர்கள் ஊறுயாதும் செய்தல் ஆகாது என்று தடுத்துரைத்தான்; மற்றும்

''மாதரைக் கோறலும், மறத்து நீங்கிய
ஆதரைக் கோறலும், அழிவு செய்யினும்
தூதரைக் கோறலும் தூய்தன்ரும்—என
ஏதுவிற் சிறந்தன எடுத்துக் காட்டினுன்.''

மேலும், இவன் அரக்கர் குலத்திற் பிறந்திருப்பினும், அரக்கர்களுக்குரிய கொடிய குணங்கள் எதுவும் இல்லாதவன். இரக்கம் மிக்க இனிய குணம் வாய்ந்தவன். இவனது இல்லம் பிற அரக்கர்களின் இல்லங்கள்போல் கள்ளும் ஊனும் காணப்பெருமல், தானமும் தருமமும் வந்தனை நீதியும் பிறவும் மாண்பமைந்து, அந்தணர்களின் இல்லம் போல அழகுற்றுப் பொலிந்து திகழ்ந்தது. இவன் மிகவும் நல்லவன். இவனை நாம் நம்பி ஏற்றுக் கொள்ளுதல் நலமேயாகும். ''இவன் வரவு நல்வரவே'' என்று இராமனுக்கு அநுமன் இனிதெடுத்து மொழிந்தான்.

மாருதியின் வினய வார்த்தையைச் செவிமடுத்த இராமன், அதனை அமிழ்தம் போல மாந்தி மகிழ்ந்தான். ''பேரறிவாளனே! நன்று, நன்று நின் உரை' எனப் புகன்ருன். நமக்கு வெற்றியே எய்துக! அல்லது நாம் தோல்வியே அடைக! நாம் இறந்தொழிக! அல்லது இறவாமல் நெடுநாள் வாழ்க! அடைக்கலமாக வந்து அடைந்தவனை ஏற்றுக் கொள்ளாமல் கைவிடுதல்கூடுமோ? அபயம் என்று அடைந்தவனின் உயிரைத் தன் உயிர்போலக் கருதிக் காப்பாற்ருத கயவனும்; ஒருவன் செய்த உதவியை மறந்த நன்றியில்லாதவனும், வேதம் கூறும் உண்மைகளைப் பழிப்பவனும், மீளா நரகில் வீழ்ந்து வருந்துவார்கள்.

''வெற்றியே பெறுக! தோற்க! வீக! வீயாதுவாழ்க!
பற்றுதல் அன்றி உண்டோ? அடைக்கலம் பகர்கின்
றானை!''

''உய்யநிற்கு அபயம் என்றான் உயிரைத்தன் உயி
ரின் ஓம்பாக்
கையனும்; ஒருவன் செய்க உதவியிற் கருத்திலோ
னும்,
மையற நெறியின் நோக்கி மாமறை நெறியில் நின்ற
மெய்யினைப் பொய் யென்றானும்; மீள்கிலா நரகில்,
வீழ்வார்''

ஆதலால், அபயம் என்றபொழுதே அபய தானம் கொடுப்பதுதான், நம்முடைய கடப்பாடு என்று வானர சேனைகளுக்கு எல்லாம் எடுத்துக் கூறினான். பின்னர், சுக்கிரீவனை நோக்கி, ''நீ சென்று விபீடணனை இங்கு அழைத்து வருக!'' என்று இராமபிரான் பணித்தார்.

அதன்படி சுக்கிரீவன் தூரத்தே பணிந்து நின்று கொண்டிருந்த விபீடணன்பாற் சென்றான். மயிந்தன் என்னும் வானர வீரனின் தம்பியாகிய துவிவிதன் என்பவன், அச் சுக்கிரீவனை விபீடணனுக்குச் சுட்டிக்காட்டி, ''வானர வேந்தனாகிய சுக்கிரீவன் இராமனின் கட்டளைப்படி, உன்னை அழைத்துச் செல்ல வருகின்றான்'' என்று அறிமுகம் செய்தான். அவ்வளவில் சுக்கிரீவனும், விபீடணனும் ஒருவரையொருவர் அன்புடன் தழுவி நண்பு பாராட்டி மகிழ்ந்தனர்.

''தொல்பெரும் காலம் எல்லாம் பழகினும் தூயர்
அல்லார்
புல்லலர்; உள்ளம் தூயார் பொருந்துவர் எதிர்ந்த
ஞான்றே;
ஒல்லைவந்து, உணர்வும் ஒன்ற இருவரும் ஒருநாள்
உற்ற
எல்லியும் பகலும் போலத் தழுவினர் எழுவின்
தோளார்''

இங்ஙனம் ஒருவரை யொருவர் அன்புடன் தழுவி மகிழ்ந்த பின்னர், இராமபிரான் விபீடணனைத் தன்பால் ஏற்று அழைத்து வரப் பணித்த செய்தியைச் சுக்கிரீவன் விபீடணனுக்குக் கூறினான். அது கேட்ட விபீடணன், சீதையைக் கவர்ந்து சென்ற இராவணனின் தம்பியாகிய என்னையும், இராமபிரான் வருக என்று ஏற்று அருள் செய்தானே? என்னையும் தன் அடைக்கலப் பொருளாக ஏற்றுக் கொள்ளத் திருவுளம் பற்றினானே? கொடியதாகிய ஆலாலம் என்னும் நஞ்சினையும் சிவபெருமான் விரும்பி உண்டாற்போல, மிகவும் இழிந்த என்னையும் இராமபிரான் ஏற்றுக்கொள்ள இசைந்தனனே? தீயவர்கள் எவ்வளவு தீங்கு செய்த போதினும், பேரருளாளர்கள் தம் செய்கையால் பிழை புரிய மாட்டார்கள். திருப்பாற் கடலானது மந்திர மலையைநாட்டித் தன்னை நெருப்பெழக் கலக்கினாலும், தேவர்களுக்கு அமிழ்தத்தையே அளித்தது.

''பஞ்செனச் சிவக்கும் மென்கால் தேவியைப்
பிரித்த பாவி
வஞ்சனுக்கு இளைய என்னை வருக என்று அருள்
செய் தானோ?
தஞ்செனக் கருதி னானோ? தாழ்சடைக் கடவுள்
உண்ட
நஞ்செனத் தகையன் அன்றோ? நாயகன் அருளில்
நாயேன்?''

''தீர்வரும் இன்னல் தம்மைச் செய்யினும், செய்ய
சிந்தைப்
பேரரு ளாளர் தத்தம் செய்கையில் பிழைப்ப
துண்டோ?
கார்வரை நிறுவித் தன்னைக் கனலெழக் கலக்கக்
கண்டும்,
ஆர் கலி அமரர் உய்ய அமிழ்ந்து பண்டு அளித்த
தன்றே!''

அதுபோல இராமபிரான் என்னை ஏற்றுக் கொண்டு அருளினன் போலும்; என்று சொல்லிப் பெரிதும் வியப்பும் விம்மிதமும் உவகையும் அடைந்தான். சுக்கிரீவன் விபீடணனை இராமன் பால் அழைத்துச் சென்று விடுத்தான்.

இராமபிரானிடம் சென்ற விபீடணன், இனி நம் பிறவி அழிந்தது என்று எண்ணி அடைந்த அகமகிழ்ச்சி முகத்திற் பொலியவும், மகிழ்ச்சிக் கண்ணீர் பெருகவும், நிலத்தில் மார்பு படியும்படி விழுந்து வணங்கி நின்றான். இராமபிரான் விபீடணனை நோக்கி மகிழ்ந்து அருள் சுரந்து, ''பதினான்கு உலகங்களும்'' என்னுடைய பெயரும் எவ்வளவு காலம்நிலைத்து நிற்குமோ, அது வரையில் இலங்கைச் செல்வம் முழுவதையும், உனக்கே யான் அளித்துவிட்டேன்'' என்று இன்மொழி இயம்பினான்.

''ஆழியான் அவனைநோக்கி அருள்சுரந்து உவகை
கூர்ந்தே
ஏழினோடு ஏழாய் நின்ற உலகம், என் பெயரும்,
எந்நாள்
வாழ்நாள் அன்று காறும் வாளெயிற்று அரக்கர்
வைகும்
தாழ்கடல் இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன்
என்றான்''

விபீடணனே! அயோத்தியில் இராமன் பரதன் இலக்குவன் சத்துருக்கன் என்னும் நாங்கள் நால்வர் மட்டும் சகோதரர்களாக இருந்து வந்தோம். நாட்டை விட்டுக் காட்டுக்கு வந்ததில் குகனுடன் ஐவர் ஆனோம். கிஷ்கிந்தையில் சுக்கிரீவனைச் சந்தித்தபோது அறுவர் ஆனோம். இப்போது எம்மிடம் அன்புடன் போந்துள்ள உன்னைச் சேர்த்து நாம் சகோதரர்கள் எழுவ ராகிவிட்டோம். உன்னுடைய தந்தையாகிய தசரதர் எனக்குக் காட்டைக் கொடுத்து, அதன் பயனாகப் பல புதல்வர்களை அடைந்து சிறப்புற்று விட்டார்.

''குகனொடும் ஐவர் ஆனோம், முன்பு! பின் குன்று
சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனோம்! எம்முழைஅன்பின்
வந்த
அகனமர் காதல் ஐய! நின்னொடும் எழுவரானோம்!
புகலரும் கானம் தந்து, புதல்வராற் பொலிந்தான்
நுந்தை''

என்று விபீடணனுக்கு, இராமபிரான் பலஇனிய மொழிகளை இயம்பிச் சிறப்புச் செய்தான். இவ்வாறு இராமபிரான் விபீடணனை நண்பனாகவும், சகோதரனாகவும் ஏற்றுக் கொண்டு,

அடைக்கலம் அளித்த சிறப்பினைக் கண்டு, யாவரும் மகிழ்ந்தனர். தேவர்கள் வாழ்த்திப் பூ மழை பொழிந்தனர்.

''இருவரும் உவகை கூர்ந்தார்! யாவரும் இன்ப முற்றார்
பொருவரும் அமரர் வாழ்த்திப் பூமழை பொழிவ தானார்!''

இவ்வாறு இராமபிரான் விபீடணனை அன்புடன் ஏற்றுக்கொண்டு, அடைக்கலம் அளித்தருளிய இடம்தான், இன்று இராமேசுவரத்தில் கோதண்டராமர் கோயிலாக அமைந்துள்ளது. இவ்விடத்தில்தான் இராமபிரான் வானர சேனைகளுடன் இலங்கைக்குச் செல்லும் முன் தங்கியிருந்தார். இங்குதான் இராமனுடன், இலக்குவன், சுக்கிரீவன், அனுமன் சாம்பவன், நீலன் முதலியோர் தங்கியிருந்தனர். இவ்விடத்தில் தான் விபீடணன், தன் துணைவர்களாகிய அனலன், அனிலன், அரன், சம்பாதி என்னும் நால்வருடன், இலங்கையினின்றும் வந்து இராமபிரானிடம் அடைக்கலம் (சரணாகதி) புகுந்தான். இவ்விடத்தில்தான் இராமபிரான் விபீடணனை நோக்கித்

''தாழ்கடல் இலங்கைச் செல்வம்
நின்னதே, தந்தேன்''

என்றான்.

இத்தகைய புனிதமான நல்லிடத்தில் அமைந்த இராமேசுவரம் அருள்மிகு கோதண்டராமர் கோயில், அண்மையில் இயற்கையின் சீற்றத்துக்குள்ளாகிப் பழுதுற்றது. ஒரு சில தீயவர்களாலும் சிலை முதலியன களவு நிகழ்த்தி இடித்துச் சிதைக்கப்பெற்றது. அங்ஙனம் சிதைவுற்ற இப்புனிதக் கோயிலை, கல்கத்தா நகரத்தைச் சேர்ந்த வங்கூர் அறக்கட்டளையினர், அரும்பாடுபட்டும், பெரும்பொருள் செலவழித்தும், மிகவும் சிறந்த முறையில் திருப்பணி செய்து புதுச் சிலைகள் வடித்து அமைத்து 12—5—78 அன்று, திருப்பணி நிறைவு விழாவும், சிறப்புற நிகழ்த்த உள்ளனர்.

இச்செய்தி இந்தியா முழுவதிலுமுள்ள இராம பக்தர்கள் அனைவருக்கும் மிக்க மகிழ்ச்சி அளிக்கும் இணையற்ற நற்செய்தியாகும். வங்கூர் அறக்கட்டளையினருக்கு நாம் அனைவரும் மிகவும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். அவர்களின் முயற்சியால் நடைபெறும் அருள்மிகு கோதண்டராமர் கோயில் கும்பாபிஷேகம் நன்கினிது சிறப்பாக நடைபெறவும், அருள்மிகு கோதண்டராமரின் திருவருளால் உலகமனைத்தும் நலம் பெற்று இன்புற்று வாழவும், அன்புடன் நாம் பிரார்த்திப்போமாக.

## சம்பந்தர் துதிப்பாடல்கள்

ஆறதே றுஞ்சடையான் யான்அருள் மேவ அவனியர்க்கு
வீறதே றும்தமி ழால்வழி கண்டவன்; மென்கிளிமாந்
தேறல் கோதித் தூறு சண்பகம் தாவிச் செழுங்கமுகின்
தாறதே றும்பொழிற் சண்பையர் காவலன் சம்பந்தனே!

வாட்டுவர் தத்தம் துயரைவன் கேழலின் பின்புசென்ற
வேட்டுவர் கோலத்து வேதத் தலைவனை மெல்விரலால்
தோட்டியல் காதன் இவன் என்றுதன் தாதைக்குச் சூழ்விசும்பில்
காட்டிய கன்றின் கழற்றிறம் ஆனவை கற்றவரே!

பாடிய செந்தமி ழாற்பழங் காசு பரிசில் பெற்ற
நீடிய சீர்த்திரு ஞானசம் பந்தன், நிறைபுகழான்
நேடிய பூந்திரு நாவுக் கரசோடு, எழில்மிழலைக்
கூடிய கூட்டத்தினுல் உளதாய்த்து இக் குவலயமே!

—நம்பியாண்டார் நம்பிகள்.

# செங்கற்பட்டு மாவட்டக் கோயில்கள் பற்றிய குறிப்புகள்

[ந. ரா. முருகவேள், M.A., M.O.L.] (முற்றொடர்ச்சி)

## 16) கரூர் :

இது காஞ்சிபுரத்திலிருந்து 6 கல் தொலைவில் உள்ளது. உந்து வசதிகள் உள்ளன. இங்கு வேணுகோபால சுவாமி கோயில், விக்னேசுவரர் கோயில், குத்தாலம்மன் கோயில் என்ற மூன்று கோயில்கள் உள்ளன. இவைகள் நூறு ஆண்டுகளுக்கு முன்பு உள்ளூர் மக்களால் கட்டப்பட்டன. இவற்றிற்கு முறையே 50, 60, 40 ஆண்டுகளின் முன்பு கும்பாபிஷேகம் நடைபெற்றது. இவற்றின் நிலப்பரப்பு முறையே 192, 77, 168 சதுர அடிகளாகும். வேணுகோபால சுவாமி கோயிலில் விக்மரகங்கள் எதுவும் இல்லை. வெறும் படம் கிட்டுமே உள்ளது. விக்னேசுவரர் குத்தாலம்மன் சிலைகள் அமர்ந்த நிலையில் உள்ளன. இவற்றிற்கு முறையே நாயக்கர், பண்டாரம், பூசாரி ஆகியோர் பூசை செய்து வருகின்றனர். பரம்பரை உரிமையுள்ள நாயக்கர் ஒருவர் வேணுகோபால சுவாமி கோயிலில் பூசை செய்கின்றார். அவருக்கு மாத ஊதியம் ரூ. 20. மற்ற இருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு ஒரு வண்டி நெல் தரப்பெறுகின்றது. இக்கோயில்களின் நிலங்கள் மூலம், ரூ. 300 மட்டுமே ஆண்டு ஒன்றுக்குக் கிடைத்து வருகின்றது. பெருமாள் கோயிலில் கிருஷ்ண ஜெயந்தி சீராமநவமி வைகுண்ட ஏகாதசி, புரட்டாசிச் சனிக்கிழமைகள் ஆகியவை கொண்டாடப் பெறுகின்றன. விக்னேசுவரர் கோயிலில் விநாயக சதுர்த்தி, ஆருத்திரா, சிவராத்திரி ஆகியவை நடைபெறுகின்றன. அம்மன் கோயிலில் ஆடி விழா ஐந்து நாட்கள் நடைபெறுகின்றது. இரண்டு நியமன அறங்காவலர்கள், இந்த மூன்று கோயில்களையும் நிர்வகித்து வருகின்றனர்.

## 17) விஷாரம் :

காஞ்சிபுரத்திலிருந்து 5 கல் தொலைவில் உள்ளது. இங்குள்ள பீமேசுவரர் கோயில் தோன்றிய காலம் தெரியவில்லை. கோயிலில் கிரந்தக் கல்வெட்டுக்கள் உள்ளன. கோயிலின் பரப்பு அரை ஏக்கர். கோயிலுக்கு 10 ஏக்கர் நிலங்கள் உள்ளன. ரூ. 700 ஆண்டு வருவாயாகக் கிடைக்கிறது. விழாக்கள் எதுவும் நடைபெறுவதில்லை. இரண்டு நியமன அறங்காவலர்கள் உள்ளனர்.

## 18) மருதம் :

இது காஞ்சிபுரத்திலிருந்து 7 கல் தொலைவில் உள்ளது. இங்குப் பெருமாள் ஈசுவரர் கோயில், காளியம்மன் கோயில் என்று இரண்டு கோயில்கள் உள்ளன. உள்ளூர் மக்களால் இவைகள் சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டன. இவற்றின் பரப்பு முறையே, 80, 150 சதுர அடிகளாகும். காளியம்மன் திருவுருவம் நின்ற நிலையில் உள்ளது. இவற்றிற்கு முறையே ஒரு குருக்களும் ஒரு பண்டாரமும் பூசை செய்து வருகின்றனர். குருக்கள் ஆண்டு ஒன்றுக்கு ஒன்றரை வண்டி நெல் பெற்று வருகின்றார். பண்டாரத்திற்கு நில மானியம் அளிக்கப் பெற்றுள்ளது. ஈசுவரன் கோயிலுக்கு 2.66 ஏக்கர் நன்செய் நிலங்கள் உள்ளன. அதன் மூலம் இரண்டு வண்டி நெல் கிடைக்கின்றது. காளியம்மன் கோயிலுக்குச் சங்கம சொத்துக்கள் மூலம் ரூ. 250 வருவாய் வருகின்றது. சிவன் கோயிலில் சிறப்பு அபிஷேகங்கள் தவிர, விழா எதுவும் நடைபெறுவதில்லை. அம்மன் கோயிலில் நவராத்திரி விழாவும் வீதிவலமும் நடைபெறும். ஒரு நியமன அறங்காவலர் உள்ளார்.

## 19) திருவெண்காரணை :

இது வாலாஜாபாத் நிலையத்திலிருந்து, 8 கல் தொலைவில் உள்ளது. காஞ்சிபுரம்-சென்னைச் சாலையில் உள்ளது, தென்னேரி ஐமச்சேரி ஆகிய இடங்களுக்கு, 2 கல் தொலைவில் இவ்வூர் உள்ளது. இங்கேயுள்ள பட்டாபிராம சுவாமி கோயில், 300 ஆண்டுகளுக்குமுற்பட்டது. கோயிலின் பரப்பு 680 சதுர அடி. அண்மையில் சில திருப்பணிகள் செய்யப் பெற்றுள்ளன. இங்கு உள்ள மண்டபத்தின் தூண்களில் உள்ள சிற்பங்கள் அழகுற அமைந்துள்ளன. இராமர் சீதை பூதேவி இலட்சுமணர் ஆகிய திருவுருவங்கள் இங்கு உள்ளன. காலையில் தினமும் பூசை நிகழ்கிறது. மாலையில் விளக்குகள் மட்டும் ஏற்றப்படுகின்றன. இதன் ஆண்டு வருவாய் ரூ. 1,500. சீராம நவமி சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இரண்டு அறங்காவலர்கள் உள்ளனர்.

## 20) குன்றப்பாக்கம் :

இது வாலாஜாபாத்திலிருந்து 8 கல் தொலைவில் உள்ளது. இங்குள்ள ஆதிநாராயணப் பெருமாள் கோயில், 200 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. கோயிலின் பரப்பு 3,000 சதுர அடி. பரம்பரையல்லாத பட்டாசாரியர் மாத ஊதியம் பெற்று, இரு வேளை பூசை செய்து வருகின்றார். ஒன்பதரை ஏக்கர் நன்செய் நிலம் உள்ளது. அதன் ஆண்டு வரு

வாய் ரூ. 1,800. சித்திரா பௌர்ணமி விழா நடைபெறுகிறது. அறநிலையத் துறையின் கண்காணிப்பில் இக்கோயில் இருந்து வருகின்றது.

## 21) அகரம் :

வாலாஜாபாத்திலிருந்து 6 கல் தொலைவு. இவ்வூரில் தென்கலை வைணவப் பிராமணர்களால் கட்டப் பெற்ற சீநிவாசப் பெருமாள் கோயில், சுமார் 80 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப் பெற்றது. கோயிலின் பரப்பு 15 சென்ட். ஒரு வேளை பூசை நடைபெறுகிறது. ரூ. 3,000 மதிப்புள்ள நகைகளும், ரூ. 600 மதிப்புள்ள வெள்ளிப் பாத்திரங்களும், 30.59 ஏக்கர் நிலங்களும் உள்ளன. மூன்று அறங்காவலர்கள் இக்கோயிலை நிர்வகித்து வருகின்றனர்.

## 22) ஊற்றுக்காடு :

வாலாஜாபாத்திலிருந்து 3 கல் தொலைவு. ஊற்றுக்காட்டிலுள்ள எல்லையம்மன் கோயில், மிகவும் பழமையானது. இங்குள்ள அம்மனின் விக்கிரகம், சோழ அரசன் ஒருவனல் ஒரு குளத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டது என்றும், அவனுடைய கனவில் அம்மன் தெரிவித்தபடி கிராமத்தில் கிழக்குத் திசை எல்லையில் கோயில் கட்டப்பட்டது என்றும், ஊர் மக்கள் கூறுகின்றனர். கோயிலின் பரப்பு 20 சென்ட், ஒரு பிராகாரமும் கர்ப்பக் கிரகமும் உள்ளன. நில மானியங்களை அனுபவித்து வரும் பரம்பரைப் பூசாரிகள் நண்பகல் ஒரு வேளை மட்டும் பூசை செய்து வருகின்றனர். பக்தர்கள் தரும் அன்பளிப்பை அவர்கள் பெறுகின்றனர். கோயிலின் ஆண்டு வருவாய் ரூ. 200. உண்டியல் மூலம் ரூ. நூறும், பூசைக் கட்டணத்தின் மூலம் ரூ. இருநூறும் கிடைக்கின்றது. சித்திரையில் பிரம்மோற்சவம் நடைபெறுகின்றது. இரண்டு அறங்காவலர்கள் உள்ளனர்.

## 23) நத்தப்பேட்டை :

சென்னையிலிருந்து செல்லுங்கால், காஞ்சிபுரத்திற்கு முன் உள்ள ஒரு நிலையம் நத்தப்பேட்டை. இங்கு நான்கு கோயில்கள் உள்ளன. அவையாவன : (1) நித்திய கல்யாண அகத்தீசுவரர் கோயில், (2) ஆதி அருளாள விநாயகர் கோயில், (3) இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில், (4) கன்னியம்மன் கோயில் என்பனவாகும். இவற்றுள் அகத்தீசுவரர் கோயில் 510 சதுர அடி. விநாயகர் கோயில் 435 சதுர அடி. பெருமாள் கோயில் 280 சதுர அடி. கன்னியம்மன் கோயில் ஒரு மரத்தடியின் கீழ் உள்ளது. விநாயகர், பெருமாள் திருவுருவங்கள் அமர்ந்த நிலையில் உள்ளன. அம்மனின் திருவுருவம் மார்பளவு மட்டுமே உள்ளது. இந்தநான்கு கோயில்களிலும்பரம்பரையல்லாத குருக்கள் ஒருவர் ஒரு வேளைப் பூசை செய்கின்ருர். அதற்காக அவருக்கு இரண்டு வண்டி நெல் கொடுக்கப்படுகிறது. இந்நான்கு கோயில்களுக்கும் நிலங்கள் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 720 கிடைக்கிறது. விழாக்கள் எதுவும் நடைபெறுவதில்லை. இவற்றிற்குத் தனி அறங்காவலர் ஒருவர் மட்டுமே உள்ளார்.

## 24) செவிலிமேடு :

இது, காஞ்சிபுரத்தின் அருகில், அதன் ஒரு பகுதியாக சுமார் 3 கல் தொலைவில் உள்ளதாகும். இங்குள்ள இலட்சுமி நரசிம்ம சுவாமி கோயில், சோழ அரசன் ஒருவனல் கட்டப்பெற்றது. இதற்குச் சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்பு கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. சுவாமி இலட்சுமி நரசிம்மர், தாயார் சௌந்தரவல்லி. உற்சவமூர்த்தி சௌந்தரிய வரதர். கோயிலின் பரப்பு ஒன்றரை ஏக்கர். மூலவர் அமர்ந்த கோலத்தில் உள்ளார். இராமாநுசர் இக்கோயிலுக்கு வருகை தந்து, மங்களா சாசனம் செய்து பாடியிருப்பதாகக் கூறப்படுகின்றது. பரம்பரைப் பட்டாசாரி ஒருவர் தினமும் ஒரு வேளை பூசை செய்கின்ருர். அவருக்கு நில மானியம் வழங்கப்பட்டுள்ளது. கோயிலுக்கு நிலங்கள் மூலம் 250 மரக்கால் நெல் கிடைக்கின்றது. நவராத்திரி விழா மட்டும் நடைபெறுகிறது. ஒரு நிர்வாக அதிகாரியும், ஓர் அறங்காவலரும் உள்ளனர்.

செவிலி மேட்டிலேயே, செல்வ விநாயகர் கோயில் என்று மற்ருெரு கோயிலும் உள்ளது. இவ் விநாயகர் கோயில் சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்னர் திரு. ஆறுமுக நாயக்கர் முதலிய உள்ளூர் அன்பர்களால் கட்டப்பெற்றது. தினமும் ஒரு வேளை பூசை நடக்கின்றது. பூசகரின் மாத ஊதியம் ரூ. 5. அவர் பரம்பரை உரிமையுடையவர். உண்டியல் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 480 கிடைக்கின்றது. மூன்று அறங்காவலர்கள் உள்ளனர்.

## 25) அய்யங்கார்குளம் :

இது காஞ்சிபுரத்துக்கு 6 கல் தொலைவில் உள்ளது. இங்குள்ள கயிலாசநாதர் கோயில் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னர் செங்குந்த குல மக்களால் கட்டப்பெற்றது. கோயிலில் பரப்பு 50 சென்ட். 1916, 1952 ஆண்டுகளில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. சுவாமி கயிலாசநாதர். அம்பாள் காமகோட்டி. குருக்கள் இரண்டு வேளை பூசை செய்கின்ருர். அவருக்கு மாத ஊதியம் ரூ. 40. ரூ. 1,000 மதிப்புள்ள நகைகள் உள்ளன. 6 ஏக்கர் நன்செய் புன்செய் நிலங்களும், இரண்டு வீடுகளும் உள்ளன. ஆண்டு வருவாய் ரூ. 1,000. எருது வாகனம், மயில் வாகனம், சப்பரம், சூரன், கேடயங்கள் உள்ளன. ஐப்பசியில் கந்தர் சஷ்டியும், கார்த்திகையில் சோம வாரங்களும், மாசியில் வள்ளித் திருமண விழாவும் ஒவ்வோர் ஆண்டும் நடைபெறுகின்றன. நியமன அறங்காவலர் உள்ளனர்.

இங்கேயே சஞ்சீவிராயர் என்னும் ஆஞ்சநேயர் கோயில் ஒன்றும் உள்ளது. இது சுமார் 380 ஆண்டுகளுக்கு முன்னர் தாத்தாச்சாரியர் என்பவரால் கட்டப்பெற்றது. ஆஞ்சநேயர், இராமர், இலக்குவர், சீதைப் பிராட்டியார்

திருவுருவங்கள் உள்ளன. இங்கு ஒன்பது விமானங்களும், பல கல்வெட்டுக்களும் அமைந்துள்ளன. கோயிலின் பரப்பு 2 ஏக்கர். தாத்தாச்சாரியர் என்னும் பக்தர் ஒரு சமயம் குதிரையின் மீது ஏறிக்கொண்டு வெளியூர் சென்று திரும்பி வந்து கொண்டிருந்தார். அப்பொழுது வழியில் சில கொள்ளைக்காரர்கள் அவரை வழி மறித்துச் சூழ்ந்து கொண்டனர். அது போது தாத்தாச்சாரியார் ஆஞ்சநேயரை நினைத்துத் தியானித்தார். அவ்வளவில் கொள்ளைக்காரர்கள் அஞ்சி நடுங்கி ஓடிவிட்டனர். இங்ஙனம் தம்மைக் காப்பாற்றியதன் நினைவாகவே ஆஞ்சநேயர் கோயிலைத் தாத்தாசாரியர் கட்டி வைத்தார் என ஊர் மக்கள் கூறுகின்றனர். மூலவர் நின்ற நிலையில் உள்ளார். பரம்பரை பட்டாச்சாரியர் தினமும் ஒரு வேளை பூசை புரிகின்றார். அவருக்கு 60 ரூ. மாத ஊதியமும், ஆண்டு ஒன்றுக்கு 250 மரக்கால் நெல்லும் தரப்படுகின்றன. ரூ. 4,000க்கு மேல் மதிப்புள்ள நகைகள் உள்ளன. அவற்றில் கற்கள் பதித்த மகர கண்டிகை காதோலை என்பவை குறிப்பிடத் தக்கவை. நன்செய் புன்செய் நிலங்களாக 17.42 ஏக்கர் நிலங்களும், ஒரு கடை, ஒரு வீடு ஆகியவையும் உள்ளன. இவற்றின் ஆண்டு வருவாய் ரூ. 1,000. நடைவாவி விழாவில் தலைக்கட்டணம் 10 பைசா வீதம் ரூ. 200 கிடைக்கின்றது. நாற்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட மரக் குதிரை வாகனம் சப்பரம் ஆகியவை உள்ளன. சீராமநவமி, சித்திரா பௌர்ணமி, தீபாவளி, நவராத்திரி, கிருஷ்ண ஜெயந்தி ஆகியவை ஆண்டுதோறும் நடைபெறுகின்றன. சித்திரா பௌர்ணமி முழுநிலா, நடைவாவி உற்சவம் நடைபெறுகிறது. அப்போது காஞ்சி வரதர் இங்கு எழுந்தருள்கின்றார். இலட்சத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொள்ளுகின்றனர். ஒரு தனி அறங்காவலர் மட்டுமே உள்ளார்.

## 26) அய்யம்பேட்டை :

நத்தப்பேட்டை நிலையத்திலிருந்து இரண்டு கல் தொலைவில், அய்யம்பேட்டை உள்ளது. இங்குள்ள சத்தியம்மன் கோயில் 400 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. கோயிலின் பரப்பு 4 சென்ட். இதற்கு 72 சென்ட் நிலங்கள் உள்ளன. ஆண்டு வருவாய் ரூ. 25. ஒரு வேளை பூசை நடக்கிறது. குருக்களுக்கு மாத ஊதியம் ரூ. 10 வழங்கப்படுகிறது. பழைமையான நகைகள் உள்ளன. அவற்றின் மதிப்பு ரூ. 6,000. உள்ளூர் மக்கள் அவற்றை வழங்கியுள்ளனர். சிங்க வாகனம் மட்டும் உள்ளது. ஆடி மாதத்தில் உற்சவம் நடைபெறுகிறது. இக்கோயில் அறநிலையத் துறையின் ஆட்சியில் உள்ளது.

இங்கேயே கயிலாச நாதர் கோயில், மற்றும் சாந்த வெள்ளியம்மன் கோயில் ஆகியவையும் உள்ளன. கோயிலின் பரப்பு 60 சென்ட். கோயில் 3 பிராகாரங்கள் கொண்டது. மூலவர் சிவலிங்கத் திருமேனி. 30 ரூபா மாத ஊதியத்தில் சிவாசாரியர்கள் இரு வேளை பூசை செய்கின்றனர். சுமார் ரூ. 3,000 மதிப்புள்ள நகைகள் உள்ளன. ஆடி வெள்ளிக் கிழமைகளில் மக்கள் பெருந்திரளாக வருகின்றனர். ஒரு அறங்காவலர் உள்ளார்.

## 27) கொருக்குப்பேட்டை :

இது காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள ஒரு பேட்டை. இங்குள்ள காசி விசுவநாத சுவாமி கோயில், சுமார் 500 ஆண்டுகளுக்கு முற்பட்டது. இக் கோயிலில் சுப்பிரமணியர், வீரவாகு விசாலாட்சியம்மை ஆகிய திருவுருவங்கள் உள்ளன. கோயில் தென் கிழக்கு நோக்கியுள்ளது. இதன் பரப்பு 60 சென்ட், கோபுரம் 22 அடி உயரம். இங்கு மூன்று சந்நிதிகளும் ஒரு பிராகாரமும் உள்ளன. கோபுரம் நான்கு தூண்களால் தாங்கப்படுகிறது. மூலவர் சுயம்பு, ஓர் அடி உயரம். இரண்டு வேளை பூசை. பூசகருக்கு மாத ஊதியம் ரூ. 45. அவருக்குப் பரம்பரை உரிமையில்லை. ரூ. 10,000 மதிப்புள்ள நகைகள் உள்ளன. இவற்றை உள்ளூர் மக்கள் வழங்கியுள்ளனர். வேடல், சின்னையம் பேட்டை கிராமங்களில் இதற்கு 35 ஏக்கர் நிலங்கள் உள்ளன. இவற்றின் வருவாய் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் ரூ. 2,000. எருது வாகனமும், மயில் வாகனமும் உள்ளன. ஆண்டு தோறும் முருகன் அறுநாட் பெருவிழா ஐப்பசி மாதம் நடைபெறுகின்றது. கோயில் அறநிலையத் துறையின் ஆட்சியில் உள்ளது.

## 28) திம்மையன்பேட்டை :

இது காஞ்சிபுரத்திலிருந்து ஐந்து கல் தொலைவில், சென்னை-காஞ்சிபுரம் சாலையில் வாலாஜாபாத்துக்கு அருகில் உள்ளது. இங்கு விசாலாட்சி யம்மை உடனுறை காசி விசுவநாதர் கோயில், இராதா உருக்குமிணி உடனுறை வேணுகோபால சுவாமி கோயில், மற்றும் இரண்டு விநாயகர் கோயில்கள் உள்ளன. விசுவநாதர் கோயிலின் பரப்பு எட்டு சென்ட். வேணுகோபால சுவாமி கோயிலின் பரப்பு மூன்று சென்ட். விநாயகர் கோயில்கள் இரண்டும் தனித் தனியே ஒன்றரை சென்ட் பரப்பு உடையன. விசுவநாதர் கோயிலில் மட்டுமே கோபுரம் உள்ளது. பெருமாள் கோயிலில், மூலவர் நின்ற கோலத்தில் உள்ளார். பிள்ளையார் கோயில்களில் விநாயகர் அமர்ந்த நிலையில் இருக்கின்றார். விசுவநாதர், விநாயகர் கோயில்களுக்குக் குருக்கள் இரண்டு வேளை பூசை செய்கின்றார். பெருமாள் கோயிலுக்குப் பட்டாச்சாரியார் ஒரு வேளை பூசை புரிகின்றார். குருக்களுக்கு மாத ஊதியம் ரூ. 17ம், ஆண்டு ஒன்றுக்கு 54 மரக்கால் நெல்லும் தரப்படுகின்றன. பட்டாச்சாரியரின் மாத ஊதியம் ரூ. 12. ஆண்டு ஒன்றுக்கு 632 மரக்கால் நெல் கிடைக்கின்றது. விநாயக சதுர்த்தியும், வைகுண்ட ஏகாதசியும் கொண்டாடப் படுகின்றன. மூன்று அறங்காவலர்கள் உள்ளனர்.

தொடரும்

# நத்தத்தனர் முத்தமிழ் விழா

சங்ககாலம், தமிழகத்தின் பொற்காலம். சங்க கால இலக்கியங்கள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை பதினெண்கீழ்க் கணக்கு எனப்படும். இவற்றுள், பத்துப்பாட்டு என்னும் சங்க இலக்கியங்கள்,

''பத்துப்பாட்டு ஆதிமனம் பற்றினர் பற்றுவரோ?
எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையே''

என்று, மனோன்மணீயம் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்களால் போற்றிப் பாராட்டிச் சிறப்பிக்கப் பெற்றவை. இத்தகைய பத்துப்பாட்டில் ஒன்றாகத் திகழ்வது, சிறுபாணாற்றுப்படை. இதனை இயற்றியவர் நத்தத்தனர் என்னும் சங்க காலப் புலவர். இவர், தொண்டை நாட்டில், மதுராந்தகம் வட்டத்தைச் சேர்ந்த 24 சிற்றூர்களைக் கொண்ட இடைக்கழிநாடு என்னும் பகுதியில், நல்லூர் என்னும் ஊரில் தோன்றியவர்.

நீண்டகாலமாக ஆண்டுதோறும் இங்கு நத்தத்தனர் விழாக் கொண்டாடப்பெறுவது வழக்கம். அதன்படி இவ்வாண்டும் 9—4—78 ஞாயிறன்று, மதுராந்தகம்—குருகுலம் திருக்குறள் பீடாதிபதிகள் அருட்டிரு அழகரடிகளார் அவர்கள் தலைமையிலும், பெருநிலக் கிழார்கள்: அறப்பேரொளி திரு க. முத்து லிங்க ரெட்டியார், பு. ஆதிகேசவலு ரெட்டியார்—இலட்சுமிபதி ரெட்டியார்—திரு என். கிருஷ்ணசாமி ரெட்டியார் முதலிய பெருமக்களின் ஆதரவிலும் முன்னிலையிலும், நத்தத்தனர் முத்தமிழ் விழா, மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

இம் முத்தமிழ் விழாவின் சார்பில், இயலுக்கு அருட்டிரு மறைமலையடிகளார் அவர்களின் மாணவரும், 'திருக்கோயில்' ஆசிரியரும் ஆகிய **திரு ந. ரா. முருகவேள்,** எம்.ஏ., எம்.ஓ.எல். அவர்கள் ''**செந்தமிழ் வேந்தர்**'' என்றும்; இசைக்குத் தேவார இசைமணி சைதை **திரு த. நடராசன்** அவர்கள். ''**நல்லிசைப் பாவலர்**'' என்றும்; நாடகத்திற்குத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றச் செயலாளர் நடிகமணி **திரு டி.வி. நாராயணசாமி** அவர்கள், ''**நடிப்புக் கலைச் செம்மல்**'' என்றும் பட்டங்கள் வழங்கிப் பொன்னாடை போர்த்திச் சிறப்பிக்கப் பெற்றனர்.

நத்தத்தனர் முத்தமிழ் விழாவினையொட்டி, 9—4—78 அன்று காலை முதல் நள்ளிரவு வரையில், சொற்பொழிவுகள்—கருத்தரங்கம்—பட்டிமன்றம்—கவியரங்கம்—நடன நிகழ்ச்சி ஆகியன பலவும் நடத்தப்பெற்றன. அப் பல்வேறு நிகழ்ச்சிகளிலும், திருவாளர்கள் ஒளியகம் ஆடலரசு, நலங்கிள்ளி, எம்.பி.,பி.எஸ்., பி.எ. கோபாலகிருஷ்ணன், பி.எ.,பி.எல்., புலவர் மு. சுந்தரேசன், எம்.எ.,பி.இடி., பி.எ. ஸ்ரீநிவாசன், பி.எஸ்சி, பி.எல்., திருமதி டி.எஸ். பத்மாவதி, எம்.எஸ்சி., எம். இடி., செல்வி க. மைதிலி, புலவர் திருமதி கே. வாசுகி, பி. லிட்., புலவர் திருமதி அரங்கசோதி, பி. லிட்., திருமதி ப. மாணிக்கவல்லி, சிலம்பொலி திரு சு. செல்லப்பன், எம்.எ., தா. பெரியாண்டவன், எம்.எ,, பழ. முத்தப்பன், எம்.எ., புலவர் தாமரைக்கண்ணன், புலவர் நடேச நாராயணன், தலைமையாசிரியர், ம. நாராயணசாமி, பி.எ.,பி.டி., புலவர் ம. அமிர்தலிங்கம், புலவர் வெ. இளந்திரையன், பி.லிட்., பேராசிரியர் திரு. சிவசுப்பிரமணியம், புலவர் திருமதி அந்துவான் பிலோமினாள், கவிஞர் துரை. கோதண்டம், புலவர் கோ. சுப்பிரமணியம், புலவர் மு. சங்கரன், கவிஞர் தொல்காப்பியன், திரு ந. அருளரசு, எம்.காம். முதலிய பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

கருத்தரங்கம் பட்டிமன்றம் கவியரங்கம் ஆகியவற்றிற்குப் பின்னர், ''நல்லிசைப் பாவலர்'' சைதைத் தேவாரம் **திரு த. நடராசன்** அவர்களின் திருநெறிய தமிழிசையரங்கும், சென்னைத் தியாகராய நகர் **இராகினி குழுவினரின்** நாட்டிய நாடக நிகழ்ச்சியும் சிறப்புற நடைபெற்றன. **மாம்பாக்கம் குருகுலம்** ஆண்-பெண் உயர்நிலைப் பள்ளிகளின் மாணவ மாணவியரும், ஆசிரியை-ஆசிரியர்களும், தனிச் செயலர் திரு. சுந்தரமூர்த்தி அவர்களும், இம் முத்தமிழ் விழா சிறப்புற நடைபெறுதற்குப் பல்லாற்றாலும் முன்னின்று பெரிதும் முயன்று உழைத்தனர். அருட்டிரு குருகுலம் **அழகரடிகளார்** அவர்கள் தலைமையில், திரு க. முத்துலிங்கரெட்டியார் அவர்கள், நத்தத்தனர் திருக்கோயில் அமைப்பதற்கு அடிப்படைக் கல் நாட்டும் கால்கோள் விழாவும் சிறப்புற நிகழ்ந்தது. இவ்விழாவின் மூலம் இடைக்கழி நாட்டு மக்கள் அனைவரும், நல்ல தமிழ் உணர்வும் ஆர்வமும் சிறக்கப் பெற்று மகிழ்ந்தமை, குறிப்பிடத் தக்கது.

# கந்தபுராணக் காப்பிய நலம்

''திருக்குறள்மணி''
திரு. க. த. திருநாவுக்கரசு அவர்கள், M.A., M.Litt.,
உலகத் தமிழ்ஆராய்ச்சி நிறுவனம், சென்னை-20.

(முற்றொடர்ச்சி)

**எதிர்நிலைத் தலைவன் :**

கடுமையான தவத்தினால், பெற்ற பெரு வரங்களின் பயனிலே மூழ்கி, 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று வாழ்ந்தவர்கள் அசுரர் கோமானின் குடும்பத்தினராவர். தீவிர மான சிவபக்தி ஒன்றே போதும். அதைக் கொண்டு, எத்தகைய பாவச் செயல்களுக்கும் இறைவனிடம் பாவமன்னிப்புப் பெற்று விட முடியும் என்னும் குருட்டு நம்பிக்கையோடு ஆயிரத்தெட்டு அண்டங்களையும் அசுரர் அல் லோல கல்லோலப்படுத்தினார்கள். அவர்கள் ''ஆய தருமம் அறியார்; பழிக்கஞ்சார்!'' எனப் பழிக்கப்படும் நிலையை அடைந்தனர்; ''நீதி யால் உலகம் அளிப்பதே அரசர்தம் நெறி'' என்பதை மறந்தனர்.

அவர்களுடைய தலைவன் ஆணவத்தின் மொத்தத் திருவுருவாய் விளங்கினான். அதற்கு, அவன் தவத்தினால் பெற்ற பேராற்றலே காரண மாகும். அவனுக்குச் சிவ பெருமான் 'நீங்கள் பெறற்கரிய பெரும் செல்வத்துடன் நூற்றெட்டு யுகம் வாழுங்கள்' என்று வரம் அளித்தார். அதனால், 'யாரும் தன்னை அசைக்க இயலாது' எனும் அகந்தையை அவன் அடைந்தான். அதோடு, ஒரு நாழிகைப் பொழுதில் ஆயிரத் தெட்டு அண்டங்களையும் போய்ப் பார்த்துத் திரும்பவல்ல ஒப்பற்ற இந்திரஞாலத் தேரினை யும் அவரிடம், அவன் பரிசாகப் பெற்றான். என்றும் அழியாத வச்சிர உடலும், தெய்வப் படைக் கலன்களும் பெற்ற அவன், 'ஒருமொழி வைத்து, ஆயிரத்து எட்டு அண்டங்களையும் அரசாளப் புறப்பட்டான். அவனுக்கு வாய்த்த தம்பியரான தாரகனும், அரிமுகனும் அண்ண னுடைய கட்டளைக்காகக் காத்துக் கிடந்தனர். மற்றும் இளமைத் துடிப்பு மிக்க ஆண் சிங்கங் களான அவனுடைய பிள்ளைகள் போருக்குச் சளையாத அசகாய சூரர்களாக விளங்கினர். இத்தகைய சூழ்நிலையில் சூரனின் உள்ளம் ஆண வத்தால் அலைப்புண்டது. 'நானே அரசு! நானே எல்லாம்!' ('L'etat cest moi') எனும் எண்ணம் கொண்ட ஏகாதிபத்தியவாதியாக அவன் மாறினான். அதிகாரம் அவன் கண்களை மறைத்தது; செருக்கு மதியை மயக்கியது; அறம் அவனுடைய உணர்வில் உறைந்து செய லற்றுப் போயிற்று; அவனுடைய பக்தியுள்ளத் திலிருந்த அருளுணர்வு வற்றிப் போயிற்று! இதன் விளைவு—எங்கும் கொடுமை! எதிலும் கொடுமை! தன் வெற்றி மமதையில் அவன் மிதக்கலானான். இதனால்தான், 'தூது வந்தவன் யார்? யாரிடம் இருந்து தூது வந்து இருக் கிறான்? தன்னுடைய வணக்கம் சால் இறைவ னுடைய திருக்குமரனிடம் இருந்து அல்லவா தூதன் வந்திருக்கிறான்' என்பதையும் அவன் எண்ணிப் பார்க்கத் தவறி விட்டான்.

அவன் பையப்பைய செருக்குற்று இறுதி யில் ஆணவத்தின் கொடுமுடிக்கே சென்று விட்டான்.

மேலை யாயிரத்து எட்டெனும் அண்டமும் வென்றே
யேலு கின்றதோர் தனியிறை யாகிய வெனக்குக்
கோல வாலெயிறு இன்னமுந் தோன்றிலாக் குதலைப்
பாலனேகொலாம் இனையன புந்திகள் பகர்வான்
—3 : 12 : 13

என எள்ளி நகையாடலானான். அறத்தைக் கொன்று, அருளை மறந்து, அழிவுப் பாதையை நோக்கி ஆணவ நடை போட்ட அவுணர்கோன், இறுதியில் தன் குலத்தோடு கெட்டு ஒழிந்தான். அவனுடைய ஆணவம் அழிந்தது! அவன் புகழ் மங்கியது! மகேந்திரபுரி மண் மேடாயிற்று!

உலக வரலாற்றில் பதினான்காம் லூயியை யும், இட்லரையும், முசோலினியையும் நாம் காணவில்லையா? இவர்களுடைய முன்னோடி யாக, மூதாதையாக சூரபன்மன், எதேச்சாதி காரத்தின் எல்லைக்குச் சென்று இருக்கும் இடம் தெரியாமல் அழிந்தொழிந்தான். இவனிடம் பேரறிவும் பேராற்றலும் அமைந்திருந்தும், வஞ்சனை உணர்வும், மாயை புரியும் மனப்பான் மையும், தான் எனும் தருக்கும் தலைவிரித்து ஆடின. அவை, அவனை அடியோடு அழித்து விட்டன. வரலாற்றுக் கால இலக்கியங்களில் வரும் எதிர்நிலைத் தலைவர்களிடையே இவ னுக்குத் தனிச் சிறப்பு உண்டு. மற்றவர்கள் எல்லாம் மனிதர்களுக்கு எதிரிகள். ஆனால், அவுணர் கோமான் சூரபன்மனோ தேவர்களுக் கும் தேவர்களின் தலைவர்களுக்கும் பரம வைரி! இவன் வேறு எத்தகைய பாவமும் செய்ய வில்லை! அதிகார போதைக்கு அடிமையானான்! ஆயிரத்து எட்டு அண்டங்களையும் ஆட்டிப் படைத்தான். இவனுடைய கொடுமைக்கு இரையான தேவர்கள் சிந்திய கண்ணீர், குமர னின் வேலாயுதமாக வடிவெடுத்து, சூரனைக் கொன்றது.

**துணைப் பாத்திரங்கள் :**

தலைமைப் பாத்திரங்களுக்குரிய பெருமைக் கும், சிறப்பிற்கும் காரணமாக அமைபவர்கள், துணைப் பாத்திரங்களாவர். துடிப்பு மிக்க, குறிப்பறிந்து பணியாற்றும் மதி நலம் வாய்ந்த, தம் தலைவனுக்காகவே தம் உடல் பொருள் ஆவி அனைத்தையும் தயங்காமல் கொடுக்கத்தயராக

உள்ள மூன்று பெரும் துணைப் பாத்திரங்கள் இக்காப்பியத்தில் காணப்படுகின்றன. அவர்கள் நம் நெஞ்சில் என்றும் நிலைத்து நிற்கத் தக்கவராவர். முருகனின் இளவல், தூதுரைத்த செம்மல், வெற்றி வீரன் வீரவாகு அவர்களுள் முதன்மையிடம் பெறுகிறான்.

அடுத்த நிலையில், அசுரேந்திரனின் தம்பியர் இருவர்—தாரகன், சிங்கமுகன் என்போர் படை பலத்தால், அறிவு நலத்தால், செயல் திறனால், மாபெரும் வீரனின் தம்பியராகச் சிறப்புறும் தகுதி பெற்றவராக விளங்குகின்றனர். தேவாசுரப் போரில் தாரகன் களப்பலியிடப்படுகிறான். ஆயிரம் தலைகள் கொண்ட அரி (சிங்க) முகனோ அண்ணனுக்குத் தேவையான அறவுரைகளை, அறிவுரைகளை எடுத்து உரைத்து, தேவர்களைச் சிறையிலிருந்து விடுதலை செய்யுமாறு வேண்டுகின்றான். அண்ணன், தன் கருத்தை ஏற்காது இகழ்வதைக் கண்டு அவன் மனம் வெதும்புகின்றான். 'அறத்தை மறந்தனனே! அறிவு மழுங்கினனே!' என எண்ணி ஏங்குகின்றான். இறுதியில்,

அலக்கணுற்று இருந்துநாம் இரங்கி யாவதென்
விலக்கரும் விதியை வெல்ல வல்ல மோ
—3:21:164

என நினைத்து, மனத்தைத் தேற்றி, அண்ணனுக்காகப் போர்க் கோலம் பூணுகின்றான். இறுதியில் செஞ்சோற்றுக் கடனைத் தீர்த்து வீர மரணம் அடைகின்றான். இவன் முருகன் முழு முதற் கடவுள் என்பதை நன்குணர்ந்தவன். ஆனால், திருத்த இயலாத அண்ணனுக்காக, உயிர் விடுவதே தனக்குத் தகுதியான செயலாகக் கருதுகிறான். அவன் போர்க்களத்தில் மாண்டதை அறிந்த சூரபன்மன் பேரதிர்ச்சி அடைகிறான். ''பரிதி போல்ஒளிர் ஆயிரம் மவுலியன், அவுணர் நாயகன மாய்ந்தான்?'' எனத் திகைப்புறுகின்றான்.

பொன்னை நிலந்தன்னைப் புதல்வர்களைமங்கையரைப்
பின்னை யுளபொருளை யெல்லாம் பெறலாகும்
என்னை யுடைய இளையோனே! இப்பிறப்பில்
உன்னை இனிப்பெறுவது உண்டோ? உரையாயே!
—4:12:469

பொற்றைக் கயலிருந்த பூட்கைமுகன் துஞ்சியபின்
ஒற்றைப் புயம்போல் உளந்தளர்ந்து வைகினன்யான்
இற்றைப் பகல்நீ இறந்தாய் அரிமுகனே!
மற்றைப் புயமும் இழந்தேன் வறியேனே
—4:12:473

என்று அசுரர்கோன் புலம்புகின்றான். இவ்வாறு புரந்தார்கண் நீர்மல்கச் சாக்காட்டைவரவேற்ற மாவீரன் சிங்கமுகாசுரன், பண்புடை அசுரனாய், அறிவுடை அமைச்சனாய்; தெளிவுடைத் தோன்றலாய், அஞ்சாநெஞ்சம் வாய்ந்த அடலேறனைய படைமறவனாய், கடமையுணர்வு மிக்க குடும்பத் தலைவனாய், இவை யாவற்றையும் விட உடன்பிறப்புப் பாசம் வாய்ந்த இளவலாய், நம் நெஞ்சத்தில் நீங்காத இடத்தைப் பெற்று விடுகிறான் சிங்கமுகாசுரன், இவ்வகையில், இவன் வீடணனை விட உயர்ந்தவன் ; கும்பகருணனைவிடக் கடமையுணர்வு மிக்கவன் எனலாம்.

சூரபன்மனின் சிறப்பு மிகு திருமகன் பானுகோபன். குழவிப் பருவத்திலேயே சூரியனுடைய (பானு) ஒளிக் கதிர், தொட்டிலில் உறங்கும் தன் மீது பட்டமையால் சீற்றமுற்று, கதிரவனைப் பிடித்துக் கொணர்ந்து தன் கோபத்தைப் புலப்படுத்திய பேராற்றல் வாய்ந்தவன் ; மாயப் போர் புரிவதில் வல்லவன். நினைத்ததை முடித்திடும் வினைத் திட்பம் வாய்ந்தவன். அமைச்சியல் படலத்தில், அவனை நாம் சந்திக்கின்றோம். தந்தையின் மனக்கலக்கத்தை மாற்ற முயலுகிறான்.

பொருளல தொன்றினைப் பொருளெனக்கொடு
வெருவுதல் செய்வதும் வினயம் ஓர்கிலாது
ஒருசெயல் விரைந்துசெய்து உயங்கி வீழ்தலும்
பெரியவர் கடமையோ? பேதைத் தன்மையே!
—3:21:72

என உள்ளக் கருத்தை ஒளியாமல் எடுத்துரைக்கின்றான்.

முதல் நாள் போரிலும் மூன்றாம் நாள் போரிலும் வீரவாகு முதலானவரை எதிர்த்துக் கடும் போர் புரிந்து மகேந்திரபுரம் திரும்புகின்றான் வீரம் மிக்க பானுகோபன். இவனுடைய வீர தீரத்தைக் கண்டு விண்ணவர் வியக்கின்றனர். அவனுடைய (ஆண்மைக்கு அவதி (முடிவு) உண்டோ?' *(4 : 3 : 318)* என ஆசிரியர் வினவுகிறார். இத்தகைய மாவீரன், ஐந்தாம் நாள் போரில் வீரவாகுவால் வீழ்த்தப்படுகின்றான். தன்னுடைய இறுதி நாள் போரில், அவன் உரைக்கும் சூளுரை — வஞ்சினம் — அவனுடைய வீறார்ந்த பண்புகளைப் புலப்படுத்துகிறது. 'இன்றைய போரில் பகைவனை வெற்றி கொள்ள வேண்டும் ; அல்லது வீழ்ந்து மடியவேண்டும்! இல்லையென்றால் 'காசால் பொலியும் அகல்அல்குலின் காமம் வெஃகி, வேசாக்கள் பின்செல் வறியானில் விளங்க யானே!' *(4 : 11 : 41)* என்று வஞ்சினம் கூறுகின்றான். இறுதியில், வாள் போரில் வீரவாகுவிடம் தோல்வியுறுகிறான் ; வீரவாகுவை 'வீராதிவீரன்' எனச் சிறப்படையுமாறு செய்கிறான்.

இச் செய்தி அசுரனின் உள்ளத்தில் வேலைப் பாய்ச்சுகிறது! ''என் மைந்தனே! மதகளிறே! தீவினையேனுடைய சிந்தனைக்குத் தெவிட்டாத தெள்ளமுதே! என் தந்தையே! தன் தந்தைக்குத் தந்தையில்லாத பாலகன உன்னைக் கொன்றான்? உன்னை இதற்கோ வளர்த்தேன்? 'பகைவர்களைச் சிறை நீக்கினால் உய்யலாம்' என்று கூறினாய். அதனையும் இகழ்ந்தேன். அதனால் உன்னைத் தோற்றேன் . . . . .அசுர குல நாயகனே! நீ எங்குள்ளாய்? 'நீ இறந்தாய்' என்று கேட்கும் நான் இறவாமல் இன்னும் இருக்கின்றேனே!' எனப் பலவாறு அசுரர் கோமான் புலம்புகிறான். இவற்றால் பானுகோபனுடைய வீர தீரத்தையும் பண்பு நலனையும் நாம் உணர முடிகிறது. செல்வத் திருமகனாய், செருக்கு மிகு இளவரசனாய், பகைவர் கண்டு அஞ்சும் வீராதி வீரனாய் விளங்கியவன், தந்தையின் போலி மானத்தைக் காப்பாற்ற ஏகாதிபத்தியக் கொள்கையை நிலைநாட்டப் போரிலே உயிர் நீத்தான் என்பதைக் காணுகின்றோம். இத் துணைப்பாத்திரங்கள் கச்சியப்பரின் கவி வண்ணத்தால், ஒன்றிய பாத்திரங்களாகக் காப்பியக் கதையினை அணி செய்கின்றனர்.

# சம்பந்தரும், சங்க நூல்களும்

'தமிழ் விரகன்'

**முன்னுரை :**

திருஞான சம்பந்தப் பெருமானுக்குப் பல திறச் சிறப்புக்கள் உண்டு. அவற்றுள் அவர் ''நற்றமிழ் வல்லவர்'' என்பதும் ஒன்று. திருஞான சம்பந்தப் பெருமானே, தம்மை 'நற்றமிழ் வல்லவர்' எனப் பல இடங்களில் குறிப்பிட்டுக் கொள்வதுடன், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் தமது பாடல்களில் அவ்வுண் மையை வழிமொழிந்து கூறி வற்புறுத்தி உணர்த்துகின்றார். நம்பியாண்டார் நம்பிகள் ''ஆறது ஏறும் சடையான் அருள்மேவ அவனி யர்க்கு வீறது ஏறும் தமிழால் வழி கண்டவன்'' எனத் திறம் அறிந்து பாராட்டித் திருஞான சம்பந்தரைப் போற்றித் துதித்துள்ள அருமைப் பாடு, பெரிதும் அறிந்து மகிழ்தற்குரியது.

**நற்றமிழ் :**

ஞான சம்பந்தர் நற்றமிழில் வல்லவர் என்பதனை நன்கினிது உணர்த்தும் நல்ல பல சான்றுகள், அவர்தம் திருப்பாடல்களில் ஆங் காங்கே மலிந்து காணப்படுகின்றன. 'நற்றமிழ்' என்னும் தொடருக்கு, எத்தனையோ பல இயைபுடைய பொருள்களைத் தத்தம் மதி நுட்பத்திற்கு ஏற்ப அறிஞர்கள் இனிதெடுத்து விளக்குதல் கூடும். ஆயினும், 'பல்பொருட்கு ஏற்பின் நல்லது கோடல்' என்னும் தந்திர உத்திபற்றி, 'நற்றமிழ்' என்றது, ஈண்டுச் ''சங்கத் தமிழ்'' மொழியையே குறிப்பிடுவ தாகக் கொள்ளலாம்.

**சம்பந்தரும் சங்கத்தமிழும்:**

ஞான சம்பந்தப் பெருமான், சங்க காலத் தமிழ் மரபை நன்குணர்ந்து பாடுதலில் வல்ல வர். சங்க காலத்தில் வழங்காத பல புதிய பாவினங்களை ஞானசம்பந்தப் பெருமான்தான், முதன்முதற் பாடியருளிப் பெருக வழங்கச் செய்தனர். ஆயினும், அவர் சங்ககாலத் தமிழ் மரபைப் பெரிதும் போற்றியவரேயாவர். ஞான சம்பந்தர்க்குச் சங்க காலச் சான்றோர்கள் மாட்டும், சங்க காலத் தமிழ்ப் பண்பாட்டு மரபுநெறிகளிலும், மிக்க ஈடுபாடு இருந்த தெனத் தெரிகின்றது. தமது பாடல்களை ''ஞானசம்பந்தன் உரை செய் சங்கமலி செந் தமிழ்கள்'' என அவர் சிறந்தெடுத்து உரைத்த லால், இதனைத் தெளியலாம். மேலும், அவர் ''பட்டிமன் தென்னன்'' என்றும், ''அந்தண் மதுரைத் தொகை ஆக்கினன்'' என்றும் அருளி செய்திருத்தலும், ஞானசம்பந்தர்க்குச் சங்கத் தமிழின்பால் இருந்த எல்லையற்ற ஈடுபாடும் பெருமதிப்பும் பற்றி இனிது புலப்படுத்தும்.

ஞானசம்பந்தரின் பாடல்கள், எத்துணை யோ பலப்பல நலங்கள் சான்றவை. அவர்தம் அழகிய இனிய பாடல்களில், ஆங்காங்கே சங்க நூற்சாயல்களும், கருத்துக்களும், மரபுகளும், வழக்காறுகளும் நிறைந்து காணப்பெறுகின் றன. அவ்வொப்புமைப் பகுதிகளைக் கண்டு சுவைத்து மகிழ்வதும், ஞான சம்பந்தரின் பாடல்களை நாம் ஆராய்ந்துணர்ந்து நலம் பெறத்தக்க பலதிற வழிவகைகளுள் ஒன்றாகும்.

திருஞான சம்பந்தர் ''அசைவில் செழுந் தமிழ் வழக்கே அயல்வழக்கின் துறைவெல்ல'' அவதரித்தருளியவர். வேறு பிற எந்தப் பண் டைத் தமிழ்ச் சான்றோரும் குறிப்பிட்டுக் கொள்ள நினையாத நிலையில், தம்மைத் 'தமிழ் ஞானசம்பந்தன்' எனப் பல (45) இடங்களில் முதன்முதலாகக் குறிப்பிட்டுக் கொண்டு, நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பியருளிய நலம் சிறந்தவர் அவர்! ஞானசம்பந்தரை நினைப் போர், நல்ல தமிழையும், நல்ல தமிழை விரும்புவோர் ஞானசம்பந்தரையும் ஒருங்கி யைத்தே நினைவு கூர்வர். தமிழுக்கும் ஞான சம்பந்தருக்கும் அத்துணைச் சிறந்த தொடர்பு உண்டு. தமிழ்மொழியை வளர்த்து வாழ் விக்கத் தோன்றியவர்களுள், தலைசிறந்த ஒருவர் திருஞானசம்பந்தர். தமிழைப் பரப்பி வளர்த் தவர்களின் வரிசையில் ஞானசம்பந்தருக்குத் தனிப்பெரும் சிறப்பிடம் உண்டு. அவரை ஒரு சிறந்த 'தமிழ் வீரர்' என்று, நாம் துதித்துப் போற்றலாம்.

**நல்லிசைக் கவிஞர்:**

ஒரு பெரும் நல்லிசைக் கவிஞரின் கவி தைச் சிறப்பினை நலந்தெரிந்து சுவைத்து மகிழ்தற்குப் பல வழிகள் உண்டு. அவற்றுள், அவர் இயற்கைப் பொருள் நிகழ்ச்சிகளையும், காட்சிகளையும், எங்ஙனம் திறம்படப் புனைந் துரைத்து விளக்கியுள்ளார் எனக் கண்டறி வதும் ஒரு வழியாகும். இயற்கையில் ஈடு பாடும் அதனைப் புனைந்துரைக்கும் ஆர்வமும், கவிஞர்கள்பால் பொதுவாகக் காணப்படும் சிறப்பியல்பாகும்.

''கவிஞரின் கண்ணானது மிகச் சிறந்த தோர் உள்ளெழுச்சியினால், விண்ணிலிருந்து மண்ணையும், மண்ணிலிருந்து விண்ணையும் சுற்றிச் சுழன்று பார்வையிடுகின்றது; காணவும்

கருதவும் இயலாத பொருள்களின் இயல்புகளைக் கவிஞனின் எழுதுகோல், எழில்கனிந்த கலை யோவியங்களாக இனிது வடித்துக் கொடுக் கின்றது; காற்றென நுண்ணியவாய்க் காணப் படாமையின் இல்லனவாய் விளங்குவனவற் றிற்குக் கவிஞனின் கற்பனை உணர்வு, ஓர் உறைவிடமும் பெயரும் அளிக்கின்றது.''

''வல்லதம் விழியின் வீச்சால்
மண்ணொடு விண்ணும் எல்லாம்
ஒல்லையின் அளந்து தேர்ந்து
கற்பனை உணர்வின் மாண்பால்
இல்லது தனையும் ஊர்பேர்
இயைபுறப் படைத்துக் காட்டும்
நல்லியற் கவிஞர் செய்கை
நலமெலாம் நவிலற் பாற்றே!''

—தமிழாக்கம், ஆசிரியர்.

எனச் **செகப்பிரியர்** கவிஞர்களின் இயல்பினை இனிதெடுத்து விளக்குகின்றார். அதனால் கவி ஞர்களின் கவித்திறனுக்கும், இயற்கைப் புனை விற்கும் இடையே மிக்க பெருந்தொடர்பு உண்மை புலப்படும். ஞானசம்பந்தர் ஒப்புயர் வற்ற ஒரு பெரும் நல்லிசைக் கவிஞராதலின், இயற்கைக் காட்சிகளைத் தமது பாடல்களில் எழில் கனிந்த கலையோவியங்களாக வடித்துக் கொடுத்தருளுகின்றார்.

## (1) திருமுதுகுன்றம் :

*(1)* இந்நாளில் 'விருத்தாசலம்' என வழங்கும் தலம், ஞானசம்பந்தர் காலத்தில், 'திருமுதுகுன்றம்' எனப் பெயர் பெற்றிருந்தது. அத்தலத்தைக் குறித்து, ஏழு தேவாரத் திருப் பதிகங்களை ஞானசம்பந்தர் பாடியிருக்கின்றார். தொல்காப்பியர் மலையும் மலைசார்ந்த பகுதி யும் குறிஞ்சித்திணையென்றும், அதற்குரிய தெய்வம் முருகன் என்றும், அத்திணைக்குரிய பண் குறிஞ்சிப் பண் என்றும், பிறவாறும் தமது இலக்கண நூலிற் குறிப்பிட்டிருக்கின்றார். 'சேயான் மேய மைவரை யுலகம்' என்பது தொல்காப்பியம். திருமுதுகுன்றம் பற்றிய தேவாரப் பாடல்களில் அங்கே உள்ள மலைநில மக்களாகிய குறவர்குலப் பெண்கள், தமது குறிஞ்சித் திணைக்குரிய குலதெய்வமாகிய முரு கனைக் குறிஞ்சிப் பண்கொண்டு பாடி மகிழ் கின்றார்கள்.

''கருகுகுழல் மடவார்
கடிகுறிஞ்சி யதுபாடி
முருகன்னது பெருமைபகர்
முதுகுன்று அடைவோமே.''

> "The peot's eye in a fine frenzy rolling,
> Doth glance, from heaven to earth,
> from earth to heaven;
> And as imagination bodies forth
> The form of things unknown, the poet's pen
> Turns them to shapes, and gives to airy nothing
> A local habitation and a name"
>
> —**Shakespeare,**
> A MIDSUMMER NIGHT'S DREAM.

இவ்வரிகளில் 'குறிஞ்சி' என்னும் சொல்லும், அத்திணைக்குரிய 'முருகன்' என்னும் தெய்வத் தின் பெயரும் பயின்று வந்திருத்தல் அறிந்து மகிழ்தற்குரியது.

திருமுதுகுன்றத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான், ஒருகாலத்தில் உறுதிப் பொருள்கள் யாவை என்று தெளிவுறத் தெரி யாமல், சிந்தை கலங்கி வருந்திய சனகர் சனந்தனர் சனாதனர் சனற்குமாரர் என்னும் நான்கு முனிவர்களுக்கும் ஆலமர நிழலின் கண்ணே அமர்ந்திருந்து அறம்பொருள் இன் பம் வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கினை யும் உபதேசித்தருளினான்.

அழிந்தசிந்தை அந்தணாளர்க்கு
அறம்பொருள்இன்பம் வீடு
மொழிந்தவாயான் முக்கண் ஆதி
மேயது முதுகுன்றே

என்னும் தேவாரப் பாடலில் தொல்காப்பிய ரும் திருவள்ளுவரும், விளக்கியருளிய அறம் பொருள் இன்பங்களைப் பற்றிய குறிப்பும், அவற்றின் பயனாகிய வீடுபேற்றின் திறமும் சுட்டப்பெற்றிருத்தல் ஓர்ந்து உணர்ந்து மகி ழற்பாலது.

*(3)* கடவுளுணர்ச்சி என்பது, மக்கள் எல்லோருக்குமே பொதுவாக உரியது. மக்கள் தத்தம் பண்பாட்டின் தரத்திற்கு ஏற்பக் கடவுள் வழிபாடு புரிவர். குறிஞ்சி நிலத்தில் உள்ள கொல்லைப் பகுதிகளில் வாழும் வேடர்கள், திரண்டுகூடித் தங்கள் தெய்வத் திற்கு விழாக் கொண்டாடிக் கும்பிடுகின்றனர். அங்கு அருகேயுள்ள முல்லைக் கொடிகளிற் பூக்கள் மலர்ந்திருத்தல், அவ்வேடர்களின் இனிய செயல்கண்டு மகிழ்ச்சியால் முறுவல் புரிவது போல உள்ளது.

கொல்லை வேடர் கூடி
நின்று கும்பிட
முல்லை அயலே முறுவல்
செய்யும் முதுகுன்றே

எனத் திருஞான சம்பந்தர், இக்காட்சியை எழிலுறப் பாடுகின்றார். சிறந்த இப்பாடலின் கருத்தை நினைப்பிக்கும் வகையில், பின்வரும் குறுந்தொகை வரிகள், அமைந்திருத்தல் காண லாம்.

முல்லைவாழியோ முல்லை; நீநின்
சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை;
நகுவை போலக் காட்டல்
தகுமோ? மற்றிது தமியோர் மாட்டே

—குறுந்தொகை, *162.*

பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை இலங்கெயிறு ஆக
நகுமே தோழி! நறுந்தண் காரே

—குறுந்தொகை, *126.*

### (2) திருக்காளத்தி:

(4) சிவனடியார்களுள் தலைசிறந்தவராகிய கண்ணப்பரோடு தொடர்புடையது திருக்காளத்தி மலை. அதனை இரண்டு திருப்பதிகங்களால் சிறப்பித்துப் பாடியருளியுள்ளார், திருஞானசம்பந்தர். திருக்காளத்தி மலை வேங்கை மரங்கள் நிறைந்தது. வேங்கை மரம் குறிஞ்சித் திணைக்குரியது. பண்டைத் தமிழகத்தில் குறிஞ்சி நில மக்கள் வேங்கை மலரும் பருவத்தினைத் தினையறுக்கும் காலமாகவும், திருமணம் செய்தற்குரிய காலமாகவும் கொண்டிருந்தனர். திருமணத்திற்குரிய காலத்தைக் கணித்துக் கூறும் கணியன் (சோதிடன்) போல, ஒரு வகையில் வேங்கை மரம் பூத்துக் காலத்தை அறிவித்து வந்தமையின், வேங்கை மரத்திற்குக் 'கணி' என்னும் ஒரு காரணப் பெயரும் உண்டு. ''கணியார் கடைக்கணியார் நம்மை நாளைக் கருங்கணியே'' என்னும் பழைய பாடல் ஒன்றில், இச்சொல் அழகுறக் கையாளப் பட்டிருத்தல் காணலாம். வேங்கை மலரும் பருவமே திருமணம் செய்தற்குரிய காலம் எனக் குறிஞ்சி நில மக்கள் கொண்டிருந்தனர் என்பது,

''வேங்கையும் ஒள்ளிணர் விரிந்தன
நெடுவெண் திங்களும் ஊர்கொண் டன்றே'
—அகம், 2.

''வருமோ தோழி நன்மலை நாடன்
வேங்கை விரிவிடம் நோக்கி
வீங்கிறைப் பணைத்தோள் வரைந்தனன்
கொளற்கே''

எனவரும் அகநானூற்றுப் பாடற் பகுதியானும், ''இணர்விரிதலும் ஊர்கோடலும் ஆகிய இரண்டும் மணஞ் செய் காலம் இதுவென உணர்த்துதலாகிய ஒரு பொருள் குறித்து நின்றமையால், அவை ஒருவினைப்பாற்படும் என்பது'' எனப் போதரும் சேனாவரையர் நச்சினார்க்கினியர் உரைகளாலும் தெளியப்படும். இச் சங்க நூற் கருத்தினைத் தழுவி,

''புனவர்புன மயிலனைய மாதரொடு
மைந்தரும் மணம் புணரும் நாள்,
கனகம்என மலர்கள்அணி வேங்கைகள்
நிலவு காளத்தி மலையே''

எனவரும் திருஞானசம்பந்தர் தேவாரப் பாடல் வரிகள் அருளிச் செய்யப் பெற்றுள்ளமை, பெரிதும் சுவை பயக்கின்றன அன்றோ!

(5) குறிஞ்சித் திணைக்குரிய மலைப் பகுதிகளில் பாம்புகள் மிகுதியாக வாழும். பாம்புகளின் நஞ்சே மாணிக்கமாக மாறும் என்றும், அம்மணிகளைப் பாம்புகள் தாம் வேண்டும் பொழுது வெளியே உமிழவும், மீண்டு விழுங்கவும் முடியும் என்றும், இரவுக் காலங்களில் பாம்புகள் மணியை உமிழ்ந்து, அதன் ஒளியால் கண்பார்வை பெற்று இரை தேடி உலாவும் என்றும், சங்க நூல்கள் குறிப்பிடுகின்றன.

இருங்களிறு அட்ட பெருஞ்சின உழுவை
நாம நல்லராக் கதிர்பட உமிழ்ந்த
மேய்மணி விளக்கிற் புலர ஈர்க்கும்
வாள்நடந் தன்ன வழக்கரும் கவலை
—அகநானூறு, 72

நறுந்தாது ஊதும் குறுஞ்சிறைத் தும்பி
பாம்புமிழ் மணியில் தோன்றும்
முந்தூழ் வேலிய மலைகிழ வோற்கே
—குறுந்தொகை, 239.

திருக்காளத்தி மலையின் சிறப்பை விவரிக்குங்கால், திருஞானசம்பந்தர் இச்செய்தியைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

ஊரும் அரவம் ஒளிகொள் மாமணி
உமிழ்ந்தவை உலாவி வரலால்
கார் இருள் கடிந்து கனகம்என
விளங்கு காளத்தி மலையே

### (3) திருக்கேதாரம்:

வட இந்தியாவில் இமயமலைச் சாரற் பகுதியில் அமைந்துள்ள சிறந்ததொரு பெருந் தலம் இது. இத்தலத்தைப் பற்றிய பாடல்களிலும் திருஞானசம்பந்தர் குறிஞ்சித் திணையின் வளங்களைப் பாடியிருக்கின்றார். மலைப் பகுதியைச் சார்ந்த காடுகளில் வேங்கை மரங்கள் நிறைந்திருக்கும். அவற்றின் பூக்கள் பொன்னிறம் உடையனவாய், மலைநிலத்துக் கருங்கற் பாறைகளின் மீது சிதறிக் கிடக்கும் காட்சி, மதயானைகளுக்குப் புலியின் தோற்றத்தையும் நினைவையும் எழுப்பும். அதனால் வெருக் கொண்ட மத யானைகள், வேங்கை மரத்தின் மீது பாய்ந்து மோதிப் பொருதும். இச் செய்தி சங்க நூல்களில் ஆங்காங்கே பல இடங்களிற் குறிப்பிடப் படுகின்றது.

கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையில் தோன்றும் காட்டிடை
எல்லி வருநர் களவிற்கு
நல்லை யல்லை நெடுவெண் நிலவே
—குறுந்தொகை, 47.

ஓங்கல் மிசைய வேங்கை ஒள்வீ
புலிப் பொறி கடுப்பத் தோன்றும்
—அகம், 228.

அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மாத்தகட்டு ஒள்வீ தாய துறுகல்
இரும்புலி வரிப்புறம் கடுக்கும்
—புறம், 202.

குறிஞ்சித் திணையைப் பாடுதலில் வல்லவராகிய கபிலர் என்னும் பெரும்புலவர், யானைகள் வேங்கை மரம் பூத்திருத்தலைக் கண்டு, அதனைப் புலியென நினைந்து மருண்டு, அதன் மீது பாய்ந்து மோதியதனால், அம்மரத்தில் ஆழப் பதிந்து விட்ட தமது தந்தங்களை மீட்டு இழுக்க முடியாமல் அலறிக் கதறிப் பிளிறும் சோகக் காட்சி, செருக்கு மிகுந்து திருக்கயிலை மலையைப் பெயர்த்து எடுக்க முனைந்த இராவணன், அதன் கீழ் அகப்பட்டுக் கொண்டு வருந்தி அழுத காட்சியைப் போன்றிருந்தது, எனக் குறிஞ்சிக் கலியில் ஓர் இடத்திற் பாடியிருக்கின்றார். இன்னோரனைய பல சங்க நூற் கருத்துக்களை நமக்கு நினைப்பிக்கும் வகையில் திருஞானசம்பந்தப் பெருமான், திருக்கேதாரப் பதிகத்தில் பாடியிருக்கும் பின்வரும் வரிகள் அமைந்திருத்தல் அறிந்து இன்புறற்பாலது.

உடைந்த காற்றுக்கு உயர்வேங்கை
பூத்து உதிரக் கல்லறைகள்மேல்
கிடந்த வேங்கைச் சினமா முகம்
செய்யும் கேதாரமே.

7. ஆசிரியர் திருவள்ளுவர், அறிவை அங்குசமாகக் குறிப்பிட்டு, அதனுல் ஐம்பொறிகளை அடக்கி ஆள்பவன் வீட்டுலகத்திற்கு வித்தாகத் திகழ்வான் என்னும் கருத்தமைய அருளிச் செய்த ''உரன் என்னும் தோட்டியான் ஓர் ஐந்தும் காப்பான் வரனென்னும் வைப்பிற்கோர்வித்து'' என்னும் திருக்குறளின் அழகிய கருத்தைத் தழுவி விளக்கும் முறையில்,

தொண்டர் அஞ்சு களிறும் அடக்கிச்
சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யும்
இடம் என்பரால்;
வண்டு பாட மயில் ஆல
மான்கன்று துள்ள வரிக்
கெண்டை பாயச் சுனைநீல
மொட்டலரும் கேதாரமே

என்னும் திருக்கேதாரப் பாடல் அமைந்திருத்தலும், ஈண்டு இயைபுடைமை பற்றி நாம் அறிந்து இன்புறற்பாலது.

8. சங்க நூல்களில் பறவை விலங்கு முதலியன பற்றிய செய்திகள் பலப்பல வரும். பறவைகள் தம்முடைய குஞ்சுகளுக்கு இரை தேடிக் கொணர்ந்து அதனை இன்னருளோடு அவற்றின் வாயிற் பெய்து ஊட்டி மகிழும் அழகிய காட்சி, எவருள்ளத்தையும் மகிழ்விக்கும். இக் காட்சியை வருணிக்கும் முறையில்,

அளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை
இறையுற ஓங்கிய நெறியியல் மராஅத்த
பிள்ளை யுள்வாய்ச் செரீஇய
இரைகொண் டமையின் விரையுமாற் செலவே.
—குறுந்தொகை, 92.

உடங்கிரை தேரும் தடந்தாள் நாரை
ஐய சிறுகட் செங்கடைச் சிறுமீன்
மேக்குயர் சினையின் மீமிசைக் குடம்பைத்
தாய்ப்பயிர் பிள்ளை வாய்ப்படச் சொரியும்
—நற்றிணை, 91

எனப் பல பகுதிகள், சங்க நூல்களில் வரும். பறவைகள் தம் பார்ப்பினங்களுக்கு உணவூட்டி மகிழும் இனிய காட்சியைப் பலகாற் கண்டு மகிழ்ந்து குழந்தையாகிய ஞானசம்பந்தர், அதனைப் பின்வரும் திருக்கேதாரப் பாடல் வரிகளில் அரியதோர் சொல்லோவியமாக அமைத்திருக்கின்ருர்.

பிள்ளை துள்ளிக் கிளைபயில்வ
கேட்டுப் பிரியாது போய்க்
கிள்ளை ஏனற் கதிர் கொணர்ந்து
வாய்ப்பெய்யும் கேதாரமே

## (4) திருக்கற்குடி:

9. திருக்கற்குடி என்பது, திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள சிறந்த ஒரு பெரும் தலமாகும். இது அப்பர் சம்பந்தர் சுந்தரர் என்னும் மூவர் பாடலும் பெற்ற சிறப்புடைய தாகும். இங்குள்ள இறைவனுக்கு விழுமியான், உய்யக் கொண்டான் என்னும் பெயர்கள் வழங்கப்படும். இத்தலத்தைப் பற்றிய பாடல்களிலும் குறிஞ்சித் திணைக்குரிய யானைகளைப் பற்றிய இனிய செய்திகள் பல அமைந்து கிடக்கின்றன.

மக்களிடையே நிகழும் இல்லற வாழ்வு, வன விலங்குகளிடையிலும்கூட ஒரு வகையில் அமைந்து காணப்படுகின்றது. தான் மணந்து கொண்ட மனைவியின் மனம் மகிழும்படி, பல வகை நல்லுணவுப் பொருள்களைத் தேடிக் கொணர்ந்து தருகின்ருன் கணவன். அது போலவே ஆண் யானைகளும், தாம் உண்ணுமல் தமது பிணையாகிய பெண் யானைகளின் வாயில், மூங்கில் நெல்லின் இனிய முளைகளை வாரிக் கொணர்ந்து கொடுக்கின்றனவாம். அத்தகைய அழகிய இயற்கை வளத்தான் மிக்கது கற்குடி மாமலை!

மருங்கு விளியார் பிடிவாயில்
வாழ்வெதிரின் முளைவாரிக்
கருங் களியானை கொடுக்கும்
கற்குடி மாமலை யாரே

என்பது சம்பந்தர் தேவாரம். இங்ஙனம், களிறுகள் பிடிகளுக்குக் கவளம் தேடிக் கொணர்ந்து கொடுத்தலைச் சங்க நூல்களும் பல இடங்களிற் குறிப்பிடுகின்றன.

கயந்தலை மடப்பிடி உயங்குபசி களைஇயர்
பெருங்களிறு தொலைத்த முடத்தாள் ஓமை
—நற்றிணை, 127.

பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பிளக்கும்
அன்பின தோழி, அவர் சென்ற ஆறே
—குறுந்தொகை, 374.

10. குறிஞ்சி நிலத்தில் மூங்கிற் காடுகள் அடர்ந்து ஓங்கி உள்ளன. அங்கு உயர்ந்தோங்கி வளர்ந்துள்ள மூங்கில் மரங்களை, யானைகள் தம் துதிக்கையினுல் தாழப் பற்றி ஈர்க்கின்றன. ஈர்த்து அதன் இலைகளை உண்கின்றன. உண்ட பின்னர், அவற்றைத் தம் கைந்நெகிழ்த்து விடுகின்றன. அதுபோது அம் மூங்கில்கள் மிக்க விசையுடன் உயர்ந்து சென்று மேகங்களை மோதிக், கீறி நிற்கின்றன. ''விட்டகுதிரை விசைப்பின் அன்ன விசும்புதோய் பசுங்கழைக் குன்ற நாடன்'' எனவரும் குறுந்தொகை (174) வரிகளை, நினைக்கச் செய்யும் வகையில்பின்வரும் பாடற் பகுதி அமைந்திருத்தல் காணலாம்.

தாள் அமர் வேய்தலை பற்றித்
தாழ்கரி விட்ட விசைபோய்க்
காளமது ஆர்முகில் கீறும்
கற்குடி மாமலை யாரே.

11. இத்தகைய குறிஞ்சி நில மூங்கிற் காடுகளில் குரங்குகளும் ஏராளமாக வாழ்கின்றன. குரங்குகள் குறும்பு செய்யாமல் வாளா இருக்குமோ? அவைகள் மூங்கிற் கொம்புகளில் பாய்ந்து தாவி ஏறுகின்றன. அவைகள் ஏறுந்

தோறும் மூங்கில்கள் வளர்ந்து தாழ்கின்றன. அவற்றின் மேற் குரங்குகள் நின்றும் நடந்தும் குனிந்தும் ஓடியாடிக் களிநடம் புரிகின்றன.

திருகல் வேய்கள் சிறிதே
வளையச் சிறுமந்தி
முருகின் பணைமேல் இருந்து
நடஞ்செய் முதுகுன்றே

எனத் திருஞானசம்பந்தர் அருளியுள்ள இனிய தேவாரப் பாடல்களை ஓதுங்கால் பின்வரும் சங்கப் பாடல்கள், நம் நினைவுக்கு வராமல் இருத்தல் இயலாது.

சிலம்பின் வெதிரத்துக் கண்விடு கூழை
குரங்கின் வன்பறழ் பாய்ந்தென, இலஞ்சி
மீன்எறி தூண்டிலின் நிவக்கும் நாடன்
உற்றோர் மறவா நோய்தந்து
கண்டோர் தண்டா நலம்கொண் டனனே.

—ஐங்குறுநூறு, 228.

கான யானை கைவிடு பசுங்கழை
மீன்எறி தூண்டிலின் நிவக்கும்

—குறுந்தொகை, 54.

## (5) திருச்சிராப்பள்ளி:

*12.* ஆணும் பெண்ணும் அன்பினுற்கலந்து கூடி வாழ்தல், இயற்கை யமைப்பின் நியதி. இந் நியதி மக்களின் வாழ்க்கையில் மட்டுமே யன்றி, விலங்குகளின் மாட்டும் விளங்கித் தோன்றுகின்றது. திருச்சிராப்பள்ளி மலையில் ஆண் குரங்காகிய கடுவனும், பெண் குரங்காகிய மந்தியும், கணவனும் மனைவியுமாய்க் கூடிக் களித்து வாழ்கின்றன. கூடலுக்கு ஊடல் இன்றியமையாத தொன்றன்றோ? ஆதலின் மந்தி கடுவனோடு ஊடல் கொண்டது. ஊடலினால் தன் கையில் தனது மகவாகிய குட்டியை அணைத்து எடுத்துக் கொண்டது. குட்டியின் பொருட்டாகவாதல் கணவன் தன்னைத் தேடி வந்தே தீர்தல் வேண்டும் என்னும் கருத்தில், அது தன் கணவன் ஆகிய கடுவனை விட்டுப் போய்க் கோபமாகிய ஊடல் கொண்டு, மலை உச்சியில் உள்ள மூங்கிலில் ஏறி, அங்கிருந்து கீழே குதித்து விடுவதற்குத் துணிந்ததுபோல, வரை ஏறிச் செல்லுகின்றது.

கைம்மகவு ஏந்திக் கடுவனோடு
ஊடிக் கழை பாய்வான்
செம்முக மந்தி கருவரை
ஏறும் சிராப்பள்ளி

எனத் திருஞானசம்பந்தர், இக் காட்சியினைப் புனையா ஓவியமாகப் புனைந்து காட்டிப் பாடுகின்றார். இது போன்றதொரு செய்தி, பின் வரும் குறுந்தொகைப் பாடல் ஒன்றில் கூறப் பட்டிருத்தல், ஒப்புநோக்கி யுணர்ந்து மகிழ்தற் குரியது.

கருங்கண் தாக்கலை பெரும்பிறிது உற்றெனக்
கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்
சாரல்நாட! நடுநாள்
வாரல் வாழியோ! வருந்துதும் யாமே.

—குறுந்தொகை, 69.

## (6) திருவண்ணாமலை:

*13.* பிடியும் களிறும் மலைப் பகுதிகளில் உலா வருகின்றன. அப்போது அங்கு ஒரு புலி வருகின்றது. புலியும் களிறும் ஒன்றையொன்று சினந்து மோதிப் பொருகின்றன. அது கண்ட பெண் யானை அஞ்சித் தன் கன்றுகளுடன் வெருண்டு ஓடுகின்றது. புலியைக் கொன்ற களிறு, பின்னர்த் தன் பிடியையும் கன்றுகளையும் காணமல் தேடி அலைகின்றது. தன் குரலொலி காட்டிப் பிளிறி அலறுகின்றது. எங்கும் தேடிக் காணமையால் களைப்படைந்து, தன்னையும் அறியாமலே உறங்கத் தலைப்படுகின்றது. அத்தகைய இயற்கை அமைப்புடையது திருவண்ணமலை எனப் பாடுகின்றார் திருஞானசம் பந்தர்.

பிழைத்த பிடியைக் காணது ஓடிப்
பெருங்கைம் மதவேழம்
அழைத்துத் திரிந்தங்கு உறங்கும் சாரல்
அண்ணா மலையாரே.

இஃது ஒரு வகையில், களிற்றைக் காணமல் பிடியானது அலைந்து தேடி வருந்துவதாகக் கூறும் அகநானூற்றுப் பாடல் வரிகளை ஒத்துக் காணப்படுகின்றது.

வெண்கோட்டு யானை முழக்கிசை வெரீஇக்
கன்றுழித்து ஓடிய புன்றலை மடப்பிடி
கைதலை வைத்த மையல் விதுப்பொடு
கெடுமகப் பெண்டிரில் தேரும்
நெடுமர மருங்கின் மலையிறந் தோரே.

—அகநானூறு, 347.

## (7) திருக்கொடுங்குன்றம்:

*14.* இது பிரான் மலை என இந் நாளில் வழங்குகின்றது. சங்க காலத்திற் புகழ் பெற்று விளங்கிய பாரிவள்ளல் அரசுசெலுத்திய பறம்பு மலை இதுவேயாகும். இத்தலத்துத் திருப்பதிகத்திலும் திருஞானசம்பந்தர், குறிஞ்சித்திணைக் குரிய அரிய செய்தி ஒன்றைக் குறிப்பிடுகின்றார்.

'யாளி' என்பது பண்டொருகால் இருந்து, இஞ்ஞான்று இல்லையாய் மறைந்து போன ஒரு வகை விலங்கு. அவ்விலங்கு யானைகளையும் விடப் பெரியதாய், அவைகளைக் கொல்லவல்ல பேராற்றல் உடையதாக விளங்கியிருந்ததெனத் தெரிகின்றது. யாளிகள் வந்து விடுமோ என்ற அச்சத்தால், அவற்றின் இடமிருந்து தப்பும் பொருட்டு, யானைகள் மலைகளைக் குத்திக் குடைந்து குகைகளை யுண்டாக்கிப் பாதுகாப் பாக இருந்து வருகின்றன.

மத்தக் களிறுஆளி வரவஞ்சி
மலைதன்னைக்
குத்திப் பெருமுழை தன்னிடை
வைகும் கொடுங்குன்றம்

எனவரும் திருஞானசம்பந்தர் தேவாரப் பாடலால், இச்செய்தியை இனிதுணரலாம். இவ் வரிகளின்படி யானைகள் யாளிக்கும் அஞ்சும் இயல்பின என்பது,

மழைவிளை யாடும் கழைவளர் அடுக்கத்து
அணங்குடை யாளி தூக்கலிற் பலவுடன்
கணஞ்சால் வேழம் கதழ்வுற் ருஅங்கு
எந்திரம் சிலைக்கும் துஞ்சாக் கம்பலை.

—பெரும்பாண், 257.

எனவரும் பெரும்பாணாற்றுப் படை வரிகளால் தெளியப்படும். யாளி என்னும் விலங்கு பண்டொருகால் வாழ்ந்திருந்து இன்று இல்லையாய் மறைந்து போயினும், அதனைப் பற்றிய குறிப்பு, திருஞானசம்பந்தர் பாடலில் வந்திருத்தல் நாம் மகிழத் தக்க நற்செய்தியாகும்.

## (8) திருக்கயிலாயம்:

15. விலங்குகளிற் பெரியது யானை. ஆயினும் அதனையும் கூடச் சில சமயங்களில் விழுங்கி விடக் கூடிய பாம்புகள் சில, மலைநிலப் பகுதிகளில் உண்டாம். மிகவும் பெரிய யானையையே விழுங்கி விடக் கூடிய அம்மலைப் பாம்புகள், எத்துணைப் பெரியனவாக இருக்கும் என்பது, நாம் உன்னி உணரற்பாலது.

பரிய களிற்றை அரவு விழுங்கி
மழுங்க இருள்கூர்ந்த
கரிய மிடற்றர் செய்ய மேனிக்
கயிலை மலையாரே

எனத் திருக்கயிலாய மலையில், யானைகளையும் விழுங்க வல்ல மிகப் பெரிய மலைப்பாம்புகள் இருப்பனவாக ஞானசம்பந்தர் நவிலுகின்றார்.

ஞால்வாய்க் களிறு பாந்தட் பட்டெனத்
துஞ்சாத் துயரத்து அஞ்சுபிடிப் பூசல்
நெடுவரை விடரகத்து இயம்பும்
கடுமான் புல்லிய காடிறந் தோரே.


—நற்றிணை, 261.

களிறுஅகப் படுத்த பெருஞ்சின மாசுணம்
வெளிறில் காழ்மரம் பிணித்துநனி மிளிர்க்கும்

—நற்றிணை, 14

## முடிவுரை:

இதுகாறும் திருஞானசம்பந்தர் தேவாரப் பாடல்களில் வரும் சங்கநூற்கருத்துகள் பற்றிய செய்திகளை ஒரு சிறிதுஇயன்றவரைகண்டோம். ''கடல் கண்டோம் என்போர் யாவரே முடிவுறக் கண்டார்'' என்றபடி, இத்தகைய ஆராய்ச்சிகளுக்கும் ஒரு முடிவில்லை. இவைகள் விரிப்பிற் பெருகியும், தொகுப்பின் எஞ்சியும் நிற்கும் இயல்புடையன. ஆதலின் ''இதன் அளவு உண்டுகோள் மதி வல்லோர்க்கே'' என்னும் முறையில், ஒருசில கருத்துக்கள் மட்டுமே இங்குச் சுட்டப் பெற்றன. ஆயினும் இவற்றால் தமக்கு முன்பிறந்த சான்றோர்களை மதித்துப் போற்றிய திருஞானசம்பந்தரின் சிறப்பும், அவர்தம் பாடல்களின் அருமை பெருமைகளும், தமிழ்ப் பெருவீரராகத் திகழ்ந்து நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பித் தொண்டாற்றிய அவர்தம் சான்றாண்மை நலங்களும் இனைய வென்று; நாம் நன்கினிது உணர்தல் கூடும். உணர்ந்து, திருஞானசம்பந்தரைப் போற்றி, அவர்தம் செந்தமிழ்ச் செந்நெறியில் நின்றொழுகிச் சிறப்புடன் வாழ, நாம் இயன்ற வரை முயன்று உயர்வோமாக!



கல்கத்தா வங்கூர் அறக்கட்டளையினரால் திருப்பணி செய்யப்பெற்று, 12-5-78 அன்று சிறப்புறச் சம்ப்ரோட்சணவிழா நிகழ்த்தப்பெற இருப்பதும் ஆகிய இராமேசுவரம் அருள்மிகு கோதண்டராமர் கோயிலின் அழகிய தோற்றம்.

# திருவள்ளுவரின் சிறப்பியற் கொள்கைகள்

[ந. ரா. முருகவேள், M.A., M.O.L.]

முன்னுரை :

திருவள்ளுவர் எல்லாச் சமயங்களும் மக்களும் உடன்படத் தக்க வகையில், தமது திருக்குறளை இயற்றியுள்ளார் எனப் பலரும் பொதுவாகக் குறிப்பிடுவது உண்டு. கிறித்தவர், இசுலாமியர், சமணர், பௌத்தர், சைவர், வைணவர், உலகாயதர் ஆகிய சமயத்தவர் பலரும், தத்தம் சமயக் கொள்கைகளுள் அனைத்தையுமோ அல்லது சிலபலவற்றையோ, திருவள்ளுவர் உடன்பட்டுத் தழுவி ஏற்றுக் கொண்டுள்ளனர் என்று கூறிக் கொண்டு, பெருமிதம் எய்துவது இயல்பாகக் காணப்படுகின்றது. *(1)* இங்ஙனம் திருவள்ளுவர் உடன்படும் கொள்கைகளை மட்டுமே பெரும்பாலும் கூறி மகிழ்கின்ற நாம், அவர் உடன்படாத கொள்கைகள் சிலவற்றைப் பற்றியும், ஒரு சிறிதாதல் கருதியுணர்தல் நலம் பயக்கும்.

காலநிலை :

திருவள்ளுவர் இற்றைக்கு ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டவர் என்பது, இன்று பலரும் ஒப்புக் கொண்டுள்ள செய்தி. ஆதலின் அவர்தம் காலத்தில் கிறித்தவம், இசுலாமியம், சீக்கியம் என்னும் மதங்கள் இருந்தில என்பது தெளிவு. யூதம், பார்சியம், கன்பூசியம் என்பன திருவள்ளுவரின் காலத்திற்குச் சிறிது முற்பட்டனவேயாயினும், அவைகள் அப்போது தமிழ் நாட்டிற்கு வந்தில. இன்று நம்மிடையே பெரிதும் பரவியுள்ள சைவம், வைணவம் முதலிய சமயங்களும், மிகவும் பழமை வாய்ந்தனவேயாயினும், இப்போதுள்ள நிலையில், திருவள்ளுவர் காலத்திற் சிறிதும் இருந்தில. திருள்ளுவர்க்குப் பின்னரே நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றி, இந் நாளில் நிலவும் நிலையில், சைவ வைணவ சமயங்களைப் பல்லாற்றானும் பரப்பி வளர்த்து அருளினர். திருள்ளுவர் காலத்தில் உலகாயதம், வைதிகம், சமணம், பௌத்தம் என்னும் சமயங்கள் மட்டுமே, தமிழகத்திற் பரவியிருந்தன எனத் தெரிகின்றது.

கவிஞன் :

''காலத்தைப் படைப்பவனும் காலத்தாற் படைக்கப்படுபவனும் கவிஞன்'' என்னும் உண்மைக்கு ஏற்ப, இந்நாற் பெருஞ் சமயங்களும் தம்முள் ஒன்றுடன் ஒன்று இகலி நின்று, மக்களிடையிற் பலவகைச் சிக்கல்களை விளைவித்து வந்த நிலையிலேயே, திருவள்ளுவர் ஆகிய ஞான ஞாயிறு தோன்றித், திருக்குறட் செழுங்கதிர்களைப் பரப்பி அறிவொளி வீசி, வாழ்வொழுக்க இன்பம் மலரச் செய்தருளினர் எனலாம். தமது காலத்தில் மக்களிடையிற் பரவி யிருந்த பல பிழைபட்ட கொள்கைகளையும் ஒழுக்கங்களையும் உடன்படாமல், மறுத்துக் கடிந்து திருத்தியருளியவர் திருள்ளுவர். இவ்வடிப் படையில், அவர் உடன்படாத கொள்கைகளுள் சிலவற்றை மட்டும், ஈண்டுச் சுருக்கமாகக் காண்போம்.

(1) அறன் வலியுறுத்தல் :

திருவள்ளுவர் காலத்திலும், அதற்கு முற்பட்டும் இருந்த மக்களுட் பெரும்பாலோர், ''இன்பமே வாழ்க்கையின் முதன்மையான குறிக்கோள்; அதனை எம்முறையாலேனும்அடையலாம்'' என்னும் கொள்கையுடையவராக இருந்தனர் போலும்! பண்டைக் கால மக்களுள் ஒரு சாரார், அறத்தினும் இன்பமே பெரிதும் முதன்மையுடைய தெனக் கருதியிருத்திருத்தல் கூடும் என்பது, ''இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்'' எனவரும் தொல்காப்பிய நூற்பாவாலும் புலனாகின்றது. அதனை உடன்படாமல், அந்நிலையை மாற்றி, அறமே இன்பத்திலும் முதன்மையுடையது என்றும், அறத்தான் வருவதே இன்பம் என்றும் வலியுறுத்திய பெருமை, திருவள்ளுவர்க்கே உரியது. தனி மனித வாழ்வின் நலத்திற்கும், சமுதாய வாழ்வின் நலத்திற்கும்,அறமே முதன்மையுடையது என்று கண்டு, அறத்திற்கு முதலிடம்

---

1. "Humility, Charity and Forgiveness of injuries, being Christian qualities are not described by Aristotle.....Now these three are forcibly inculcated by the Tamil moralist ! These are the themes of his finest verses. So far, then we may call this Tamil poet a Christian".

—Rev. Dr. G. U. Pope

The fact that the Tamil classic Thirukural is claimed by different religious sects indicates its catholicity... Thirukural is used by the Buddhists and the Jains, the Saivites and the Vaishnavites. It is called Podumarai or Common scripture"

—Dr. S. Radhakrishnan.
*Religion and Culture*, P. 27,

அளித்தவர் திருவள்ளுவரேயாவர். ''சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும் அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல'' எனப் புறநானூறு பாடியது, திருவள்ளுவர் நிகழ்த்திய புரட்சியின் விளைவேயாகும். ''வடுவிலா வையத்து மன்னிய மூன்றில் நடுவணது எய்த இருதலையும் எய்தும்'' எனப் பொருளுக்குப் பிறர் அளித்த சிறப்பை உடன்படாமல், ''அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம் புல்லார் புரள விடல்'' எனப் பணித்தருளியவர் திருவள்ளுவரே ஆவர்.

## (2) கடவுளுணர்ச்சி :

அறவாழ்வு அல்லது ஒழுக்கமே அமையும், கடவுளுணர்ச்சியும் வழிபாடும் வேண்டுவதில்லை என்னும் ஒரு கொள்கை, பண்டை நாளில் பொதுவாக யாண்டும் நிலவி வந்தது. சாங்கியம், மீமாஞ்சகம் முதலிய வைதிகக் கொள்கைகளும், சமணம் பௌத்தம் சார்வாகம் முதலிய சமயங்களும், கடவுட் கொள்கை யில்லாதனவாகவே, எங்கும் பரவி வந்தன. அவற்றை உடன்படாமல், அறவாழ்வு அல்லது ஒழுக்கம் நிலை பெறுவதற்குக் கூட, இறையுணர்வும் வழிபாடும் மிக மிக இன்றியமையாதன என்று வற்புறுத்தியவர் திருவள்ளுவரே எனலாம். 'அறவாழி அந்தணன்' என்றும், 'பொறிவாயில் ஐந்தவித்தான் ஒழுக்க நெறி' என்றும் திருவள்ளுவர் குறிப்பிட்டிருத்தல், ஈண்டுக் கருதியுணரற்பாலது. 'கடவுள் வாழ்த்து' என்னும் பகுதியால் மட்டுமேயன்றி, 'உலகு இயற்றியான்' 'வகுத்தான் வகுத்த வகை', 'உலகத்தார் உண்டு என்பது', 'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை' எனவரும் தொடர்களாலும் திருவள்ளுவர் கடவுளுண்மையினை வலியுறுத்தியுள்ளார். திருவள்ளுவர் திருக்குறள் இயற்றிக் கடவுளுண்மையினையும் வழிபாட்டினையும் வற்புறுத்திய பிறகே, தமிழ் நூல்களின் தொடக்கத்தில் கடவுள் வணக்கம் செய்யும் வழக்கம் ஏற்படுவதாயிற்று. திருவள்ளுவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றியே, பாரதம் பாடிய பெருந் தேவனார் என்பவர், சங்கத் தொகை நூல்களின் தொடக்கத்தில், கடவுள் வணக்கப் பாடல்களைப் பிற்காலத்தில் இயற்றிச் சேர்த்து உதவினர் என்பது ஈண்டுக் கருதுதற்கு உரியது. திருவள்ளுவர் நாத்திகர் அல்லர் ; திருவள்ளுவர்க்கு நாத்திகம் என்பது சிறிதும் உடன்பாடு அன்று(2).

## (3) ஒருவனே தேவன் :

கடவுளுண்மையில் நம்பிக்கை கொண்டு இருந்த பண்டைக்கால மக்களுட் பெரும்பாலோர், 'ஒரு தேர் செய்வதற்குப் பலர் கூடி முயல வேண்டியிருத்தலின், இவ்வுலகத்திற்கும் கடவுளர் பலர் உளராதல் வேண்டும்' என்னும் கருத்தினராய்க் கடவுளர் பலர் என்னும் கொள்கை (Polytheism) உடையவராக இருந்தனர் (3). அதனாலேயே, இந்திரன், சோமன், வருணன், மித்திரன் முதலிய கடவுளர் பலரை, வேத கால மக்கள் துதித்துப் போற்றி வந்தனர். 'ஒரு தேரைப் பலர் கூடி முயன்று செய்யினும், அப்பலரும் ஒரு தலைமைத் தச்சனின் ஏவல்வழி நின்றே அதனைச் செய்து முடிக்கக் காண்டலின், கடவுளர் பலர் உளர் எனக் கொள்ளினும், அவர்களுக்கெல்லாம் உரிய தனி முதற் பெருந் தலைமைக் கடவுள் ஒருவரே உளராவர்' என்னும் உண்மையைப் பண்டைக் கால மக்கள் ஓர்ந்து உணர்ந்திலர். இந்நிலையில், கடவுள் பலர் என்னும் கொள்கையை உடன்படாமல், கடவுள் ஒருவரே என்னும் உண்மையை (Monotheism), நம் தமிழகத்தில் நிலைபெறுத்தியவர் திருவள்ளுவரேயாவர் எனலாம்.

## (4) ஆதி பகவன் :

'கடவுளே உலகமாகப் பரிணமித்துக் காணப்படுகின்றார்' என்பன போன்ற கொள்கைகள் (Pantheism), திருவள்ளுவர்க்கு உடன்பாடு அன்று. 'ஆதிபகவன் முதற்றே உலகு' என்பதனால், 'கடவுளே உலகம் அன்று, உலகம் வேறு கடவுள் வேறு, உலகத்திற்குக் கடவுள் நிமித்தகாரணன்' என்னும் உண்மைகளைத் திருவள்ளுவர் உணர்த்துகின்றார்.

'உலகம் என்றும் உள்ளது; அஃது எவராலும் தோற்றுவிக்கப்பட்டதன்று; அது தோன்றுவதும் அழிவதும் இல்லை' என்பது சமணர் கொள்கை. ''மூவா முதலா உலகம் ஒரு மூன்றும் ஏத்த'' எனவரும் சீவகசிந்தாமணிச்

---

2. (*a*) " Jainism and Buddhism are fundamentally atheistic. From the earliest times to the present day, Jains and Buddhists have strenuously rejected the doctrine that the Universe is created or guided by a divine will or a divine mind; for them natural law is a sufficient explanation. These literature contain many criticisms of the theistic position "

—*Sources of Indian Tradition, p.* 78.

(*b*) " The religious systems in those days were, by and large, atheistic, and the Indian mind tended to indulge in moral discussion and in moral exaltion unconnected with theistic faith as Buddhism and other systems clearly show. "

—2500 *years of Buddhism*, 299.

(*c*) " Buddhism in its purity ignored the existence of God; it denied the existence of soul ; it was not so much a religion as a code of ethics."

—WINIFRED STEPHENS, *Legends of Indian Buddhism, p.* 7.

(*d*) " Thiruvalluvar bases his ethics on the grand truths of Tripadartha, Pathi-Pasu-Pasam. In fact, his creed is not a godless creed like that of the Jains or Buddhists. In this respect, there is disparity between the Naladi and this work ".

—DR. G. U. POPE *Ethics of Kural.*

3. Language proceeds from original polysyllabism towards monosyllabism, just as the history of religion does not pass from the belief in one god to the belief in many gods, but universally from Polytheism towards Monotheism.

—OTTO JESPERSEN.

செய்யுள் இதனைத் தெள்ளிதின் உணர்த்தும். இவ்வாறே உலகாயதரும், மீமாஞ்சகரும் கூறுவர். இது திருவள்ளுவர்க்கு உடன்பாடன்று. உலகம் கடவுளால் படைத்து இயற்றப்பட்டது. எனவே அதற்குத் தோற்றம் நிலை இறுதி என்னும் முத்தொழில்கள் உண்டு. ''உலகம் கடவுளையே முதலாக உடையது'' என்பது திருவள்ளுவர் கொள்கை. 'உலகியற்றியான்', 'ஆதி பகவன் முதற்றேஉலகு' என்னும் திருக்குறள் தொடர்களால், இவ்வுண்மை விளங்கும்.

இங்ஙனமே, ''பெரிய உடம்பிற் பெரிய உயிரும், சிறிய உடம்பிற் சிறிய உயிரும் இருக்கும். உயிரின் அளவிற்கு ஏற்பவே அதன் உடம்பும் பெரியதாகவோ சிறியதாகவோ அமையும்'' என்பது சமணக் கொள்கை. அதனுலேயே சமணச் சிற்பங்கள் பெரும்பாலும் மிகப் பெரியனவாக அமைக்கப்படும். சமணரின் வெள்ளைக்குளம் *(Sravana Belagola)* என்னும் இடத்திலுள்ள கோமதேசுவரர் என்னும் திருவுருவம் மிகப் பெரியதாக அமைந்திருத்தலும் காணலாம். மற்றும் இச்சமணக் கொள்கையினையே, பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்முன 'பழமொழி நானூறு' என்னும் நூலின் துதிச் செய்யுளில் வரும் 'பெரியதன் ஆவி பெரிது' என்னும் தொடர் இனிது குறிப்பிடுகின்றது. இது திருவள்ளுவர்க்கு உடன்பாடன்மை,

''உருவுகண் டெள்ளாமை வேண்டும்;
உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து ''

என்னும் திருக்குறளால் இனிது தெளியப்பெறும்.

### (5) பல்லுயிர் :

பௌத்தர் உலகாயதர் போன்றவர்கள் உயிர் என்பதொரு பொருள் இல்லை என்பர்(4). ''எப்பொருளுக்கும் ஆன்மா இல்லை'' என்பது மணிமேகலை. இது திருவள்ளுவர்க்கு உடன்பாடு அன்று. 'தன்னுயிர்க்கு இன்னுமை தான் அறிவான்', 'மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்', 'உடம்போடு உயிரிடை நட்பு' என்முற் போலப் பல இடங்களிலும் திருவள்ளுவர் உயிரைக் குறித்துள்ளார். ஒரு சிலர், 'சந்திரன் ஒன்றே நீர்க்குடங்கள் பலவற்றிலும் நிழலாடித் தோன்றுதல் போல, ஒருயிர்தான் பலவுடம்புகளிலும் இருந்து இயங்கி வருகின்றது' என்பர். 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' எனக் குறிப்பிடுதலால், திருவள்ளுவர்க்கு ஒருயிர்க் கொள்கை *(Monism)* உடன்பாடு அன்று என்பது தெளியலாம். இவ்வாறே பாவமில்லை புண்ணியமில்லை என்முற் போன்ற கொள்கைகளிலும் திருவள்ளுவர்க்கு உடன்பாடின்மை, திருக்குறளால் தெளியப்படும்.

### (6) பெண்ணிற் பெருந்தக்கதில் :

பண்டைக் கால மக்களிடையே பலவகைப் பொருந்தாக் கருத்துக்கள் நிலவி வந்தன. அவற்றுள், 'பெண்கள் பாவப் பிறவிகள்'; ஆண்களை விடத் தாழ்ந்தவர்கள் ; அவர்களுக்கு வீடுபேறு இல்லை' என்பன போல்வனவும் சில. சமணரும் பௌத்தரும் பெண்களை இழிவாகவே கருதி நடத்தி வந்ததாகத் தெரிகின்றது. புத்தர்பிரான் பௌத்த மடங்களிற் பெண்களைச் சேர்த்துக் கொள்ள எளிதில் இசைவு அளித்திலர். இசைந்த பின்னரும், பிட்சுணிகளுக்குப் பலப்பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பெற்றன(5). சமண நூல்களில் பெண்களைக் கடிந்துரைக்கும் பகுதிகள் நிரம்பக் காணப்படும். குறிப்பாகத் திகம்பர சமணத்தில் பெண் துறவிகள் இலர். பெண்களைப் பல்லாற்ருனும் இழித்துப் பழித்து இகழ்வாக நடத்துவது, அக்காலத்துச் சமுதாய நிலையாக இருந்து வந்தது. திருவள்ளுவர்க்கு இன்னோரன்னயவை உடன்பாடல்ல. ''பெண்ணிற் பெருந்தக்க யாவுள'' என அறைகூவி வினவி, அதற்குப் 'பெண்ணிற் பெருந்தக்கது இல்'' *(1137)* எனத் தாமே விடை கூறிப் பெண்ணின் பெருமையினை உலகறிய நிலைநிறுவியவர் திருவள்ளுவர்!

### (7) வேள்விகள் :

திருவள்ளுவர் காலத்திலும் அதற்கு முன்னரும், தமிழகத்தில் வைதிக மதம் பரவியிருந்தது. அதனல் தமிழகத்தில் யாகங்கள் பலப்பல ஆங்காங்கே நடைபெற்றன. பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி, இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளி முதலிய பல பழைய தமிழரசர்களின் பெயர்களே, இவ்வுண்மைக்குச் சான்று பகரும். இருக்குவேதம் எசுர்வேதம் சதபத பிராமணம் முதலியவற்றில், வருணப் பிரகாசம் வாஜபேயம், பௌண்டரிகம், இராசசூயம், அசுவமேதம், புருஷமேதம், சர்வமேதம், சவுத்திராமணி முதலிய பல யாகங்கள் செய்வது பற்றிய செய்திகள் காணப்படுகின்றன (6). இத்தகைய யாகங்கள் திருவள்ளுவர்க்கு உடன்பாடு அல்ல. கொலை வேள்விகளை அவர் பெரி

4. " Buddha nevr believed in the existence of soul. He criticises the soul theories of other sects in Dikka Nikayam, 2-64. "

"In the Questions of King Menander, Milindhapanha, Nagasenar of 2nd century B.C., explains that there is no entity separately as soul by a simile of the Chariot"
—*Sources of Indian Tradition.*

5. Women claimed to be admitted to a female branch of the order. Again and again the Buddha refused, and it was through the insistence of Ananda that they finally gained admission. Even then the female order of Bhikkunis was founded only under strict and humiliating rules, and the Buddha is reported to have said that their admission would materially shorten the life of the Buddhist religion. "
—*Christmas Humphreys, Buddhism*, 38.

6. " The mere beginning of Aswamedha sacrifice involves the slaying of 609 animals in a certain prescribed succession.....".
—*Sacred Books of the East*, 44-311.

தும் வெறுத்தார். ''நன்றாகும் ஆக்கம் பெரி தெனினும் சான்றோர்க்குக் கொன்றாகும் ஆக்கம் கடை'' ; ''அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று'' என்பன போல வரும் குறட்பாக்கள், இவ்வுண் மைக்குச் சான்று பகரும். விருந்தோம்புதல் முதலியவற்றை வேள்விகள் எனத் திருவள்ளுவர் சிறந்தெடுத்துக் குறிப்பிடுதலும் இங்குச் சிந்தித் தற்குரியது.

## (8) பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் :

திருவள்ளுவர் காலத்திலும் அதற்கு முன் னரும், பிறப்பில் உயர்வு தாழ்வு கருதும் சாதி வேறுபாடுகள் முதலியன, பெரிதும் நிலவி வந் தன. இன்றளவும் அவை இருந்தேவருகின்றன. சமணசமயம் அவற்றை ஒழிக்க முதலில் ஓரளவு முயன்றது. எனினும், பிற்காலத்தில் அவற்றை ஏற்றுக்கொண்டு விட்டது (7). மனு ஸ்மிருதி போன்ற வைதிக மத நூல்கள் சாதி வேற்றுமைகளைப் பாராட்டி, அவைகள் வளர்வ தற்குரிய வழிகளும் வகுத்தன. திருவள்ளு வர்க்கு இவை உடன்பாடு அல்ல : ''பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்று புரட்சி முழக்கம் செய்து, ''மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர், கீழிருந்தும் கீழல்லார் கீழல்லவர்'' எனச் சிறந்த தீர்ப்பும் அளித்தவர் திருவள்ளு வர்.

## (9) ஒழுக்கம் விழுப்பம் தரும் :

திருவள்ளுவர் காலத்திலும் அதற்குமுன் னரும் இருந்த மக்களில் சமுதாய வாழ்வில், பல இழி செயல்களும் நிலைகளும் இருந்தன என்று தெரிகின்றது. கள்ளுண்ணலும் சூதாட லும் அக்காலத்திற் பெரிதும் பரவியிருந்தன(8). சோமப் பூண்டின் சாற்றினாற் சமைத்த கள்ளை மிகுதியாகப் பருகி வெறித்திருந்த ஒருவன் பாடிய பாடலும், சூதாடலிற் கைதேர்ந்த ஒருவன் பாடிய பாடலும், இருக்கு வேதம் பத்தாம் மண்டலத்தில் (139, 34) காணப்படு கின்றன. இராமாயணத்தில் பல மனைவியர் மணமும் (Polygamy), மகாபாரதத்தில் பல கணவர் மணமும் (Polyandry) குறிக்கப்பட்டு உள்ளன. நிதான சூத்திரம், (3, 8), சதபதப் பிராமணம் (2, 5, 2.20) முதலிய நூல்களின் வாயிலாக அக்காலத்து மக்கள் சிலர்பால் இருந்த ஒழுக்க முறைகேடு புலனாகின்றது. சமண பௌத்த சமயங்கள் வற்புறுத்திய துறவு நெறி வாழ்வின் காரணமாகச் சமுதாயத்திற் கூடா ஒழுக்கங்கள் மிகுதிப் படலாயின. இன் னோரன்ன நிலைகளைக் கண்டே, திருவள்ளுவர் ''ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரி னும் ஓம்பப்படும்'' என்று வற்புறுத்தி, 'ஒழுக்க முடைமை', 'கூடா ஒழுக்கம்' என்னும் அதிகா ரங்களையும் வகுத்தருளினர்.

## (10) நியோகம் :

பண்டைக் கால இந்திய மக்கட் சமுதாயத் தில், தன் கணவனால் மகப்பேறு வாய்க்கப் பெறாத ஒரு பெண், தன் கணவனது கட்டளைப் படி வேறு ஆடவரை மருவிப் புதல்வரைப் பெறுதலும், ஆடவர் கைம்மைப் பெண்டிரைக் கூடிப் புதல்வரைப் பெறுதலும் ஆகிய வழக்கங் கள் இருந்தன. இப்பழக்கம் யூத மக்களிடமும் இருந்து வந்தது. இது நியோகம் (Levirate) எனப்படும். இதனை மனு மிருதி ஒன்பதாம் இயலின் 69, 60, 61ஆம் செய்யுட்கள் வகுத்து உரைக்கின்றன. மகாபாரதத்தில் வியாசர் இம் முறைப்படியே திருதராட்டிரன், பாண்டு, விதுரர் ஆகியோர் பிறக்கச் செய்தருளினர். குந்தி தேவியும், மத்திராதேவியும் இம்முறை யைக் கடைப்பிடித்தே பஞ்ச பாண்டவர்களைப் பெற்றெடுத்தனர். 'நியோகம்' என்னும் இந்த இழிமுறைச் செயல், திருவள்ளுவர்க்குச் சிறிதும் உடன்பாடன்று. இங்ஙனமே, 'ஒருவன் தன் வசதிக்கேற்ப ஒன்றுக்குமேல் நான்கு மனைவி யரை மணந்து கொள்ளலாம்' (9) என்பது போன்றிருந்த சில சமய சமுதாயப் பழக்கங் களும் கொள்கைகளும் திருவள்ளுவர்க்கு உடன் பாடல்ல. ''ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் (Monadry, Monogamy) என்பதே, திருவள்ளுவர் கொள்கை. மணம் செய்து கொண்ட இருவர் இடையிற் பிரிந்து மண முறிவு (Divorce) கொள்ளுதற்கும், சில சம யங்கள் இசைவு தருகின்றன. அது திருவள்ளு வர்க்கு உடன்பாடு அன்று.

> ''இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனக்
> கண்ணிறை நீர்கொண் டனள் ''

## (11) புலால் மறுத்தல் :

பண்டைக் காலத்து இந்திய மக்கட் சமு தாயத்தில் புலாலுண்ணுதல் பெரு வழக்கமாக நிலவி வந்தது. வேள்விகளில் உயிர்களைக் கொலை செய்து, அவற்றின் 'வபை' என்னும் இறைச் சியைத் தின்பது குற்றமாகவோ பாவமாகவோ

---

7. "Jainism has not succeeded in freeing itself from the idea of caste, which has been so strong in the life of India. Even the Gods, who subsequently were reinstated in Jainism, have been arranged in social ranks......Altogether there are in heaven and hell 99 kinds of gods who are regarded as menial because they serve."

—MRS. STEVENSON, *The Heart of Jainism*, 27

"Even from the point of view of civil law, there are many glaring discriminatory treatments among the different castes. (Manusmriti, 8-37; 123, 124.)"

—WILLIAM THEODORE.

8. "The leading vices of the Aryan race have always been drinking and gambling. The Rig-Veda bears ample witness to both."

—ZENIDE A. RAGOZIN, *Vedic India*, p. 375.

9. "It is lawful for a freeman to marry four wives, whether free or slaves".

—*Hidaya*, 1, 2, 1-88.

கருதப்படவில்லை. அந்தணர் ஆகிய கபிலர் என்னும் சங்க காலப் புலவர்,

''புலவு நாற்றத்த பைந்தடி
பூநாற் றத்த புகைகொளீஇ ஊன்துவை
கறிசோ றுண்டு வருந்துதொழில் அல்லது
பிறிதுதொழில் அறியா வாகலின் நன்றும்
மெல்லிய பெரும தாமே....''

எனவரும் புறநானூற்று வரிகளில், புலாலுணவு உண்ணுதலைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். தற்காத்துக் கொள்ளவும், பகைவரைத் தாக்கி வெல்லவும், உடல் வலிமை பெறுவதற்கு ஊனுணவு மக்களுக்கு இன்றியமையாததெனச் சீக்கிய மதம் கருதுகின்றது. மனிதர்கள் உண்ணுதற் பொருட்டே, இறைவன் பிற உயிர்களைப் படைத்துள்ளனன் எனச் சில சமயத்தினர் நம்புகின்றனர். பௌத்த மதத்தில் தேரவாதம் என்னும் பிரிவைச் சேர்ந்தவர்கள், தானே கொல்லாமல், பிறர் கொன்று கொணர்ந்து தந்த ஊனை ஒருவன் உண்ணலாம் எனப் புத்தர் பெருமான் இசைவு அளித்ததாகக் கூறுவர்(10). சுந்தன் என்பவன் தந்த பன்றி இறைச்சியுணவை உண்டதனுலேயே, புத்தர் பெருமான் இறந்தார் என்றும் வரலாறு உண்டு. ஓர் உயிரைக் கொல்லாமல், அது செத்த பிறகு அதன் ஊனைத் தின்னலாம் என்பது தேரவாதர் என்னும் சௌத்திராந்திக பௌத்தர்களின் கொள்கை. இது திருவள்ளுவர்க்கு உடன்பாடு அன்று. இப் பௌத்தக் கொள்கையினை ஆசிரியர் திருவள்ளுவர்,

''தினற்பொருட்டாற் கொல்லாது உலகெனின், யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்.''

என்னும் திருக்குறளால் நன்கினிது மறுத்திருத்தல் காணலாம். இதனுல், ''கொலைப் பாவம் கொன்றூர்மேல் நிற்றலின், கொலையின் பின் ஊனுண்பார்க்குப் பாவமில்லை'' என்றும்; ''பின் நிகழும் தின்கை முன்நிகழும் கொலைக்குக் காரணமாகாமையின், தின்பார்க்குக் காரணத்தான் வரும் பாவமில்லை'' என்றும் வாதிக்க முயல்பவர்களின் கொள்கையைத், திருவள்ளுவர்உடன்படவில்லை என்பது தெளிவாம். திருவள்ளுவர் கடிந்து மறுத்த இத் தேரவாதப் பௌத்தக் கொள்கையினைச் சிவஞான சித்தியார் என்னும் சைவ சித்தாந்த நூலும்;

''தின்னுமது குற்றமில்லை செத்தது' எனும் புத்தா! தின்பைஎனக் கொன்று உனக்குத் தீற்றினர்க்குப் பாவம் மன்னுவது உன் காரணத்தால்; தின்ஞதார்க்கு வதைத்தொன்றை இடாமையினல் வதைத்தவர்க்கே பாவம் சேர என்ன தவம் புரிகின்ருய்! புலால் கடவுட்கு இடாயே! உன் உடலம் அசுசிஎன நாணி, வேருேர் உடல்உண்ணில் அசுசி என உணர்ந்திலை காண் நீயே!

என மறுத்துரைத்திருத்தல் அறிந்து மகிழற்பாலது. இவ்வுண்மை கருதினுல், 'இயேசுவை விடச் சிறந்தவர்' எனப் பேரறிஞர் பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் (11) குறிப்பிடுகின்ற புத்தர் பிரானைக் காட்டிலும், திருவள்ளுவர் ஒரு வகையிற் சிறந்தவராதல் தெளியலாம்.

## (12) தெருள் நோக்கு :

மேலும், புத்தர் பெருமான் உலக வாழ்வின் ஒரு கூறு பற்றியே ஓர்ந்து ஆய்ந்து, ''பிறந்தார் உறுவது பெருகிய துன்பம், பிறவார் உறுவது பெரும்பேரின்பம்; பற்றின் வருவது முன்னது; பின்னது அற்ருேர் உறுவது அறிக'' என்று அறிவுறுத்தியருளினுர். ஆனல் திருவள்ளுவரோ, உலக வாழ்வின் இயலைப் பலகோணங்களிலும் ஓர்ந்துணர்ந்து ஆராய்ந்து, அதனது பலதிற நிலைகளையும் (Comprehensive & Compact) விளக்கியருளினுர். மற்றும், புத்தர் பெருமான் உலகியல் வாழ்வைப் பொறுத்த அளவில் ஒரு மருள் நோக்கினர் (Pessimist) எனவே விளங்குகின்ருர். ஆனல் திருவள்ளுவரோ தெருள்நோக்கினர் (Optimist) எனச் சிறந்து திகழ்கின்ருர்.

''இடுக்கண் வருங்கால் நகுக; அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்''

''நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள் ''

எனவரும் திருக்குறட் பாக்களே, இதனை மலையிலக்கென விளக்கா நிற்கும். இவ்வாற்ருலும் திருவள்ளுவரின் பலதிறச் சிறப்புக்களையும் நாம் கருதியுணர்ந்து மகிழலாம்.

## (13) மழித்தலும் நீட்டலும் :

பண்டைக் கால மக்களுள் ஒவ்வொரு சாரார், ஒவ்வொரு வகையில் தவவொழுக்கம் பற்றிய கருத்துக்களைக் கொண்டிருந்தனர். ஒரு சிலர் சடை முடியை நீட்டி வளர்ப்பதே தவம் என்று கருதினர். வேறு சிலர் காம்பறத் தலை சிரைத்துக் கொள்வதே தவம் என்று எண்ணினர் ; மற்றும் சிலர் தலையிலுள்ள மயிரினைச் சுடுபாறையிற் கிடந்து ஒவ்வொன்ருகப் பறித்துப் போடுதலே தவம் என்று கொண்டனர். இஃது இக்காலத்தில் ஏதோ எளியதும் இழிந்ததும் போலத் தோன்றினும், பண்டைக் காலத்தில் இத்தகைய செயல்களுக்குப் பெருமதிப்பும்

---

10. " According to the scriptures of the Theravada school, the Buddha allowed his followers to eat flesh if they were not responsible for killing the animal providing the meat and if it was not specially killed to them.

To this day most Buddhists in Ceylon and other lands where Theravadam prevails eat meat and fish, which are supplied by Muslim or Christian butchers or fishermen ".

—*Sources of Indian Tradition.*

11. " I cannot myself feel that either in the matter of wisdom or in the matter of virtue Christ stands quite as high as some other people known to history. I think I should put Buddha and Socrates above Him in these respects."

—BERTRAND RUSSEL, *Why I am not a Christian*

விளைவும் இருந்தன (12). இப்போதும் இத்தகைய மனப்பான்மைகள் மக்களிடையில் இருந்து வருதலைக் காணலாம். நாகரிகம் மிக்க முற்போக்காளர் என்பதும், நாகரிகம் அற்ற பிற்போக்காளர் என்பதும், அவரவர்தம் தலைமுடி நிலைகளைக் கொண்டு, இப்போதும் கணிக்கப்படுகின்றன. திருவள்ளுவர்க்கு இன்னோரன்ன செயல்கள் உடன்பாடு அல்ல. அவர் இவற்றை அறவே வெறுத்தார். தவம் செய்வார்க்குத் தலைமயிரை மழித்தலும், சடையாக நீட்டி வளர்த்தலும் ஆகிய வேடங்கள் வேண்டுவது இல்லை; உலகோர் பழிக்கின்ற குற்றங்களைத் தம் பால் நிகழவொட்டாமல் நீக்கிவிடுதலே அமையும் என்பதே திருவள்ளுவரின் திருவுள்ளம்.

> ''மழித்தலும் நீட்டலும் வேண்டா; உலகம்
> பழித்த தொழித்து விடின்''

என்னும் திருக்குறளால், வைதிகம் சமணம் பௌத்தம் ஆகியவற்றைச் சார்ந்த மக்களின் போலி வேட நிலைகளைத் திருவள்ளுவர் கடிந்து உரைத்திருத்தல் காணலாம்.

## (14) உழைப்பின் உயர்வு :

திருவள்ளுவர் காலத்துச் சமுதாய மக்களிற் சிலர், உடலுழைப்பை இழிவாகக் கருதினர். உடலுழைப்பு இல்லாதவர்கள் உயர்ந்தவர்கள் என்றும், உடலுழைப்பை மேற்கொள்ளுபவர்கள் இழிந்தவர்கள் என்றும், பொதுவாக ஒரு தவறான கருத்து, அக்காலத்தில் நிலவியிருந்ததாகத் தெரிகின்றது. அவ்வடிப்படையிலேயே வருணாச்சிரமப் பாகுபாடுகளும், சாதி வேறுபாடுகளும் ஏற்படலாயின. வைதிக மதத்தினர் பல வகை யாகங்களைச் செய்வதில் முனைந்திருந்தனர். சமண பௌத்தர்களோ பற்றற்ற துறவு நெறி வாழ்க்கையைக் கடைப்பிடிக்கலாயினர். இந் நிலையில் உழைப்பின் உயர்வு (Dignity of Labour) பற்றி, மக்களிற் பெரும்பாலோர் நன்குணரவில்லை. 'எளிய சுவையற்ற புல்லிய நீர்த்த கூழேயானாலும், ஒருவன் தானே முயன்று உழைத்துத் தேடிப் பெற்றதென்றால், அதனைவிடச் சுவை மிகுந்த சிறந்த நல்ல உணவு வேறெதுவும் இல்லை' என்கின்றது குறள்.

> ''தெண்ணீர் அடுபுற்கை ஆயினும், தாள்தந்தது
> உண்ணலின் ஊங்கினியது இல் ''

என்னும் திருக்குறளால், திருவள்ளுவர் உழைப்பின் உயர்வினை உலகுக்கு அறிவுறுத்தியருளினார். 'உழவு' என்னும் தனி அதிகாரமும் வகுத்து, உழைப்பின் உயர்வினையும், தொழிலின் மேன்மையையும் விளக்கினார். இன்னா செய்யாமை (அகிம்சை) என்பதனைத் தலைக்கீடாகக் கொண்டு, ஒரு சிலர் உழவுத் தொழிலையிகழ்ந்து புறக்கணித்ததைத் திருவள்ளுவர் உடன்படிலர். (13)

## (15) கொல்லாமை :

திருவள்ளுவர் கொல்லாமை அறத்தினைப் பெரிதும் போற்றியவர். 'ஒன்றாக நல்லது கொல்லாமை' என்பது, அவர் தம் முடிந்த முடிவு. 'எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும் மாணா செய்யாமை தலை' என்பது அவருடைய கொள்கை. 'ஒருவன் தன்னைக் கொல்ல வரும் பசுவைக் கொல்ல முற்படுதல் தவறாகாது' என்று மனு முதலோர் கூறும் கருத்து, திருவள்ளுவரின் திருவுள்ளத்திற்குப் பொருந்துவதன்று. நோய்க்கு மருந்தாதற்காக வேனும், நேர்த்திக் கடன் செலுத்தும் முறையாகவேனும், சாந்தி செய்தற் பொருட்டாக வேனும், வேறு பிற எக்காரணங்கள் குறித்தேனும், ஒருவன் பிறிதொன்றின் உயிரினைக் கொல்லுதல் ஆகாது என்பது, திருவள்ளுவரின் ஆணை.

> ''தன்னுயிர் நீப்பினும் செய்யற்க; தான்பிறிது
> இன்னுயிர் நீக்கும் வினை ''

## (16) செய்யற்க பழிக்கும் வினை :

செய்யப்படும் வினைகள், பொருளேயன்றி, அறமும் புகழும் பயந்து நல்லனவாதல் வேண்டும்; செய்யும் செயலின் முடிவு மட்டுமேயன்றி, அதனைச் செய்யும் முறையும் தூயதாக அமைதல் வேண்டும் என்பது திருவள்ளுவர் கருத்து. 'செயலின் முடிவு நல்லதாயின், செய்யும் முறை எதுவாயினும் நன்றேயாகும்' (End justifies the means) என்பது காந்தியடிகளைப் போலவே திருவள்ளுவர்க்கும் உடன்பாடன்று. மனு மிருதி போன்ற அற நூல்கள் ''வயது முதிர்ந்த மூப்பினராய இரு முதுகுரவரும், கற்புடை மனைவியும், குழவியும் பசியான் வருந்தும் எல்லைக்கண், தீயன பலவும் செய்தாயினும் காப்பாற்றுக'' என்று விதிக்கும். திருவள்ளுவர் அதனைச் சிறிதும் உடன்படார். ''தன்னைப் பெற்ற அன்னையின் பசியை வறுமையாற் கண்டு வருந்தும் தன்மையன் ஆயினன் எனினும், அது பற்றி அறிவுடையார் பழிக்கும் இழி செயல்களை ஒருவன் செய்தல் கூடாது'' எனத் திட்டவட்டமாகப் பணித்தருள்வர் திருவள்ளுவர்.

> ''ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும், செய்யற்க
> சான்றோர் பழிக்கும் வினை ''

---

12. "It is interesting to note that a sect and an Upanishadic text bear the same name, Mundak. A special feature of this sect was that its members shaved their heads. The shaving of the head instead of wearing long hair seem to have been common to both Vedic and non-Vedic sects as appears from a reference in the Suttanipata."

—*2500 years of Buddhism, p.* 11.

13. "The principle of Ahimsa is nowhere so rigorously practised as among the Jain monks......This has, of course, led even the laymen, of whom not so strict a practice has been required, to refrain from any means of livelihood which might cause the direct destruction of life. Thus there are few Jain farmers, since it is next to impossible to avoid killing insects, worms etc., when tilling the soil. They are more often found in commerce or banking or in other professions."

—*The world's Living Religions, p.* 51. ROBERT ERNEST HUME, Ph. D., D. Theol.

## (17) வட நூல் முறை :

''ஒருவன் தன் உயிர்க்கு இறுதி நேர இருக்கும் நெருக்கடி நிலையில், இனி வந்தன எது செய்தாயினும், தன் உயிரைக் காத்துக் கொள்ளலாம்'' எனச் சில அற நூல்கள் செப்பும். இதனை 'ஆபத்துத் தர்மம்' என வியாச பாரதம் குறிப்பிடும். பீஷ்மாசாரியர் தாம் உயிர் துறக்கும் முன்பு தருப்ப சயனத்தில் இருந்து, இது பற்றிப் பாண்டவர்க்கு உபதேசித்துள்ளார். 'ஆபத்துக்குப் பாவம் இல்லை' என்னும் உலகப் பழமொழியும், இதனை ஒட்டியே உண்டாகி வழங்குவதாயிற்று. திருவள்ளுவர்க்கு இஃது உடன்பாடன்று. ''ஒருவன் எஞ்ஞான்றும், தன்னிலையில் தாழாதிருத்தல் வேண்டும். ஒரோவழி ஊழால் தாழ்வு வந்துழி அவன் உயிர் வாழாமல் இறத்தல் வேண்டும். ஒருவனுக்கு நாணுடைமை உயிரினும் சிறந்தது. நாணமும் உயிரும் தம்முள் மாறுயவழி, ஒரு மனிதன் தன் நாணம் சிதையாமைப் பொருட்டு உயிரைத் துறத்தல் வேண்டும் ; அஃதன்றி உயிரின் பொருட்டு நாணத்தைத் துறத்தல் ஆகாது'' என்பதே திருவள்ளுவரின் தெளிந்த முடிவு.

''இன்றி யமையாச் சிறப்பின ஆயினும்,
குன்ற வருப விடல்''

என வரும் திருக்குறளால், இவ்வுண்மையை யாவரும் இனிது உணரலாம். இக் குறட்பாவின் கருத்தை, ''இறப்ப வருவழி இளிவந்தன செய்தாயினும் உய்க என்னும் வடநூல் முறையை மறுத்து, உடம்பினது நிலையின்மையையும், மானத்தினது நிலையுடைமையையும் தூக்கி அவை செய்யற்க என்பதாம்'' என ஆசிரியர் பரிமேலழகர் அழகுற விளக்கியிருத்தலும், இவ்வுண்மையை வலியுறுத்தும் இனிய சான்றாகும்.

## (18) கௌடில்யர் :

திருவள்ளுவரின் சிறப்பு, அவரை வேறு சில ஆசிரியர்களோடு ஒப்பிட்டுக் காண்பதனலும், மிகவும் நன்கினிது நமக்குப் புலப்படும். திருக்குறளின் பொருட்பாலைக் கௌடில்யரின் அர்த்த சாத்திரத்திற்கும், காமத்துப்பாலை வாத்ச்யாயனரின் காமசூத்திரத்திற்கும் சிலர் ஒப்பிடுவதுண்டு. அஃது ஒரு புடை ஒப்புமையாகுமேயன்றி, முழுவதும் ஏற்புடைத்தாகாது. கௌடில்யரின் அர்த்த சாத்திரத்தில் உழவுக்கும் உழவருக்கும் ஒரு சிறிதும் முதன்மை யளிக்கப் படவில்லை. அரசன் குடிமக்களை அச்சுறுத்தியும் வற்புறுத்தியும் தனது வருவாயைப் பெருக்கிக் கொள்ளலாம் என்று கூறி, நீண்டதொரு வரிப் பட்டியலையும் அர்த்த சாத்திரம் வகுத்துத் தந்துள்ளது. வருணச்சிரம சாதிப் பாகுபாடுகளை அடிப்படையாகக் கொண்டே அர்த்த சாத்திரம் அமைந்துள்ளது. நீதி நெறி பிறழாமல்தான் ஒருவன் பொருளீட்டுதல் வேண்டும் என்று குறள் கூறும் நெறிக்கும், பொருளீட்டுதலில் நீதி பற்றி ஏதும் நினைக்க வேண்டுவதில்லை எனப் போதிக்கும் இயல்பிற் செல்லும் அர்த்த சாத்திரத்திற்கும்; உள்ள இடையீடு மிக மிகப் பெரிது.

குடிமக்களின் கரவின்மை அறியாமை மூட நம்பிக்கை சமயவுணர்வு ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொண்டு, ஓர் அரசன் தன் பணப் பெட்டியை நிரப்பிக் கொள்ளலாம் எனக் குறிப்பிற் புலப்படுத்தி, அதற்குரிய வழி வகைகளையும் கௌடில்யர் வகுத்துரைக்கின்றார். மேலும் கட்குடி இணைவிழைச்சு என்பன போன்ற இழி செயல்களுக்கும் அரசு ஊக்கம் அளித்து, அவ்வாற்றாலும் வருவாயைப் பெருக்கிக் கொள்ளலாம் என்பது, அதன் கொள்கை. இவைகளெல்லாம் திருவள்ளுவர்க்குச் சிறிதும் உடன்பாடு அல்ல.

''அழக்கொண்ட எல்லாம் அழப்போம்; இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை''

''வேலொடு நின்றான் இடுஎன் றது போலும்
கோலொடு நின்றான் இரவு''

''அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண்ணீர் அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை ''

என்பன திருவள்ளுவர் அறிவுரை. இங்ஙனமே அறநெறியைப் பொருட்படுத்தாமல் புறக்கணித்துத் 'தீயசூழ்ச்சித் திறங்கள்' பலவற்றைக் கூறும் மாக்கியவெல்லி (Machiavelli)யின் கருத்துக்கள் பலவும், திருவள்ளுவர்க்கு உடன்பாடு உடையன அல்ல. ஓர் அரசன் நரி (Fox) போன்ற சூழ்ச்சித் திறம் மிக்கவனாதல் வேண்டும் என்பது மாக்கியவெல்லியின் கொள்கை. அரசன் அரிமா (Lion) போன்ற பெருமித இயல்புடையவனாகத் திகழ்தல் வேண்டும் என்பது திருவள்ளுவர் கொள்கை. இதுவே இவ்விருவருக்கும் உள்ள இடையீட்டின் அளவை நம்மனோர்க்குப் புலப்படுத்தப் போதியதாகும்.

## (19) வாத்ச்யாயனர் :

இவ்வாறே திருவள்ளுவரும் வாத்ச்யாயனரும் ஒருவரோடொருவர் நெடுந் தொலைவினர். திருவள்ளுவர் தூய தெய்விகக் காதலை விளக்கினர்; வாத்ச்யாயனர் தீய இழிந்த காமத் திறன் பற்றி விரித்துரைத்தனர்! பாலுணர்ச்சியைத் தூண்டி விடுவது, வளரச் செய்வது, நீடு நிலை பெறுத்துவது பற்றியெல்லாம், வாத்ச்யாயனரின் காமசூத்திரம் விவரிக்கின்றது. ஆண் பெண் சேர்க்கையில் நிகழும் பலதிறச் செயல்கள் நிலைகள் பற்றி யெல்லாம் வாத்ச்யாயனர் வருணிப்பர். பிறன் மனைவியை மயக்கிக் கெடுப்பதற்குரிய வழிகளையும் கூடக் காமசூத்திரம் கட்டுரைக்கும். பரத்தைமைப் பண்பும் செயல்களும் பற்றிக் கூட, அது பாரித்துரைக்கக் காணலாம் (14). இன்னோரன்ன இழிதகவுகள் எதுவும் திருக்குறளிற் காணப்பட மாட்டா.

---

14. " Kamasutra of Vatsyayanar deals with erotology. It was meant to induce, incite and prolong the sex passion. It deals with physical acts, manipulation and postures in sex unions, and abounds in revolting descriptions and obscene situations. Vatsyavanar reaches the depth of his degradation when he formulates the technique of seducing the wife of another. We have none of these in Thiruvalluvar."

## (20) பிளேட்டோ :

திருவள்ளுவர்க்கு மேலே நாட்டுப் பேரறிஞர்களான பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்றவர்களும், சிறிதும் ஈடாக மாட்டார்கள். பிளேட்டோ கண்ட குடியரசு அளவாற் சிறியது; நகர-நாடு (City-State) எனத் தக்கது ; குடிமக்களின் தொகையிலும் செல்வ நிலையிலும் வளர்ச்சியற்ற தேக்கமுடையது. பேச்சுரிமைக் குறைப்பு முதலிய பலவகைக் கட்டுப்பாடுகள் அங்கு உண்டு. தனி நிலையிற் குடும்ப வாழ்வின் இன்பமும், குழந்தை வளர்ப்புரிமையும் அங்கே அநுமதிக்கப் பெற மாட்டா. கவிஞர்கள் அங்கே மதிக்கப் பெறுர். மெலிந்தோர் நலிந்தோர் புறக்கணிக்கப்படுவர். மனைவியரும் குழந்தைகளும் அங்கே பொதுவாக்கப்படுவர். திருவள்ளுவர் கூறும் கற்பு முதலிய பண்புகளுக்கு அங்கே ஒரு சிறிதும் இடமில்லை.

## (21) அரிஸ்டாட்டில் :

அரிஸ்டாட்டிலின் கருத்தின்படி அடிமை முறை இன்றியமையாதது ; உயர்வு தாழ்வுகள் இயல்பானவை ; இழிநிலை பிறவியிலேயே அமைந்தது ; குடியாட்சி என்பது கிரேக்கர்களுக்கு மட்டுமே யுரியது. ஏனைய ரெல்லோரும் நாகரிகமற்ற இழிசினரே (Barbarians) ஆவர். செல்வம் தேடுதற்கும், நீதி நெறி முறைகளுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. இத்தகைய கருத்துக்களெல்லாம் திருவள்ளுவர் உடன்படாதவை. இவைகளெல்லாம் திருக்குறளில் ஒரு சிறிதும் காணப்படமாட்டா.

## முடிவுரை :

இங்ஙனம் நீள நெடுக நினைந்துணர்ந்து ஆராய்ந்தால், திருவள்ளுவர் உடன்படாத கொள்கைகள் பலவற்றை, நாம் நன்கினிது அறிந்து நனிமிக மகிழலாம். திருவள்ளுவரின் தனிப் பெருஞ் சிறப்பையும், திருக்குறளின் ஒப்புயர்வற்ற பெருமையையும், செவ்விதின் உணர்ந்து தெளிந்து கொள்ளுதற்கு, இத்தகைய ஆராய்ச்சிகள் பெருந் துணை புரியும்! திருவள்ளுவரையும், திருக்குறளையும் நம்மனோர் அனைவரும் நன்கினிது போற்றி, நலம் பலவும் எய்தி, உய்ய முயலுவோமாக! வாழ்க திருவள்ளுவர் புகழ்! வளர்க திருக்குறள்!


# அருள்மிகு திருமலைக்குமாரசுவாமி திருக்கோயில்

### பண்பொழி : : தென்காசி வட்டம்

### திருநெல்வேலி மாவட்டம்—627 807

**பக்தர்களுக்கு ஒரு முக்கிய அறிவிப்பு**

கலியுக வரதனும் திருமலைக்குமரப் பெருமானுக்குத் தினசரிப் பூசைக் கட்டளை துவங்கப்பட்டுள்ளது. இவ்வரிய வாய்ப்பினைப் பயன்படுத்த விரும்பும் பக்தப் பெருமக்கள் ரூ. 1000—00 (ரூபாய் ஆயிரம் மட்டும்) திருக்கோயில் செயல் அலுவலருக்கு நேரடியாக அனுப்பிவைக்கவோ அல்லது இந்தியன் வங்கியின் ஏதாவது ஒரு கிளையில், தென்காசி கிளைக்காகச் செலுத்திவைக்கவோ வேண்டிக் கொள்ளப்படுகிருர்கள்.

இத்தொகையின் முதலீட்டிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து, வழிவழியாக வருடத்தில் அவரவர்கள் விரும்பும் ஒரு தினத்தில், அவர்களது குடும்ப நலன் கருதி, திருமலையாண்டவனுக்கு ஒருநாள் முழுவதுமுள்ள 8 கால அபிசேக, அலங்கார, நெய்வேத்திய ஆராதனைகள் நடத்தி, இலை விபூதிப்பிரசாதம் நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பிவைக்கப்படும். விரும்பும் அன்பர்கள் இந்தத் தினசரிப் பூசைத்திட்டத்தில் பங்கு பெற்று இறைவயருட் செல்வம் பெறலாம்.

மற்ற விபரங்களுக்குத் திருக்கோயில் செயல் அலுவலருடனே இந்தியன் வங்கியின் ஏதாவது ஒரு கிளையிலோ தொடர்பு கொள்ள வேண்டப்படுகிறது.

தி. உதயராஜ், பி. ஏ,
செயல் அலுவலர்.

# "தண்டமிழின் மேலாம் தரம்"

(சிவநேசன்)

N78.2B.8
158632

**முன்னுரை :**

தில்லைவாழ் அந்தணர்கள் மூவாயிரவருள், ஒருவர், உமாபதி சிவம். அவரை உமாபதி சிவாசாரியர் எனவும் வழங்குவர். தில்லையின் கீழ்த் திசையில், இப்போது அண்ணுமலைப் பல்கலைக் கழகம் அமைந்துள்ள திருவேட்களம் என்னும் பழம் பெரும் தலத்தின் ஒரு பகுதியாகிய கொற்றவன்குடி என்னும் இடத்தில், இவர் வாழ்ந்து வந்தார். ஆதலின் இவரைக் ''கொற்றவன்குடி உமாபதி சிவம்'' எனவும் குறிப்பிடுவது உண்டு.

''சிற்றம் பலம்மன்னும்
சின்மயராம் தில்லைநகர்க்
கொற்றங் குடிமுதலைக்
கூறும்நாள் எந்நாளோ?'' (1)

''குறைவில் அருள் ஞானமுதல்
கொற்றங் குடிஅடிகள்
நறைமலர்த்தாட்கு அன்புபெற்று
நாம்இருப்பது எந்நாளோ?'' (2)

என்று, வேதாந்த சித்தாந்த சமரச ஞான வித்தகச் செல்வர் ஆகிய தாயுமான அடிகள், புகழ்ந்து போற்றித் துதித்துள்ளார் எனின், உமாபதி சிவத்தின் ஒப்புயர்வற்ற பெருமைகளை நாம் ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம்.

**உமாபதி சிவம் :**

உமாபதி சிவம், நம் தமிழகத்தில் தோன்றியருளிய தத்துவஞான வித்தகர்கள் பலருள், தலைசிறந்த ஒருவர் ஆவர். சங்கரர் (கி.பி. 788—820), இராமாநுசர் (கி.பி. 1017—1137), மத்வர் (கி.பி. 1199—1278) போன்ற தத்துவ உலகச் சான்றோர்களின் வரிசையில் வைத்து, மதித்துப் போற்றத் தகுந்த சிறப்புக்கு உரியவர், நம் உமாபதி சிவம்! இவர்தம் காலம், சுமார் கி.பி. 1270—1350 ஆகும் எனலாம். சங்கரரும் இராமாநுசரும் மத்வரும் வடமொழியிற் பேருரைகள் வகுத்துப் புகழ் மிக்குத் திகழ்ந்தவர்கள். அக்காலத்தில் தத்துவக் கருத்துக்களை வடமொழியில் எழுதுவது தான், பெரு வழக்காகவும், நாகரிகப் பாங்காகவும் இருந்து வந்தது. உமாபதி சிவம் வடமொழியிற் பெரும் புலமை கைவந்தவர். ''பவுஷ்கரம்' என்னும் ஆகமத்திற்கு விருத்தியுரை ஒன்றை வடமொழியில் உமாபதி சிவம் இயற்றியுள்ளார். தமிழில் சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினன்கனுள், சிவப்பிரகாசம்—திருவருட்பயன்—வினா வெண்பா—போற்றிப்பஃறொடை—கொடிக்கவி—நெஞ்சு விடு தூது—உண்மை நெறி விளக்கம்— சங்கற்ப நிராகரணம் என்னும் எட்டுச் சிறந்த நூல்கள் இவரால் இயற்றப் பெற்றுள்ளன. இவைகள் ''சித்தாந்த அட்டகம்'' எனப் பெரிதும் போற்றப் பெற்றுச் சிறந்து விளங்கி வருகின்றன. இதனால் உமாபதி சிவம் ''வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்தவர்'', ''தென்சொற் கடல் கடந்து வடசொற்கு எல்லை தேர்ந்தவர்'' என்பது தெளிவாம்.

**உமாபதி சிவத்தின் உபதேசம் :**

இத்தகைய உமாபதி சிவாசாரியர்பால், அன்பர் ஒருவர் சென்று அடி பணிந்து வணங்கி, ''ஐய! தமிழனைகப் பிறக்கும் நற்பேறு பெற்ற யான், தமிழ் நூல்கள் அனைத்தையும் கற்க விரும்புகின்றேன். எனக்கு அவற்றையெல்லாம் தாங்கள் கற்பித்தருள்க'' என்று இரந்து வேண்டிக் கொண்டார். அது கேட்டுத் திருவுளம் இரங்கிய உமாபதி சிவம், அவ்வன்பரை நோக்கி, ''கல்விக்குக் கரை இல்லை; கற்பவர் வாழ்நாளோ மிகச் சில; அச்சில நாள்களிலும், பிணி முதலியனவற்றுல் பெரும் பகுதி வீணே கழிந்து போகின்றது. இந் நிலையில் தமிழ் நூல்கள் அனைத்தையுமே கற்றுத் தேர்ச்சி பெறுதல் என்பது, எல்லார்க்கும் எளிதின் இயல்வதன்று. மேலும் இடைத் தெரிவு இன்றி எல்லா நூல்களையுமே சமநிலையில் வைத்து ஒருங்கு கற்றல் வேண்டும் என்பதில்லை. கற்க வேண்டுவன ஒரு சிலவற்றை மட்டுமே, தேர்ந்து எடுத்து ஆராய்ந்து கற்று அமைதல் சாலும். அதனுலேயே ''கற்பவை கற்க, கசடு அறக் கற்க'' என்று திருவள்ளுவரும் பணித்து அருளினர். ஆகவே, நீர் நம் அமிழ்தினும் இனிய தமிழ் மொழியின்கண் உள்ள, முதல்தரமான சிறந்த நூல்கள் சிலவற்றைக் கற்றுத் தேர்ச்சி பெறின், அதுவே எல்லா நூல்களையும் கற்றுத் தெளிந்த பயனையும் சிறப்பையும் அளிக்கும்'' என்று மிகவும் அருளுடன் கூறினர்.

அது கேட்ட அன்பர், மீண்டும் அவரை அடி பணிந்து, ''ஐய! தமிழ் நூல்கள் அளவின்றிக் கடல் எனப் பரந்து கிடக்கின்றன. அவற்றுள் எவை எவை மிக்க முதன்மையும்

சிறப்பும் உடையயவை என்று, திறந்தெரிந்து தேர்ந்தெடுக்கும் ஆற்றல் எளியேனுக்கு இல்லை. ஆதலின் தாங்களே அவற்றை எனக்காகத் தேர்ந்து எடுத்துக் கூறுதல் வேண்டும். மேலும் அவற்றுள் எதனை முன்னர்க் கற்றல் வேண்டும்? அதன் பின்னர் அடுத்துக் கற்கத் தகுவது யாது? என்று படிமுறையில், ஒவ்வொன்றாக வரிசைப் படுத்தியும் கூறியருளுதல் வேண்டும்'' என்று விண்ணப்பித்துக் கொண்டார். அப்போது உமாபதி சிவம் அவருக்குப் பின்வருமாறு உபதேசித்தருளினர்.

## (1) திருக்குறள் :

முதலில் தெய்வப் புலவர் இயற்றிய திருக்குறள் படிக்க! திருக்குறள் போன்ற ஒரு சிறந்த நூல், உலகிலேயே இல்லை. இரண்டு வரிகளில் அமைந்த குறள் என்னும் செய்யுள் அமைப்பில், எளிய இனிய தெளிவான நடையில், திருக்குறள் அமைந்துள்ளது. எல்லாப் பொருளும் இதன்பால் உள. இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லை. வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதி பற்றியே, பெரும்பாலான நூல்கள் கூறும். ஆனல் திருக்குறளோ, வாழ்க்கையின் எல்லாக் கூறுகளையும் பற்றி, மிக விரிவாகவும், தெளிவாகவும், சுவையாகவும் ஒருங்கிணைத்து விளக்குகின்றது. நீதி நூல்களுள் உலகிலேயே தலைசிறந்தது திருக்குறள். காலம் இடம் இனம் முதலியவற்றிற்கு ஏற்ப அவ்வப்போது மாறி மாறித் திரிந்து செல்லும் பிற நீதி நூல்கள் போலல்லாமல், என்றும் எங்கும் எதற்கும் மாருமல், பொய்யா மொழியாய்ப் பொலிந்து நிற்பது திருக்குறள்! அறம் பொருள் இன்பம் ஆகிய முப்பொருள்களையும், முற்றுக விளக்கும் ஒப்புயர்வற்ற நம் திருக்குறள் நூலை, நீர் முதலில் கற்றுணர்க.

## (2) திருவாசகம் :

திருக்குறள், உலகியல் வாழ்க்கை நூல். தமிழ் மொழியில் நம் மாணிக்கவாசகப் பெருமான் அருளிச் செய்த திருவாசகம், ஒரு பெரும் அருளியல் நூல். அதனைப் போன்ற உருக்கம் மிக்க பக்தி நூல், உலகில் ஒரு சிலவேயாகும். கல் மனத்தையும் கசிந்து உருகச் செய்து, கடவுளின் அருளைப் பெறுவதற்குத் துணை புரியும் அருளியல் நூல், திருவாசகம். ''வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி, நெஞ்சம் உருகி நிற்பவர்க் காண்கிலம். ஆனல் திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின், எத்தகையவரும் தம் கருங்கல் மனமும் கரைந்துருகக், கண்கள் தொடு மணற் கேணியிற் சுரந்து நீர்பாய, மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப்பு எய்தி, இறைவனுக்கு அடியவர் ஆவர்.'' திருவாசகம் ஓதியும் உருகாத ஓர் உயிர் இருக்குமாயின், அதனைக் கல் என்று கழறுதுமோ? மண் என்று வகுக்குதுமோ? இரும்பு என்று இயம்புதுமோ? ''திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்''. வாழையடி வாழை என நம் தமிழகத்தில் தோன்றிய அருட்பெருஞ் சான்றோர்கள் அனைவருமே, திருவாசகத்தினை ஓதி ஓதி, உணர்ச்சி பெற்று உயர்ந்து ஓங்கி உய்தி பெற்றுள்ளனர். ஆதலின் திருவாசகத் தமிழ் மறையினை ஓதி உய்க.

## (3) தொல்காப்பியம் :

ஒரு மொழிக்கு இலக்கணம் என்பது இன்றியமையாதது. கட்டிடத்திற்கு அடிப்படை போல, ஒரு மொழிக்கு மிகவும் இன்றியமையாதது இலக்கணம். இலக்கண வரம்பு இல்லாத மொழிகள், விரைவில் சிதைந்து தேய்ந்து உருமாறி மாய்ந்து அழிந்து போகும். உலகத்தில் சுமார் மூவாயிரம் மொழிகள் வழங்கி வரினும், இலக்கண இலக்கிய வளங்களாற் சிறந்து விளங்கிவரும் ''திருந்திய மொழிகள்'' மிகச் சிலவே. அவற்றுள்ளும் ''உயர்தனிச் செம்மொழிகள்'' எனத் தகுந்த சிறப்புடையயவை ஒருசிலவே. அவற்றுள்ளும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக நின்று நிலைபெற்று வழங்கி, இன்றளவும் உலகவழக்கு செய்யுள்வழக்கு என்னும் இரண்டிலும் சிறந்த உயிர்த்துடிப்புள்ள மொழியாக உலவி நிலவி வருவது, நம் தமிழ்மொழியேயாகும். இதற்குக் காரணம், நம் தமிழ்மொழியின் சிறந்த இலக்கண அமைப்பினுடைய திண்மையும் நுண்மையுமேயாகும். அத்தகைய திட்ப நுட்பம் அமைந்த சிறந்த இலக்கணமாகத் திகழ்வது, தொல்காப்பியம்! தொல்காப்பியம், இஞ்ஞான்றை அறிவியல் நெறியார்ந்த, விழுமிய முழுமணி போன்ற நூல்! பிறமொழி இலக்கண நூல்கள், எழுத்து சொல் சொற்றொடர் செய்யுளியல் போன்றவற்றை மட்டுமே விளக்கும். அவற்றால் உணர்த்தப்படும் பொருள் இயல் பற்றி, அவைகள் ஏதும் கூறுவதில்லை. ஆனல் தொல்காப்பியமோ, பொருள்களை எல்லாம் அகம் புறம் என இருகூருகப் பகுத்து, மனித வாழ்க்கைக்கே உரிய உயரிய இலக்கணத்தினை மிக விரிவாகவும் நுண்ணிதாகவும் வகுத்து உணர்த்துகின்றது. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றிய அரும்பெரும் நூல், தொல்காப்பியம். எழுத்து (இலக்கணம்) அறியார் கல்விப் பெருக்கம் அனைத்தும், எழுத்து (இலக்கணம்) அறிவார்க் காணின் இல்லையாகும். திருவள்ளுவரும் ''கண் என்ப வாழும் உயிர்க்கு'' என்று, இலக்கணம் கண்போன்று போற்றிப் பயிலத் தக்கது என்பதனை அறிவுறுத்தியுள்ளார். ஆதலின் தொல்காப்பியம் என்னும் நம் பழம்பெரும் தமிழ் இலக்கண நூலைப் போற்றிப் பயிலுக.

## (4) பரிமேலழகர் உரை :

ஆசிரியர்கள் பொதுவாக நூலாசிரியர், உரையாசிரியர் என இருவகைப்படுவர். உரையாசிரியர்களின் சிறப்பை நம்மிற் பெரும்பாலோர் மிகுதியாகப் போற்றுவதில்லை. உரை எழுதுதல் எளிதான செயல் என்று சிலர் கருதுவதுண்டு. ஆனல் அஃதொரு கடினமான, அரும்பெருஞ் செயலே ஆகும். உரையாசியர்களில் இருவகையினர் உண்டு. ஒருவகையினர் நூற்பொருளை விளக்கித் தெளிவிப்பர். மற்றொரு வகையினர் நூற்பொருளைக் கலக்கிக்

குழப்புவர்.(1) இவ்விரு வகையினரில் பின்னை யோரே பெரும்பான்மையும் மிகுதியாக உள்ளனர். எங்கோ எப்போதோ ஒருசிலர் மட்டுமே முன்னைய ஒருவகையினராகத் திகழ்வர்.

''பொருவருநூல் ஆசிரியர்,
பொருந்தும்உரை யாசிரியர்,
மருவும்இவர் இருவருமே
மாட்சிமிக உடையர்கண்டீர்!
இருவருமே இறையருளால்
இனியஒளி பெறுகின்றார்;
ஒருவர்இயற் றவும், ஒருவர்
உரைசெயவும் வருகின்றார் !''(2)

—தமிழாக்கம், ந.ரா.மு.

ஆதலின் நூலாசிரியர்களைப் போலவே, ஒரு வகையில் உரையாசிரியர்களும் பெரிதும் மதித்துப் போற்றத் தக்கவர்களாவர். சிறப்பாக, உரையாசிரியர்களுள் திருக்குறளுக்கு உரை வகுத்த பரிமேலழகர், மிக்க சிறப்புடையவர் எனலாம். வடமொழியிற் பெரும்புலமை பெற்ற வைணவப் பெருஞ்சான்றோராய், காஞ்சிபுரம் உலகளந்த பெருமாள் கோயிலில் பட்டராகப் பணிபுரிந்தவராயினும், பிறர் சிலர்போலக் கலவை நடையினைப் பின்பற்றாமல், தூய இனிய நல்ல தனித்தமிழில் உரை எழுதியுள்ள பரிமேலழகரின் பண்புநலம், பெரிதும் வியந்து போற்றத்தக்கது. திருக்குறள் போலவே, அவர் தம் உரையும், திட்பநுட்பங்கள் செறிந்து, சுருக்கமும் அரிய விளக்கமும் அமைந்து விளங்கும். பால் எல்லாம் நல்லாவின் பாலாகாது, பாரிலுள்ள நூலெல்லாம் திருவள்ளுவர் செய்த நூலாகாது; அதுபோலப் பாரிற் பரித்த உரை எல்லாம் பரிமேலழகர் செய்த உரைக்கு இணையாகாது. ஆதலின் திருக்குறளுக்குப் பரிமேலழகர் இயற்றிய உரையினை ஆராய்ந்து நுணுகிக் கற்க.

## (5) பெரியபுராணம் :

நம் தமிழ்மொழிக்கண் உள்ள நூல்களுள், நமது தமிழ்நாட்டின் நாடு நகரம் ஊர் காடு மலை ஆறு கடல் முதலியன அனைத்தையும் விவரித்து விளக்கும் நூல், பெரியபுராணம் ஆகும்! அஃது ஏனைய புராணங்கள் போல்வது ஒன்றன்று. ஓர் அரிய வரலாற்று ஆராய்ச்சி நூல்! கவிதைச்சுவை மிக்க காப்பிய நூல்! நம் தமிழர்களின் வாழ்க்கை நாகரிகம் பண்பாடு சமயம் தத்துவம் ஆகிய பலவற்றினையும் அழகுற விளக்குவது, பெரியபுராணம். அதன்கண் கூறப்பெறும் வரலாற்றுத் தலைவர்களாகிய அறுபத்து மூன்று நாயன்மார்களும், தமிழ்நாட்டில் தோன்றியவர்கள், வாழ்ந்தவர்கள். நம் முன்னோர்களாகிய தமிழ்ச் சான்றோர்கள். அவர்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில், பல்வேறு நூற்றாண்டுகளில் விளங்கியவர்கள். பல்வேறு குலத்தினராய், தொழிலினராய், நிலையினராய் வாழ்ந்தவர்கள். நற்பண்புகளுக்கெல்லாம் நல்ல நிலைக்களமாகத் திகழ்ந்தவர்கள். உயரிய கொள்கையும் ஒழுக்கமும் உடையவர்கள். குறிக்கோள்களுடன், குறையிலா நிறைவாழ்வு நடாத்தியவர்கள். அவர்கள் பெருமையால் தம்மையே நிகர்த்தவர்; பேணலால் அருளைப் பெற்றவர்; அருமையாம் நிலையில் நின்று, அன்பினால் இன்பம் ஆர்ந்தவர். அத்தகைய சைவ நாயன்மார்களின் தெய்விக வரலாறுகள் குறித்துச் சேக்கிழார் பெருமான் என்னும் தெய்விகக் கவிஞர் பெருந்தகையால், பாடப்பெற்ற அருள்நூலே பெரியபுராணம் என வழங்கி வருகின்றது. நம் தமிழகத்துத் திருக்கோயில்களும், திருமடங்களும், பெரியபுராணத்தின் அரிய விளைவும் பயனுமேயாகும். அத்தகைய சிறப்புமிக்க பெரியபுராணம், நம் மனோர் வையத்து வாழ்வாங்கு வாழ்தற்குரிய வழிகாட்டி நிற்பது. ஆதலின் அதனை முறையே அன்புடன் பயின்று ஒழுகிப் பயன்கொள்க!

## (6) சிவஞான சித்தியார் :

நமது தமிழ்மொழி, தெய்வத்தன்மை வாய்ந்த சிறந்த மொழி. இதனை ''ஞாலம் அளந்தமேன்மைத் தெய்வத் தமிழ்'' என்பர் சேக்கிழார். ''என்றும் உள தென்றமிழ்'' என்று, முன்னோர்கள் இதனைப் பெரிதும் புகழ்ந்து போற்றுவர். இத்தகைய நம் தமிழ்மொழி, இயல்பிலேயே தத்துவ அமைப்பும் நோக்கும் வாய்ந்தது. தொடக்கத்திலேயே எழுத்துக்களுக்குத் தத்துவ அடிப்படையில் 'உயிர்எழுத்து' 'மெய் (உடல்) எழுத்து' எனப் பெயர்அமைத்த சிறப்பு, நம் தமிழ்மொழிக்கே உரியதாகும். இங்ஙனம்தன் தொடக்கமே தத்துவ அமைப்பாகக் கொண்ட, நம் தமிழில் உள்ள தத்துவ நூல்களும், பக்தி நூல்களும் ஏராளமாகும். அவற்றுள் தலைசிறந்தது, சிவஞான சித்தியார் எனலாம். அது, சிவஞானபோதம் இயற்றிய மெய்கண்டதேவரின், மாணவர் ஆகிய அருள்நந்தி சிவாசாரியர் இயற்றியது. ''சிவத்துக்குமேல் இல்லை தெய்வம், சிவஞான சித்தியார்க்கு மேல் இல்லை நூல்'' என்பது பழமொழி. உலகிலுள்ள நூல்களின் பொருள்களையெல்லாம், ஓர்ந்து உணர்ந்து கொள்ளுவதற்குச் சிவஞான சித்தியாரில் வரும் விருத்தச் செய்யுள் ஒன்றின் பாதியே போதும் என்று பெரியோர்கள். இந்நூலை வியந்து புகழ்ந்து உரைப்பர். சங்க இலக்கியங்கள், திருமுறை நூல்கள், இலக்கண இலக்கியத் தருக்க நூல்கள், புறச்சமயநூல்கள் முதலிய பலவற்றையும் பிழிந்தெடுத்த சாரமாக அமைந்த அரும்பெரும்

---

(1) "We may first call to mind three competing statements, first the every day remark that language exists to express one's thoughts, next Tallyrand's well known mot that language exists to hide one's thoughts, and lastly Soven Kierkegaard's improvement of it, that language is used by many people to hide the fact that they have no thoughts."

—*Otto Jespersen*,
Mankind, Nation and Individual, p. 6

(2) "Both must alike from Heaven
derive their light,
Those born to judge,
as well as those born to write"

—*Alexander Pope*

நூல், சிவஞானசித்தியார்! சமய தத்துவ நூலேயாயினும், அது கவிதை வளமும் சுவையும் மிகுந்து பொலிந்து விளங்கும். மேற்குறித்த திருக்குறள், திருவாசகம், தொல்காப்பியம், பரிமேலழகர் உரை, பெரியபுராணம் ஆகிய பல நூற் கருத்துக்களேயும் ஏற்றபெற்றி தொகுத்து உணர்த்தும் சிறப்பு, சிவஞானசித்தியார்க்கு உண்டு. ஆதலின் அதனேயும் குருமுகமாகக் கற்றுத் தெளிந்து, இறையருள் பெறுக.

## முடிவுரை :

தமிழனுகப் பிறந்த தவப்பேறுடைய ஒவ்வொருவரும், தவருமல் தம்முடைய வாழ்நாளில், திருக்குறள்-திருவாசகம்-தொல்காப்பியம்-திருக்குறள்-பரிமேலழகர் உரை-பெரியபுராணம்-சிவஞான சித்தியார் என்னும் ஆறு நூல்களேயும் முறையே முயன்று பயின்று பயன் கொள்ளுதல், தலேயாய கடமையாகும். இந்த ஆறு இணேயற்ற நூல்களும், நம் ''தண்டமிழின் மேலாம் தரம்'' எனத் தகுந்த, தரமான சிறந்த நூல்களாகும். கடல்அனேய நம் தமிழ்மொழியின் ஆழம் அகலம் நீளம் பரப்பு அமைப்பு ஆகிய அனேத்தையும், அறிந்துணர்ந்து நலம் பெறுவதற்கு, இந்த ஆறு நூல்களேயேனும், தமிழ்மக்கள் இன்றியமையாது இனிது கற்றுணர்தல் வேண்டும் என்று, உமாபதி சிவாசாரியர் தம்மை அடைந்து பணிந்து வினவிய அன்பர் ஒருவர்க்கு அறிவுறுத்தியருளினர் என்பது வரலாறு. அதற்கேற்ப அளவற்ற தமிழ்நூல்கள் பலவற்றுள், இந்த ஆறு நூல்களேயேனும், நாம் நம் வாழ்நாளிற் கற்றுணர முயன்று உய்தி பெறுவோமாக!

——ஆசிரியர்

[ திருமலேக் கபாலீசுவரர் கேயிலில், 7—3—78 வெள்ளிக்கிழமையன்று, அறநிலேய ஆணேயர் திரு. M.K. பாலசுப்பிரமணியம், I.A.S. அவர்கள் தலேமையில், ''சிவஞான சித்தியார் விரிவுரைகள்'' தொடங்கியபோது, ''திருக்கோயில்'' ஆசிரியர் நிகழ்த்திய முதல் விரிவுரையினேத் தழுவியது. ]

## (வெண்பா)

வள்ளுவர்நூல், அன்பர்திரு வாசகம், தொல்காப்பியமே,
தெள்ளுபரி மேலழகன் செய்தஉரை,—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம், தொகுசித்தி யார்,ஆறும்
தண்டமிழின் மேலாம் தரம் !

—உமாபதிசிவம்

## ஓதுவார் பயிற்சி பெற்ற மூவருக்கு

ரூபா ஆயிரம் (1,000) மானியம்

தமிழ்க் கலேகளே வளர்க்கும் வகையிலும், தமிழறிஞர்களே ஊக்குவிக்கும் முறையிலும், ஓதுவார் பயிற்சி பெற்ற மூவருக்கு ஒவ்வோர் ஆண்டும் ஆயிரம் ரூபாய் வீதம் தமிழக அரசினரால் மானியம் வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் அறநிலேயத்துறையின் சார்பில் மொத்தம் 7 தேவாரப் பயிற்சிப் பாடசாலேகள் நடத்தப்படுகின்றன. இந்தப் பாடசாலேகளில் 197 மாணவர்கள், ஓதுவார் பயிற்சி பெறுகிருர்கள். ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாயை அறநிலேயத்துறை, ஓதுவார் பயிற்சிப் பள்ளிகளுக்காகச் செலவிடுகிறது. பயற்சிக் காலம் ஐந்து ஆண்டுகளாகும். திருவெண்காடு, திருப்புகலூர், திருக்கடவூர், திருவாரூர், திருக்களர், பழனி, மயிலே ஆகிய 7 இடங்களிலும் ஓதுவார் பயிற்சிப் பள்ளிகள் உள்ளன. இந்தப் பயிற்சிப் பள்ளிகளில் ஐந்து ஆண்டுகள் முறையாகப் பயிற்சி பெற்று, முதல் மூன்று சிறந்த மாணவர்களாகத் தேர்வு பெற்று, அவர்கள் வேலேயில்லாமல் அவதிப்படுவார்களேயானல், அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் மானியம் வழங்க ஆணேயிடப்பட்டுள்ளது. ஒவ்வோர் ஆண்டும் மூன்று மாணவர்கள் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு இந்த மானியம் வழங்கப்படும்.

# சமயம் பரப்பிய சான்றோர்*

[ந.ரா. முருகவேள், M.A., M.O.L.]

## முன்னுரை:

நமது பாரத தேசத்தின் பழம்பெரும் தலங்களுள், கன்னியாகுமரி மிகவும் சிறந்த ஒரு புண்ணியத் தலமாகும். ''தென்குமரி வடபெருங்கல் குணகுடகடல் ஆயெல்லை'' எனப் புறநானூறும்; ''நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும், தமிழ் வரம்பு அறுத்த தண்புனல் நன்னாடு''—''குமரியொடு வடஇமயத்து ஒரு மொழி வைத்து உலகாண்ட இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்'' எனச் சிலப்பதிகாரமும்; இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே புகழ் பெற்றிருந்த கன்னியாகுமரியின் சிறப்பினைக் குறிப்பிடுகின்றன.

## குமரிமுனையிற் புனித நீராடல்:

கன்னியாகுமரி முனையில் வந்து நீராடுதல் ஒருபெரும் புண்ணியச் செயலாக, மிகத் தொன்னெடுங் காலம் முதலே கருதப்பெற்று வந்துள்ளது. தலைச்செங்காடு என்னும் ஊரைச் சார்ந்த மாடலமறையோன் என்னும் அந்தணன், குமரியம் பெருந்துறை கொள்கையிற் படிந்து நீராடினன் என்று, சிலப்பதிகாரம் கூறுகின்றது.

''வாரணுசிஓர் மறையோம் பாளன்
ஆரண உவாத்தி அபஞ்சிகன் என்போன்
பார்ப்பனி சாலி காப்புக்கடை கழிந்து
தென்திசைக் குமரி ஆடிய வந்தாள்''

என்று, மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனுர் இயற்றிய மணிமேகலை என்னும் காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது.

சீவகசிந்தாமணி என்னும் செஞ்சொற் காப்பியத்தில், சுரமஞ்சரி என்னும் தலைமகளைச் சேர விரும்பி, முதுமை வடிவம்கொண்டு மறைந்து வந்த சீவகனை, அவள் 'இத்துணை முதுமையுற்றுத் தளர்ந்த நீர், இங்கு எதன் பொருட்டு வந்தீர்?' என்று வினவியபோது, 'யான் கன்னியாகுமரி முனையிற் புனித நீராடப் போந்தேன்' எனவும், 'குமரியாகிய உன்னை அடைந்து இன்புற்றுத் திளைக்க வந்தேன்' எனவும் இருபொருள் அமைய,

''வந்த வரவு என்னை?என
வாட்கண் மடவாய்கேள்!
சிந்தை நலிகின்ற
திருநீர்க் குமரிஆட;
அந்தில் அதின் ஆயபயன்
என்னை? மொழி கென்றுள்;
முந்தி நலிகின்ற முது
மூப்பொழியும் என்றுன்''

இவ்வாறே அழகனாகிய முருகன், வள்ளியம்மையை அடைய விழைந்து, கிழவனாக வேடம் கொண்டு வந்தபோது, வேட்டுவர் தலைவனாகிய நம்பிராசன், 'தாங்கள் வேண்டுவது யாது?' என வினவ, அதற்கு விடையாக முருகன்,

''ஆண்தொழிலின் மேதகைய
அண்ணல்! இது கேண்மோ!
நீண்டதனி மூப்பகல,
நெஞ்சம் மருள்நீங்க,
ஈண்டுநும் வரைக்குமரி
எய்தி இனிதாட,
வேண்டி வருகின்றனன்,
மெலிந்து கடிது என்றுன்''

என்று, கந்தபுராணத்திற் கச்சியப்ப சிவாசாரியார் கவின்மிகவும், நயம்அமையவும் பாடியருள்கின்றுர்.

''நீலத் திரைக்கடல் ஓரத்திலே நின்று
நித்தம் தவம் செய் குமரி எல்லை,
வட மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ் நாடு''

என்று, நமது தேசிய அமரகவி சுப்பிரமணிய பாரதியார் அவர்களும், கன்னியாகுமரியின் பெருமைகளைத் தமது கவிதைகளிற் புகழ்ந்து பாடியுள்ளார்.

## சமயப் பிரசாரம்:

இவ்விலக்கியக் குறிப்புக்கள் எல்லாம், கன்னியாகுமரி முனையில் நீராடுதல், மிக்க பெரும் புண்ணியச் செயலாகப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே, எல்லாராலும் கருதப்பெற்று வந்தமையினைத் தெளிவுறுத்துகின்றன. இத்தகைய பெருமைமிக்க கன்னியா

* கன்னியாகுமரி தேவஸ்வம் அரங்கில், காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள் முன்னிலையில், தமிழக ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் துவக்கி வைக்க, 25, 26-3-'78 தேதிகளில் நடைபெற்ற, இந்து மதத் தலைவர்கள்-சமயப்பிரசாரகர்கள்-புலவர்-கவிஞர்-எழுத்தாளர்கள் மாநாட்டில், நிகழ்த்திய சொற்பொழிவைத் தழுவியது. —ஆசிரியர்.

குமரியில், காஞ்சிகாமகோடி பீடம் ஸ்ரீஆசாரிய சுவாமிகள் அவர்களின் அருளாசியினுல், நம் இந்துமத மாநாடு நிகழ்வது, பெரிதும் பொருத்தமும் சிறப்புமாகும். இந்நாளில் எதற்குமே தீவிரமான பிரச்சாரம் தேவைப்படுகிறது. ஆதலின், நமது பழம்பெரும் இந்து சமயத்திற்கும் முறையான சிறந்த நல்ல ஆற்றல்மிக்க பிரச்சாரம் தேவையேயாகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

## திருஞானசம்பந்தர்:

முதன்முதல் நமது தமிழ்நாட்டில் சமயப் பிரச்சாரத்தின் தேவையினைத் தெளிவுற உணர்ந்து தீவிரமாக முன்னின்று முயன்று சமயப்பிரச்சாரம் செய்தருளியவர், திருஞான சம்பந்தப் பெருமானே யாவர். 'மூலையிற் கிடந்த சமயத்தை மக்கட் சமுதாய முற்றத்திற்குக் கொண்டுவந்து பரப்பிய சான்றோரும், தவப்பெருந் தலைவரும் திருஞானசம்பந்தரே எனலாம். அக்காலத்தில் அவரைச் சூழ்ந்து, பல்லாயிரம் தொண்டர்கள் உடனிருந்து வந்ததாகப் பெரியபுராணம் கூறுகின்றது.

''பட்டைத் துவர்ஆடைப் படிமம் கொண்டாடும்
முட்டைக் கட்டுரை மொழிவ கேளாதீர்'' (1)

''மிண்டர் மிண்டாய்ப் பேசிய
பேச்சு மெய்யல்ல'' (2)

''தடுக்கமரும் சமணரொடு
தர்க்கசாத் திரத்தவர்சொல்
இடுக்கண்வரும் மொழிகேளாது
ஈசனையே ஏத்துமின்கள்'' (3)

''ஏதுக்க ளாலும் எடுத்த
மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா! சுடர்விட்டுளன்
எங்கள் சோதி!
மாதுக்கம் நீங்கல் உறுவீர்!
மனம் பற்றி வாழ்மின்!
சாதுக்கள் மிக்கீர் இறையே
வந்து சார்மின்களே! (4)

என்றெல்லாம், நாட்டின் மூலை முடுக்கர் தோறும் சென்று, பொதுமக்களிடையில் முதன் முதற் புதுமையாகச் சமயப்பிரச்சாரம் செய்து வழிகாட்டி, நம்மை உய்வித்தருளியவர், கி.பி. 7-ஆம் நூற்றுண்டில் (சுமார் கி.பி. 630-780இல்) வாழ்ந்திருந்த, ஞானசம்பந்தப் பெருமானே யாவர். அவர் அருளிச் செய்து இப்போது கிடைத்துள்ள மூவாயிரத்துக்கு மேற்பட்ட தேவாரப் பாடல்கள், சிறந்த சமயப் பிரச்சார இலக்கியங்களாகும், என்பது தேற்றம்.

## சங்கரர்:

சம்பந்தருக்குப் பின்னர்ச் சமயப் பிரசாரம் செய்வதில் சலியாது உழைத்தவர், சங்கரர் பெருமான். இவர் வாழ்ந்திருந்த காலம் கி.பி. 788-820 என வரலாற்று அறிஞர்கள் ஆராய்ந்து வரையறுத்துள்ளனர்.

''தருண மங்கலை உனது சிந்தை
தழைந்த பால்அமுது ஊறினுல்
அருண கொங்கையில் அது கவி
அலைநெடுங் கடல் ஆகுமோ?
வருணம் நன்குறு கவுணியன்
சிறுமதலை அம்புயல் பருகியே,
பொருள்நயம்பெறு கவிதை என்றெரு
புனித மாரி பொழிந்ததே''

என்று சௌந்தரிய லகரியில், சங்கரர் சம்பந்தரைக் குறிப்பிட்டுப் புகழ்ந்து போற்றியிருக்கக் காண்கின்றேம். பாரததேசத்தின் தென் கோடியில், காலடியில் தோன்றிய சங்கரர், அதன் வடகோடியிலுள்ள காசுமீரம் வரையில்,

''மேல்ஒரு பொருளும் இல்லா
மெய்ப்பொருள் வல்லும் தாங்கிக்
கால்தரை தோய நின்று
கட்புலக் குற்ற தம்மா''

என்றுற்போலத், தம் கால்தரை தோய நடந்துசென்றே, இந்து சமயப்பிரச்சாரம் செய்தருளினுர். சங்கரர் ஒருபெரும் அறிஞர் ( Savant ), கவிஞர் ( Poet ), அருளாளர் ( Saint ), தத்துவஞானி ( Philospher ) சித்த புருடர் ( Mystic ) சீர்திருத்தக்காரர் ( Reformer ) என்னும் பல்வேறு நிலைகளில், சிறந்து விளங்கிப் பெரும் பணியாற்றினுர். பிரமசூத்திரம் உபநிடதம் பகவத்கீதை விஷ்ணு சகஸ்ரநாமம் முதலியவற்றிற்குப் பேருரைகள் இயற்றினுர். ஆனந்தலகரி, சௌந்தரிய லகரி, தட்சிணுமூர்த்தி தோத்திரம், சுப்பிரமணிய புஜங்கம், ஆத்மபோதம், பஜகோவிந்தம் முதலிய பல துதிநூல்களை அருளிச் செய்தார். பௌத்தம் காபாலிகம் சாக்தம் முதலிய சமயங்களின் மாசுகளையெல்லாம் போக்கியருளினுர். சைவம் வைணவம் சாக்தம் காணுபத்தியம் கௌமாரம் சௌரம் என்னும் அறுவகைச் சமயங்களையும் நிலைநிறுவினுர். 'ஷண்மத ஸ்தாபனுசாரியர்' என்னும் சிறப்புப் பெற்ருர். நமது இந்து சமயத்திற்குச் சங்கரர் ஆற்றிய தொண்டுகள் அளப்பரியன; மிகப் பெரிதும் போற்றற்பாலன.

## விவேகானந்தர்:

சம்பந்தர் சங்கரர் ஆகிய இருபெரும் அருட் சான்றேர்களுக்குப் பின்னர், நமது இந்து சமயத்திற்கு இணையற்ற பயன்மிக்க பிரச்சாரம் செய்தவர், சுவாமி விவேகானந்தர். சம்பந்தர் தமிழ்நாட்டில் தமிழில் சமயப்பிரச்சாரம் செய்தார். சங்கரர் நம் பாரததேசம் முழுவதும் யாத்திரை புரிந்து, சம்ஸ்கிருதத்தில் பிரச்சாரம் செய்தார். விவேகானந்தரோ, கடல்கடந்த அயல்நாடுகளுக்கும் சென்று, உலகளாவிய நிலையில், ஆற்றல் மிகவும், இக்காலத்துக்கு ஏற்பவும், ஆங்கிலத்தில் அழகுறப் பிரச்சாரம் புரிந்தார். 12-1-1863-ல் தோன்றி, 39 ஆண்டுகள் மட்டுமே நிலவுலகில் வாழ்ந்து, 1-4-1902-ல் மறைந்த சுவாமி விவேகானந்தர் செய்தருளிய செயற்கருஞ் செயல்கள் பலப்பல.

சுவாமி விவேகானந்தர் ''பரிவ்ராஜகர்'' என்னும் நிலையை மேற்கொண்டு இமயம்

முதற் குமரிவரை இந்திய நாடு முழுவதும் பல பகுதிகளுக்கும் யாத்திரை செய்தார். கன்னியாகுமரிக்கு வந்து, நம் பகவதியம்மனைச் சிறப்புற வழிபட்டார். இங்கே கரைக்கு அருகிற் சிறிதுதொலைவில், நம் கண்ணெதிரில், கடல்சூழ அமைந்திருக்கும் கவின்மிகு பாறைக்குக் கடலில் நீந்திச் சென்றார். அதன் மீது தியானத்தில் அமர்ந்து, சிலநாட்கள் மோனத் தவம் புரிந்தார். இப்போது அப்பாறையில் அவர்தம் திருக்கோயில் அமைக்கப்பெற்றுள்ளது. அத் திருக்கோயிலில் விவேகானந்தரைக் கண்டு வணங்கப் பல்லாயிரம் பக்தர்கள் நாள்தோறும் வந்து செல்கின்றனர். கன்னியாகுமரி அம்மனின் அருளால், சுவாமி விவேகானந்தருக்கு முழுநிறைவான மெய்யுணர்வு அரும்பி நிரம்பி மலர்ந்தது. நிர்விகற்ப சமாதி நிலையிலும், விவேகானந்தர் இங்கேயே முழுநிறைவான பரிபூரண சித்தியை அடைந்தார். நம் கன்னியாகுமரி முனையில்தான். சுவாமிகளுக்கு ஒருபெரும் புத்துணர்வும், ஒப்பற்ற தவஆற்றலும், ஆன்மிக அருளனுபவ சித்தியும், பிறவும் கிடைத்தன.

அன்பில் புத்தர், அறிவில் சங்கரர், செயலாண்மைத் திறனில் திருஞான சம்பந்தர், தொண்டுநெறியில் திருநாவுக்கரசர், ஞானத்தில் மணிவாசகர், தோற்றப் பொலிவில் சுந்தரர், பக்திமைப் பண்பில் சேக்கிழார், சமரச உணர்வில் தாயுமானவர், பொதுநோக்கில் திருவள்ளுவர், தவவாழ்வில் இளங்கோவடிகள், இரக்கம் மிக்க இனிய பண்பில் இராமலிங்க அடிகள், அருளனுபவத்தில் ஆழ்வார்கள் போன்றவர், என்றெல்லாம் கூறத்தக்கநிலையில் விவேகானந்தர் பெருந்தகையின் மாட்சிமை, வீறுபெற்று விளங்குகின்றது.

1893-ஆம் ஆண்டில், அமெரிக்க நாட்டில் சிகாகோ நகரத்தில் நடைபெற்ற உலகசமயப் பேரவையிற் கலந்துகொண்டு, சுவாமிகள் அரியதொரு சொற்பொழிவு ஆற்றினார். அம்முதற் சொற்பொழிவே, அவர் தம் அனைத்துலகப் பெரும் புகழுக்குக் காரணமாய் அமைந்து வழி வகுத்தது. இந்து மதத்தின் பழமை, பெருமை, பரந்தமனப்பான்மை, இந்திய மக்களின் சிறந்த சமயப் பெறுமை, உயர்ந்த சமரச ஞானம், பிறசமய மக்களுக்கு இந்திய தேசம் புகலிடம் வழங்கி அன்புகாட்டி உதவி ஆதரித்தமை, ஆகிய பலவும் குறித்து, அயல் நாடுகளில் விவரித்து விளக்கினார். இந்து சமய மேன்மையைச் சுவாமிகளால் யாவரும் இனிது உணர்ந்தனர். இன்று உலகின் பல்வேறு பகுதிகளில், சுவாமிகள் நிறுவிய இராமகிருஷ்ணமடத்தின் கிளை நிலையங்கள் நூற்றுக்கும் மேற்பட உள்ளன.

''திறமான புலமைஎனில் வெளிநாட்டார்
அதைவணக்கம் செய்தல் வேண்டும்''

என்று பாரதியார் பாடியுள்ளபடி, மாக்சுமுல்லர் ( Max Muller ), பால்ட்யூசன் ( Paul Duessen ) எட்வர்ட் கார்ப்பெண்டர் (Edward Carpenter) பிரடெரிக் மையர்ஸ் ( Frederick Myers ), ஆல்டஸ் அக்ஸ்லி (Aldous Huxley) முதலிய மேலைநாட்டார் பலரும், சாலவும் வியந்து போற்றும் மேதகவில், விவேகானந்தசுவாமிகள் விளங்குகின்றார்.

## முடிவுரை:

சம்பந்தர் சங்கரர் விவேகானந்தர் ஆகிய மூவருக்கும் இடையில் பலதிற ஒப்புமைப் பண்புகள், ஒற்றுமை நலங்கள், காணப்படுகின்றன. மூவருமே அம்பிகையின் அருள்பெற்றவர்கள். சம்பந்தர் அம்பிகையின் அருளால் ஞானப்பால் உண்டார். சங்கரர் சௌந்தரிய லகரி பாடி அம்பிகையின் அருளைப் பெற்றார். விவேகானந்தர்க்கு நம் பகவதியம்மை அருள் பாலித்தாள்.

''அவளால் வந்த ஆக்கம்
இவ் வாழ்க்கை எல்லாம்''

என்று சிவஞான சித்தியார் கூறுவதுபோல, இம் மூவரும் பெற்ற சிறப்புகள் அனைத்தும், அம்பிகையின் அருளாலேயே விளைந்தனவாகும். அம்பிகையின் அருள் பெற்ற அன்பர்களும் அருளாளர்களுமே, சமயப் பிரச்சாரம் செய்யத்தக்கவர்கள் ஆவர்போலும்! இனி, இம் மூவருமே இளைஞர்கள், முதிஞர்கள் அல்லர் என்பதும் கருதுதற்கு உரியது. சம்பந்தர்க்கு உயது 16, சங்கரர்க்கு 32, விவேகானந்தர்க்கு 39. சமயப் பிரச்சாரத்திற்கும், சமய வளர்ச்சிக்கும் இளைஞர்களின் தொண்டும் பங்கும் இன்றியமையாதன என்பதனையே, இவ்வுண்மை செவ்விதின் தெளிவிக்கின்றது எனலாம்.

நமது பெருமதிப்பிற்கும் வணக்கத்திற்கும் உயரி காஞ்சி ஆசாரிய சுவாமிகள் அவர்கள், கவிஞர் புலவர் எழுத்தாளர் பேச்சாளர் பிரச்சாரகர் பத்திரிகையாளர் ஆகியவர்களுக்காக இங்கு இம்மாநாட்டைக் கூட்டியுள்ளார். ஒருவகையில் நோக்கினால் சம்பந்தரைக் கவிஞர் புலவர் எனலாம். சங்கரர் பாஷ்யங்கள் எழுதியவராதலின், அவரை எழுத்தாளர் எனக் கருதலாம். பேச்சாளர்-பிரச்சாரகர்-பத்திரிகையாளர் என்று, நாம் விவேகானந்தரைக் கொள்ளுதல் பொருந்தும். மூவருமே சிறந்த செயல் வீரர்கள், தூய சீர்திருத்தக்காரர்கள், சமய மறுமலர்ச்சிக்காகப் பெரிதும் பணியாற்றியவர்கள். ஆதலின் இம்மூவரையும் சிறப்புமுறையில் முன்மாதிரியாகக் கொண்டும், பின்பற்றிப் போற்றியும், தூய நல்ல சமய ஞானம் சமய ஒழுக்கம் ஆகியவைகளைக் கடைப்பிடித்தும், இங்குக் குழுமியுள்ள நாம் அனைவரும், நமது இந்து சமய வளர்ச்சிக்கும், உலகப் பொதுநலத்திற்கும், இயன்ற அளவு தொண்டுகள் ஆற்றி நலம்பெற, அன்னை கன்னியாகுமரியின் அருளும், ஆசாரிய சுவாமிகளின் அருளாசியும் நமக்குத் துணைபுரிவன வாகுக!.

# உலோப குணம்

'அருண்மொழியரசு' திருமுருக இருபானந்தவாரியார் சுவாமிகள்

மனிதனிடமுள்ள தீய குணங்களில் மிகவும் கொடிய தலையாய தீக்குணம் உலோபம். ஒருவனிடத்தில் ஆயிரம் நற்குணங்கள் இருந்து, உலோப குணமும் உடன் இருக்குமாயின், அத்தனை நற்குணங்களையும் கீழே அழுத்தி, உலோப குணம் மேல் நின்று அவனை உலகம் பழிக்கச் செய்யும். தாடகை என்ற கொடிய அரக்கி ஒருத்தியே, வளமையான மருதவனம் முழுவதையும் அழித்து விட்டாளாம். அது எது போல்? உலோப குணம் ஒன்றே சகல நற்குணங்களையும் அழிப்பது போலாகும். இதனைக் கம்ப நாடர் மிக அழகாகத் தமக்கேயுரிய அரிய இனிய தமிழால் கூறுகின்றார்.

உளப்பரும் பிணிப்புறு உலோபம் ஒன்றுமே
அளப்பருங் குணங்களை அழிக்கு மாறுபோல்
கிளப்பருங் கொடுமைய அரக்கி கேடிலா
அளப்பரு மருதவைப் பழித்து மாற்றினாள்

வானளாவி ஓங்கி வளமையுடன் வளர்ந்துள்ள மூங்கில் காட்டில் நெருப்புத் தோன்றி, அவ்வளமை மிக்க மூங்கில் வனத்தை அழிப்பது போல, ஒருவனிடத்திலே தோன்றிய உலோபம், அவனை முழுவதும் அழித்துவிடும். உலோப குணம் ஒன்றினாலேயே அடியுடன் அழிந்தவன் துரியோதனன். ஓங்கி உலகளந்த உத்தமன், கண்ணபிரான் கையேந்தி ஐந்து வீடுகள் மட்டும் கேட்டார். ஆற்றோரமாக வேகாத செங்கல் வைத்து உளுத்துப் போன மூங்கிலை மேலே போட்டு, ஓடு வேய்ந்து ஐந்து வீடுகளை அமைத்துத் தந்திருந்தால் அவன் குலத்துடன் அழிந்திருக்க மாட்டான். பாதி ராஜ்யம் தரக் கடமைப்பட்ட அவன், ஐந்து வீடு தந்திருக்கலாந் தானே? அந்த மூடன் உலோப குணத்தால் ''ஊசி குத்துகின்ற இடமேனும் தரமாட்டேன்'' என்றான். அதனால் அழிந்தான். அவன் மட்டுமா மாண்டான்? ஒரு அட்சரோணி சேனை 2,18,700 (இரண்டு லட்சத்துப் பதினெண்ணாயிரத்து எழுநூறு) வீரர்கள் கொண்டது. இத்தகைய எண்ணிக்கையுடன் பதினொரு அட்சரோணி சேனைகளுடனும், உடன்பிறந்த தொண்ணூற்றென்பது தம்பியருடனும், தன் உறவினருடனும் மாய்ந்தான். என்ன அவலம்? ஐந்து சிறு வீடுகளைத் தந்திருந்தால் இந்த அழிவு அவனுக்கு வந்திராது அல்லவா?

எனவே நற்குணங்கள் எத்தனை எத்தனையிருப்பினும், உலோப குணம் இருப்பின், அத்தனை நற்குணங்களையும் அழுத்தி, அவனை அடியுடன் அழிக்கும். நன்கு செந்தமிழைத் தேர்ந்த புலவர் ஒருவர், முத்துநாகப்பன் என்ற பெருந் தனவந்தனிடம் போனார். வந்தவரை ''வாரும்; இரும். உணவு அருந்தும்'' என்று கூறாமல், ஒரு குவளைத் தண்ணீரும் தராமல், அந்த உலோபி அவரை அசட்டை செய்தான். உடனே புலவர் பெருமானுக்குச் சீற்றம் பொங்கியது. அவர் மலர் வாயிலிருந்து ஒரு தமிழ்க் கவி வெளி வந்தது. அதுதான் இது.

உரகத்திலே கிடப்பான் சக்ரபாணி, உயர்ந்தகும்பக்
கரகத்திலே கிடப்பான் குறுமாமுனி, கன்னியர்கள்
விரகத்திலே கிடப்பான் காமராசன், மிகுந்தஎழு
நரகத்திலே கிடப்பான் கொழுமூர்முத்து நாகப்பனே

இனி ஒருவனிடத்தில் ஆயிரம் ஆயிரம் தீய குணங்கள் இருந்து, அள்ளி வழங்கும் வள்ளண்மை என்ற ஒரு நற்குணம் இருக்குமாயின், அத்தனைத் தீக்குணங்களையும் வெளிக்காட்டாமல், தரும குணம் மேலோங்கி நின்று, அவனுக்குப் புகழ் தேடிக் கொடுக்கும். பொன்னையும், பொருளையும், நிலங்களையும், தோட்டங்களையும் வறியார்க்கு வழங்கினார்கள் பலர். பாரி முந்நூறு கிராமங்களைக் கபிலர்க்குத் தந்தான். தன் பொன்தேரை முல்லைக்கு ஈந்தான்.

தனக்கு அன்னியமான பொருள்களைக் கொடுக்க மனம் இசையும். ஆனால் தான் இனிது வளர்த்த உடம்பைத் தர மனம் இசையாது. தன்பால் அடைக்கலம் புகுந்த, கேவலம் ஒரு புறவுக்காகச் சிபி என்ற வேந்தன், தன் உடலில் தசைகளை அறுத்து அறுத்துத் துலாவில் வைத்துத் தானே அத்துலாவில் ஏறினன். இந்த வள்ளன்மையைக் கண்டு இமையவர் வியந்தனர்.

''எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன்''

என்று கண்ணகி சிறப்பித்துக் கூறினாள்.

இதனினும் மேலாக ஒருவர் செய்தார். அவரை நாம் எங்கே சிந்திக்கின்றோம்? ஆ! எத்துணைப் பெரிய தியாகம்'. அன்புக்கு உறைவிடமான ததீசி முனிவர், அமரர்கட்கு என்புந் தந்து புகழ் பெற்றார். ததீசி முனிவர் தன் உடம்பை ஒரு பொருளாக மதித்தாரில்லை. பாலுந் தேனும் பழமும் பாயசமும், வேளை தவறாமல் உண்டு இந்த உடம்பை வளர்க்கின்றோம். விதம் விதமான ஆடைகள். பளபளக்கும் அணிகலன்கள் ; எத்தனை அழகுகள் செய்து நிலைக்கண்ணாடியில் கண்டு களிக்கின்றோம். இத்தகைய உடம்பை, நம்முடையதென்று நாம் எண்ணுகின்றோம். அதே நேரத்தில் இதனை நமது என்று நாய் கூறுகின்றது ; நரி நமது என்று நவில்கின்றது. இயமன் என்னது என்று இயம்புகின்றான். பேயும் நோயும் தமது என்று பேசுகின்றன. ஆதலால் இவ்வுடம்பு யாருக்குச் சொந்தம்?

''நாய்நம தெனநரி நமதெனப் பிதா
தாய்நம தெனநமன் தனதெனப்பிணி
பேய்நம தெனமனம் மதிக்கும் பெற்றியோ
லாய்நம தெனப்படும் யாக்கை யாரதே?''

''நடுத்தயா விலார்தமை நலியத் துன்பநோய்
அடுத்தயா வருந்திரு அடைய யாக்கையைக்
கொடுத்தயா அறம்புகழ் கொள்வனே எனில்
எடுத்தயாக் கையின்பயன் இதனில் யாவதே''

என்று ததீசி முனிவர் இனிக்கச் சொல்லி, உவந்து தன்னுடைய என்பை ஈந்தருளினார், இதனைத்தான் திருவள்ளுவர்,

''அன்பிலார் எல்லாம் தமக்குரியர்! அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு''


என்று கூறியருளினார். இத் திருக்குறளில் ததீசி முனிவர் இமையவர்க்குத் தமது முதுகு எலும் பினை வழங்கிய குறிப்புளது. ததீசி முனிவர் தந்த முதுகு எலும்பை இந்திரன் வஜ்ராயுத மாகச் செய்து, அசுரரை வென்று பெரிதுவந்து வாழ்ந்தான்.

கொடைக் குணம் பல தீமைகளை மறைத்து விடும் என்று முன்னே சிந்தித்தோம். உடம் பிலே உள்ள படை, சொறி முதலிய குற்றங் குறைகளை ஒரு பட்டுச்சட்டைமறைத்துவிடுமாப் போல், தீமைகள் யாவையும், தரும குணம் மறைத்துவிடும் என்பதற்குச் சான்றாக நின்ற னன் கர்ணன்.

கர்ணன் நல்லவன் அல்லன். துரியோத னன், பாண்டவர்களைப் பல கொடுமைகள் செய்தான். பீமனைக் கயிற்றில் கட்டிக் கங்கை யில் எறிந்தான். தூங்கும்போது அரவினங்களை ஏவிக் கடிப்பித்தான். உண்ணும் உணவில் நஞ்சு கலந்து கொடுத்தான்; ஆற்றில் கழு நிறைத்துக் குதிக்குமாறு செய்தான் ; குடி யிருக்கும் வீட்டில் கொள்ளி வைத்தான் ; சூது ஆடினான்; மாது நல்லாளை மானபங்கம் புரிந் தான். இத்தனைக் கொடுமைகள் செய்த துரி யோதனனை, ஒரு முறையேனும் கர்ணன் தடுத்து அறவுரை பகர்ந்தானில்லை. அக்கொடு மைகள் அனைத்துக்கும் உடன் இருந்து உதவி செய்தான்.

அரசவையில் அபலையாக நின்று அழும் யாக பத்தினியைப் பார்த்து, ''திரௌபதை யே! உன் கணவர்கள் அடிமைகளாகி விட்டார் கள். இங்குள்ள மன்னர்களில் ஒருவனை நீ கணவனாக வரித்துக் கொள்'' என்று வாய் கூசா மல் கூறினான். இங்ஙனம், பலப்பல தீக்குணங்கள் நிறைந்த கர்ணனை உலகம் புகழ்கின்றது. என்ன காரணம்? அவன் வரையாது வழங்கினான். பொன்னும் பொருளும் ஈந்து அவன் இரு கரங் களும் சிவந்தன. தன் உயிர்க்கு ஆதாரமாக இருந்த கவச குண்டலங்களை ஈந்தான். ஆத லால் கொடைக் குணம், கர்ணனுடைய தீமை களை மறைத்துவிட்டன.

ஆதலால் பல நற்குணங்களை மறைப்பது, உலோபம். பல தீக்குணங்களை மறைப்பது ஈகை. எனவே மக்கள் உலோபத்தை விடுத்து, ஈகையை மேற்கொண்டு, புகழும் புண்ணியமும் பெற்று, இகபர நலன்களைப் பெறுவார்களாக!



காஞ்சிபுரம் குமரகோட்டம் அருள்மிகு முருகன் திருக்கோயிலில், கிருத்திகை விழாவில், அறநிலைய ஆணையர் திரு. M. K. பாலசுப்பிரமணியம், I.A.S. அவர்கள் தலைமையில், துணையாணையர் திரு. R. அருச்சுனன், BA., அவர்கள் உரையாற்றுதல்.

# திருச்சிற்றம்பலக் கோவையார்

(முற்றொடர்ச்சி)

(18) வரைபொருட் பிரிதல்:

[தலைவன் தலைவியை வரைந்து திருமணம் செய்து கொள்ளுதற்காகப் பொருள் தேடிக் கொண்டுவரப் பிரிந்து செல்லுதல்.]

**தோழி:** தலைவனே! எம் தலைவியை நீ மணந்து கொள்ளுதற்குரிய ஏற்பாடுகளுடன் வருவதற்காக, அவளது தாய் தந்தையர்களிடம் சென்று தலைவியை மணந்து கொள்ளுதற்குத் தரவேண்டிய பரிசப் பொருள் யாது? என்று, கேட்டு வரும்படி நீ என்னைப் பணிக்கின்றாய். எம் தலைவியை மணந்து கொள்ள விரும்பி நீ மிகவும் குறையிரந்து நிற்பது கருதியும்; நின்னுடைய கல்வியின்மிகுதி-செல்வச்செழிப்பு-குலத்தின்மேன்மை-மணம் பேசுவதற்காக நீ எங்கள்பால் அனுப்பி வைத்தச் சான்றோர்களின் பெருந்தகைமை-காதலர்களுக்கு இடையில் உள்ளப் பொருத்தம் அமைந்திருக்குமாயின், காதலனுக்குக் காதலியை மறுக்காமல் கொடுக்க வேண்டும் என்னும் உலகியல் நீதி ஆகியவற்றைக் கருதியுமே, ஒருகால் எங்கள் தலைவியின் தாய் தந்தையர், நின்னுடைய வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு கொடுப்பர். அங்ஙனம் அல்லாமல்,எம் தலைவியை மணந்து கொண்டு அடைதற்குரிய பரிசப் பொருளாக விலையைக் கேட்ப தாயின், வில்லைப்போல வளைந்த நுதலை உடைய எம் தலைவிக்கு, ஏழு உலகங்களும்கூட ஈடான விலையாகமாட்டா! (266)

**தலைவனே!** மாவடுவைப்போலும் நீண்ட அழகிய கண்களையும், தூய முத்துப்போன்ற முறுவலையும் உடைய தலைவியின்பாற் போந்து, இரவின்கண் நீ காட்டுகின்ற அருளின் திறன், எம்மைத் தன் திருவடிகளுக்கு ஆட்படுத்திக் கொண்ட தில்லையம்பலவனைப் பணியாத பாவிகளுக்கு நேர்வது போன்று, ஒருவகையில் எமக்குத் தீங்கு பயப்பதாகும். ஆதலால் இரவின்கண் வருதலாகிய களவொழுக்கத்தினைக் கைவிட்டு, எமது தலைவியின் தாய் தந்தையாரால் கேட்கப் பெறும் பொருள்களை அனுப்பி வைத்து, எம் தலைவியை முறைப்படி உலகம் அறிய மணந்து கொள்ளுதற்கு, நீ துணிவு கொள்வாயாக. (267)

**தலைவன்:** மின்னலைப்போன்று மெல்லிய தாய் நுடங்கி அசையும் இடையை உடைய தோழியே! இனி யான் குன்றுகளையும், அவற்றிற்குட்பட்ட சுரம்ஆகிய பாலைநில வழிகளையும் கடந்து சென்று, நும் உறவினர்கள் விதித்துக் கேட்கும் நிதியைத் தேடிக் கொண்டு வந்து சேருவேன். தேன்போலும் இனிய சொற்களை உடைய தோழியே! தில்லையம்பலவனது திருவிடைமருதூர், திருவேகம்பம், திருவாஞ்சியம் ஆகிய சிவ தலங்களைப் போன்று, சிறந்த பேரழகுடைய நும் தலைவியை, யான் திரும்பி வரும் வரையில் வருந்தாதிருக்கும்படி தகுந்த ஆறுதல் உரைகளைக் கூறுக. (268)

**தோழி:** ஒப்புயர்வற்ற வள்ளலாகிய தலைவனே'! தில்லையம்பலவனின் புலியூர்க்கண் பயிலும் கிளியைப் போன்றவளும், யாழின் ஓசையை நிகர்த்த இனிய சொற்களை உடையவளும், ஆகிய எம் தலைவியானவள், நீ இரவில் வந்தாலும்கூட, பகலின்கண் பிரிந்து சென்று விடுவாய் என்று, அதனையே நினைத்துக்கொண்டு, நின்னோடு கூடியிருக்கும்பொழுதும், 'யான் உயிர்வாழ்வேன் அல்லேன்' என்று, பெரிதும் வருந்திக் கொண்டிருப்பாள். அத்தகைய பிரிவாற்றாமை உணர்வுடைய எம் தலைவிக்கு, ஆறுதலுரை ஏதும் யான் கூறுதல் இயலாது. யான் மிக விரைவில் வந்து விடுவேன், சிறிதும் காலம் தாழ்க்க மாட்டேன் என்று, தக்கவாறு ஆறுதலுரை கூறி, நீயே அவளை அமைதிப்படுத்திச் செல்லுக! (269)

**தலைவன்:** தோழியே! 'எம் தலைவிக்கு நீயே நினது பிரிவைக் கூறிச் செல்லுக' என்று, நீ எனக்குப் பணிக்கின்றாய். நும் தலைவியோ, அவளது நுதலும் தோளும் முதலியனவற்றைத் தைவந்து, யான் ஏதேனும் சொல்ல முற்படுவேனாயின், 'இவர் இதனை யாது கருதிச் செய்கின்றார்?' என்று நினைந்து மயங்கி நிற்பாள். இன்சொற்கள் கூறி வசப்படுத்தி ஏதேனும் சொல்லத் தொடங்கினால், அக்குறிப்பை அறிந்துகொண்டு, மனம் நடுங்குவாள். இவ்வாறு அல்லாமல், வெளிப்படையாகவே பிரிவைக்கூறி, 'வேண்டும் பொருளைத் தேடிக் கொண்டு விரைவில் யான் வந்து விடுகின்றேன்' என்று சூளுறவு (சபதம்) செய்து தெரிவிக்க முயல்வேன் ஆயின், நும் தலைவி மனம் மகிழவோ, என்னை நம்பித் தெளிவு கொள்ளவோ மாட்டாள். இவ் வகைகளைத் தவிர, நும் தலைவிக்கு எம் பிரிவை அறிவிக்கும் வகை வேறு எதுவும் இல்லை. ஆதலின், சுருண்ட அழகிய கூந்தலை உடைய நும் தலைவிக்கு, என் பிரிவை எவ்வண்ணம் யான் சொல்லிச் செல்வேன்? அஃது ஒருவகையிலும்இயலாது. (270)

**தோழி:** நலங்கள் பலவும் நிறைந்த தலைவியே! நமக்குப் பெரிதும் சிறந்தவராகிய

நம் தலைவர், நம்மவர்களால் நின்னைத் திருமணம் செய்து கொடுப்பதற்கு நிபந்தனையாக விதிக்கப் பெற்ற, எல்லா நிதியத்தையும் ஒருங்கு சேர்த்துக் கொண்டுவந்து, செலுத்துவதற்காகச், சிவபிரானது தில்லையை வணங்காத பாவிகள் செல்லுகின்ற, வெப்பம் மிக்க பாலைநில வழியில் இன்று சென்றார். அதனால், நமக்கு நேர்வதனை யாது என்று சொல்லுவேன்! பொருள் தேடிக் கொணர்ந்து செலுத்தி நின்னை மணந்து கொள்ளச் செல்லுகின்றார் ஆதலின், தலைவரின் பிரிவினை இன்பம் என்று சொல்லுகேனோ? கொடிய வெப்பம் மிக்க பாலை நில வழியில் சென்றனர் ஆதலின், துன்பம் என்று சொல்லுவேனோ? நின்னை மணந்து கொள்ளுதல் காரணமாகப் பிரிந்து சென்றார் ஆதலின், தலைவரின் பிரிவு நமக்கு இன்பம் பயப்பதேயாகும். எனவே நீ சிறிதும் வருந்தாமல், அவர் வருந்துணையும் ஆற்றியிருப்பாயாக. (271)

**தலைவி :** அறிவில்லாத நெஞ்சமே! அருந்திய நஞ்சம் நிலைபெற்று அழகுற்ற நீலமணி போலும் கண்டத்தை உடையவரும், தேவர்களுக்கெல்லாம் உறுதிபயக்கும் இன்சுவையை உடைய அமிழ்தம் போன்றவரும், யாவர்க்கும் மிக முற்பட்டவருமாகிய சிவபெருமானின் தில்லையை, இடையறாது எப்பொழுதும் வாழ்த்துகின்ற வள்ளல் ஆகிய நம்முடைய தலைவர், நமக்குத் தீங்கு பயக்கும் களவொழுக்கம் நீங்கி, குற்றமற்ற கற்பொழுக்க நெறியில் நம்மை மணந்து கொள்ளுதற்பொருட்டுப் பொருள்தேடிக் கொணரப் பாலை நில வழியிற் சென்றார். சென்ற அந்நேர்மையானது, நமக்கு வருத்தத்தைத் தரும் என்று நீ கருதுவாயாயின், நாம் இன்புற்று வாழ்தற்கு வேறு நல்வழி யாது உளது? (272)

**தலைவி :** அழகு மிக்க நப்பின்னை என்னும் தேவியின் தோள்களை முற்காலத்தில் மணந்து தழுவிய மாயோன் ஆகிய திருமால், பணிந்து பரவித் துதிக்க, எழில்விளங்கும் செம்பொன்னை வென்ற திருவடிகளை உடைய சிவபெருமானின் தில்லையைச் சூழ்ந்த சோலைகளில், கருமையான புன்னைமரம் பொன்போல மலர்கின்ற, முத்துப்போலும் வெண்மையான மணலை உடைய ஓர் இடத்தில், நம்மைக் கூடிப் பின்னர்ப் பிரிந்து சென்றார். அத்தலைவருடைய, தேரின் பின்னே சென்ற என்னுடைய நெஞ்சமானது, அவரை யன்றோ வருத்துதல் வேண்டும்? அவரை விட்டுவிட்டு, இஃது என்னை வருத்துவது என்னோ? (273)

**தோழி :** தேனைப் போலும் இனிய சொற்களையுடைய தலைவியே! காட்டின்கண் வாழும் குறவர்கள், வில்லை வளைத்துத் தமது காதுவரையில் சென்று பொருந்தும்படி வலித்த அம்பினை, தாங்கள் எய்துவதற்குக் குறித்த மானின் மருண்ட பார்வை, தம்முடைய மனைவியரின் அழகிய பார்வையோடு ஒத்ததாக இருத்தலைக் கருதி, தொடுத்த தம் அம்பினை, மானின் மீது எய்யாமல், வில்லினின்று எடுத்து அம்புப் புட்டிலில் மடக்கி வைத்துவிடுவார்கள். காதலியர்பால் அன்பும், சிற்றுயிர்கள் பால் இரக்கமும் உடைய அத்தகைய குறவர்கள் வாழ்கின்ற மலைநாட்டை ஆள்பவர், நம்முடைய தலைவர். ஆதலின் அவர் தில்லைக் கூத்தப்பிரானை வணங்காத பாவிகளைப் போலக் கொடிய கல்மனம் உடையவரல்லர். நின்னை மணந்து கொள்ளுதற்பொருட்டு, பொருள் தேடிக்கொண்டு, மிக விரைவில் வந்து விடுவார். நீ சிறிதும் கவலையுற்று வருந்தற்க.

[''கான் அமர் குன்றர், செவிஉற வாங்கு கணை, துணையாம் மான் அமர் நோக்கியர் நோக்கு என, மான் நல்தொடை மடக்குவர்'' என்றது, கொலைத் தொழில் செய்பவரும், தம் துணைவியரோடு ஒப்பனவற்றிற்கு இடர்செய்யாத மலை நிலத்தை உடையவர், நம் தலைவராதலின், நீ வருந்தும்படி காலம் நீட்டியாமல் விரைந்து வந்துவிடுவர் என்னும் குறிப்புப் பொருளை உணர்த்தும்.] (274)

**தோழி :** ஏந்திய இழைகளை உடைய தலைவியே! தலைவரை முதன் முதலிற் புதுவதாக நாம் கண்ணுற்ற சோலையையும், அப்போது நம் தலைவர் நின்பால், ''நின்னிற் பிரியேன், பிரியின் ஆற்றேன்'' என்று கூறிய சூளுறவின் உண்மையையும், படிப்படியே தலைவருக்கும் நினக்கும் இடையே பெருகிய சிறந்த காதலின்ப அன்பையும், நம்முடன் இணை பிரியாது ஒருங்கு கலந்திருந்து பின்னர்த் திடீரெனப் பிரிந்து, கொடிய காட்டுவழியிற் சென்ற தலைவரின் போக்கையும், அவர்போய்த் தேடுகின்ற செல்வத்தின் அருமைப்பாட்டையும், ஆக இவ் எல்லாவற்றையும் நினைந்து வருந்தி, நீ கண்ணீர்விட்டுக் கலுழ்வாய் ஆயின், நம் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள், மணல்போலும் மெல்லிய இப் பாவை நல்லாளுக்கு இத்தகைய வேறுபாடுகள் வந்ததற்குக் காரணம் யாது? என்று, ஐயுற்று ஆராயத் தொடங்குவர். ஆதலின் நீ இவ் ஆற்றாமையை பிறர் அறியாமல் அடக்கிக் கொள்வாயாக! (275)

**தலைவி :** தோழியே! கொன்றை மாலை அணிந்த கூத்தப்பெருமானின் தென்தில்லையை வணங்காத பாவிகள்போல, மனக் கலக்கம் உற்று, ஒரு பற்றுக்கோடும் இல்லாமல் வருந்துகின்ற, தீவினையையுடைய என்போலும் பெண்களுக்கு, ஒருவரும் சென்று பார்த்துப் பாதுகாப்பது இல்லாத மயிலினது முட்டையை, இளங் குரங்கு பந்துபோல உருட்டி விளையாடுகின்ற சோலைகள் நிறைந்த, மலைநாட்டை உடைய தலைவனது இயல்பும் செயலும், மிகத் துன்பம் தருவனவாக உள்ளன. யான் எங்ஙனம் ஆற்றியிருப்பேன்?

['திருவினர்' என்பதும், 'இனிது' என்பதும் குறிப்பினால் முறையே 'திருவிலார்' என்றும், 'இன்னாதது' என்றும் பொருள் உணர்த்தின. ''வந்து ஆய்பவரை இல்லாத மயிலின் முட்டையை, இளம் குரங்கு பந்துபோல உருட்டி, விளையாடும்'' என்றது, காதலர் பரிந்து வந்து அணைத்துப் பாதுகாவாத என்னுடைய காதல் நோயினை, நீ இத்தன்மைத்து என்று உற்று அறிகின்றிலை யாதலின், என்னுடைய கவலையின் கொடுமையினையும், காமத்

தினது மென்மையையும் கருதாது, இங்ஙனம் கூறுகின்றாய் என்று, தலைவி தோழிக்கு வன்புறை எதிரழிந்து கூறும் குறிப்புடையதாகும். இதன்கண் மயில் தலைவி; மயிலின் முட்டை தலைவியின் காதல்நோய்; இளமந்தி தலைவன்; வந்து ஆய்பவர் தோழி; பந்தாடுதல் தலைமகளின் வருத்தம் பாராமல், தலைவன் தன் மனம் சென்றவாறு ஒழுகுதல் என்று, குறிப்புப் பொருள்கொள்ள அமைந்துள்ளன.

''கான மஞ்ஞை அறைஈன் முட்டை,
வெயில்ஆடும் முசுவின் குருளை உருட்டும்
குன்ற நாடன் கேண்மை, என்றும்
நன்றுமன் வாழி தோழி! உண்கண்
நீரோடு ஒராங்குத் தணப்ப,
உள்ளாது ஆற்றல் வல்லு வோர்க்கே''

என்னும் குறுந்தொகைச் செய்யுளின் *(38)* பொருளை, இத் திருக்கோவையார் செய்யுளின் பொருள், அடியொற்றி நிற்றல், அறிந்து இன்புறற்பாலது. *(276)*

**தோழி :** சுருண்ட கூந்தலையும், பொன்னால் இயன்ற வளையல்களையும் உடைய தலைவியே! அருவருப்பு மிக்க எலும்பினையே அணியாகக் கொண்டவனும், என்னைத் தன்னுடைய சிறந்த திருவடிக்கு ஆட்செய்க என்று வெளிப்பட்டுச் சொல்லிப் பணித்தவனும் ஆகிய சிவபெருமானின், தில்லையைச் சூழ்ந்த கடலை உடைய சேர்ப்பராகிய நம் தலைவரின் சொல்லும்கூட, ஒரு பெரும் பொய்யேயாகும் என்பதுதான் நின்னுடைய கருத்தாகுமானால், இவ்வுலகத்தில் உண்மை என்பது சிறிதும் இல்லையேயாகும்.

[பிரமன் திருமால் முதலியவர்களின் திருமேனியாகிய எலும்பினையே இறைவன் அணியாகக் கொள்ளுதலின், அதனை 'மொய் என்பு' என்றார். மொய்-வலிமை. இழிந்தனவற்றையும் விலக்காது கைக்கொண்டு காத்தருளும் இயல்பினன் ஆதலின், சிவபெருமான் எலும்பை அணிகலனாகவும், என்னை அடிமையாகவும் கொள்வன் என்பது கருத்து.] *(277)*

**தலைவி :** அடர்ந்த கூந்தலை உடைய தோழியே! முன்னர்த் தலைவர் நமக்குக் கூறிய சொல்லின் உண்மையை அறிந்துணர்ந்து வைத்தும், என் நெஞ்சமும் நிறையும், என் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு, நிற்க மறுக்கின்றன. பொன்போலும் ஒளிமிக்க திருமேனியை உடைய சிவபெருமானின், தில்லையைச் சென்று வணங்காத பாவிகள் அடைகின்ற வருத்தம் போல, என்னுடைய இனிய உயிரும் பொறுத்தற்கரிய வருத்தத்தினை அடைகின்றது. இவைகள் இவ்வாறு ஆவதற்குக் காரணம், யான் முன்செய்த தீவினையோ? அல்லது, பிரியும் காலம் அல்லாத இக்காலத்தின் இயல்போ? யான் ஒன்றும் அறிகின்றிலேன்.

[நெஞ்சம் நில்லாமையாவது, தலைவி தன்னிடத்துத் தலைவரின் அன்பு எத்தகையதோ என்று ஐயப்படுதல்; நிறை நில்லாமையாவது பெறுதற்கு இயலாமையினால், பிரிவாற்றாமையால் விளையும் காதல்நோய் புறத்தார்க்குப் புலனாதல். இங்ஙனம் துன்பம் அடைதற்குக் காரணம், தலைவனைப் பிரிந்தும் தான் உயிரோடு இருத்தலே ஆதலின், உயிர் வாழ்தலையும் ஒரு பெருந் துன்பமாகக் கருதித் தலைவி, ''இன்னுயிரும் பொறை அரிதாம்'' என்றாள்.] *(278)*

**தோழி :** வெண்மையான வளையல்களை அணிந்த, குற்றமற்ற தலைவியே! தினைக் கதிர்களைப் பாதுகாப்பதற்கு விரும்பி, கடவுளைப் பராவிப் பூசையிட்டு, நம்மவர்கள் ஆரவாரம் செய்தனர். அப்பூசையை ஏற்றுக் கொண்ட கடவுளின் ஆணையால், மேகங்கள் காலம் அல்லாத காலத்தும் மழையைச் சொரிந்தன. அது கண்டு, 'இது கார்காலம் போலும்' என்று கருதித் திருப்பரங்குன்றம் ஆகிய இம்மலையின் கண், காந்தள் மலர்கள் விரிந்து மலர்ந்தன. காந்தள் மலர்கள் மலர்ந்தமை கொண்டு, கார்காலம் வந்துவிட்டது என்று நீ அஞ்சுதல் வேண்டா. இன்னும் கார்காலம் வந்திலது. நம் தலைவர் கார்காலம் வருவதற்கு முன்னர், நின்னை வரைந்து கொள்ளுதற்குப் பொருள் தேடிக் கொண்டு விரைவில் திரும்பி வந்து விடுவார். *(279)*

வரிசையாக வளைகளைக் கைகளில் அணிந்த தலைவியே! இதோ ஒரு தூது வந்து தோன்றுகின்றது. இத்தூது, முப்புரத்தை வென்றவரும், சிற்றம்பலத்தில் நின்று ஆடுபவரும், வெள்ளியங்கிரி மலையை உடையவரும் ஆகிய சிவபெருமானது, குறைவில்லாத அருளின் பயனாக வந்து நம்மைக் கூடிய பின்னர், நம்மைப் பிரிந்து சென்றவர் ஆகிய நம் தலைவர் அனுப்பிய நல்ல தூதோ? அல்லது தலைவர் பிரியவும், உயிரோடு இருந்து கொண்டிருக்கின்ற நம்மிடத்தில், துன்பச் செய்தியைச் சொல்ல வருகின்ற அயலார்களின் தூதோ! இதனை இன்னதென்று யான் அறிகின்றிலேன். இத்தூது ஒருகால் நம் தலைவர் நமக்கு அனுப்பி வைத்த தூதாகவும் இருத்தல் கூடும்! நீ கவலை தீர்க. *(280)*

**தலைவி :** தோழியே! நம்மோடு தொடர்பு இலவாகிய அயலவரின் தூதுகள், வருவனவும் போவனவுமாக இருக்கின்றன. சிறந்த புலியூர்க்கண் உள்ளவனாகிய சிவபிரானின் அன்பர்களைப் போல, யான் இன்பமுறவும், உள்ளம் உருகவும், இன்பக் கலவிகளை முன்பு என்பாற் செய்தவர்; பின்னர் என்னுடைய உயிரைத் தாம் கவர்ந்து கொண்டு சென்றவர்; தம்மை என்னுடைய நெஞ்சத்தின்கண் நிலை பெற்று இருக்கும்படி வைத்தவர்; என்னாற் பெரிதும் காதலிக்கப்படுபவர் ஆகிய என் தலைவர், இன்று நமக்குத் தூது ஏதும் அனுப்பாமல் வாளா இருப்பது, யாது செய்யக் கருதியோ?

[இப்பாடல், தன் காதலன் ஆகிய தலைவன், தன்பால் நிகழ்த்திய காதற் செய்திகளை, ஒரு தலைவி தன் தோழிக்குக் கூறும் முறையிலேயே அமைந்துள்ளது. ஆயினும், இதனை அருளிச் செய்த மாணிக்கவாசகர், தம்மை ஒரு தலைவியாக வைத்து, தம் காதலராகிய சிவபெருமான், தம்பால் நிகழ்த்திய அருட்

செயல்களைக் குறிப்பிடும் முறையில் அமைத்துள்ள நுண்பொருள்களையும் உணர்த்துவதாக இருத்தல், அறிந்து வியந்து மகிழற்பாலதாகும். ''சிவபெருமான் ஆகிய காதலர், என்பால் இன்பக் கலவிகள் செய்தார்; என் உள்ளம் உருகும்படியாகப் பல அருளனுபவ நலங்களைத் தந்தார்; என்னுடைய உயிருணர்வைக் கவர்ந்து கொண்டு சென்ருர்; என் நெஞ்சத்தில் தம்மை என்றும் நிலைபெறும்படி இருத்தி வைத்தருளினுர். இங்ஙனமெல்லாம் முன்பு செய்தருளிய சிவபெருமாஞகிய காதலர், இன்று என்பால் என்ன செய்யக் கருதியிருக்கின்ருரோ? அறிகின்றிலேன்'' என்னும் மற்ருெரு சிறந்த நுண்பொருளும், இச்செய்யுளின்கண் அமைந்து விளங்குகின்றது.

சிவபெருமானைக் காதலர் என்றும், அவர்தம் அருட் செயல்களை இன்பக் கலவிகள் என்றும், மாணிக்கவாசகர் குறிப்பிட்டுள்ள மாட்சிமை, மிக்க சிறப்புடையதாகும். இவ்வாறே, ''சிவபெருமான் என் நெஞ்சில் தம்மை இருவினுன் என்றும்; எனது ஆவிகொண்டு ஏகினுன் என்றும்; என் உள்ளம் உருகத் தகுவன செய்தான்'' என்றும், மாணிக்கவாசகர் சுட்டியுள்ள தொடர்கள் மிகவும் பொருள் பொதிந்தவையாகும்.] (281)

**செவிலி:** திருந்திய இழைகளை அணிந்த இத்தலைவியின் மூங்கில் போன்ற தோள்கள் மெலிந்துள்ளன; மேனியின் மினுமினுப்பு வாடிக் குறைந்துள்ளது. அழகிய பார்வை வேறுபட்டுத் தன்னியல்பு இழந்து நிற்கின்றது. இவ்வாற்ருல் பரந்த மேகலையை அணிந்த இத்தலைவியானவள், முன்பு கொண்டிருந்த இயல்புகளை உடையவளாகக் காணப்படவில்லை. இத்தலைவி ஒருகால், பவளம் போன்று சிவந்த திருமேனியை உடையவரும், தேவர்க்குத் தேவனும், சிற்றம்பலத்தானும் ஆகிய சிவபெருமானின் புதல்வஞகிய, முருகனின் ஆட்சியிற் பட்டனள் (தெய்வக் குற்றம் உற்றனள்) போலும். (282)

சாலினி (கட்டுவித்தி) ஆகிய தாயே! எம் தலைவியின் பொன்னிறமான அழகுத் தேமல் (சுணங்கு) பொருந்திய கொங்கைகள், சூதாடு கருவியின் தன்மையை அடையவில்லை. சொற்கள் குதலைமை நீங்கி விளங்குந் தன்மையைப் பெறவில்லை; மேலும் இவள், நன்மையும் தீமையும் ஆராய்ந்தறிகின்ற பெதும்பைப் பருவத்தை இன்னும் அடைந்திலள். ஆதலின் இத்தகைய மிக இளம்பருவமுடைய இவள், காதல் வயப்பட்டிருக்கக்கூடும் என்று கருதவும் வாய்ப்பில்லை. அசுரர்களின் நிணம் பொருந்திய சூலப் படையை உடைய சிவபெருமானின் சிற்றம்பலத்தை நெஞ்சில் நினையாத பாவிகளைப் போல, இந்தப் பெண்ணுக்கு வந்து நேர்ந்த நோய், இன்னதென்று தெளிய அறிந்து சொல்லுவீராக! (283)

**தோழி: (தனக்குள்) :** நம் தலைவியின் மையல் நிலையைக் கண்டு ஐயுற்று, செவிலித்தாய் கட்டுவித்தியின்பாற் சென்று, 'இவளுக்கு உற்ற நோய் யாது? என்று ஆராய்ந்து சொல்லுக' என்று வேண்டிக் கொள்கின்ருள். இனி இக்கட்டுவித்தி, நம் தலைவியின் உள்ளம் தலைவன்பாற் படர்ந்து சென்ற காதற் செய்திகளையும்,; அயலகத்துப் பெண்கள் அலர்தூற்றிச் சுட்டிக் கூறத் துணியாத பழிமொழிகளையும் நம்முடைய நாணம் அழியவும், நமது பெரிய குடிக்கு மாசு ஏற்படவும், தில்லையம்பலவனைக் குருமுகத்தால் அறியாத பாவிகளைப்போல நாம் வருந்தவும், ஊரவர் யாவரும் அறியுமாறு வெளிப்படுத்திக் கூறிவிடவும்கூட நேருமே! இனி நாம் என் செய்வோம்? (284)

**கட்டுவித்தி :** குயிலோசை போலும் சொல்லை உடைய மலைமகளை ஒருபாகத்தில் உடையவனும், சிற்றம்பலத்தின்கண் உள்ளவனும், இன்ன தன்மையன் என்று கூறவொண்ணுத இயல்பினை உடையவனும் ஆகிய, சிவபெருமானின் புதல்வஞகிய முருகப்பெருமானின் ஊர்தியாகிய மயிலும், அவனது கொடியில் உள்ள கோழியும், வலிமை மிகுந்த சூரபதுமனைக் கொன்ற அவனது வீரவேலும், அவனது அழகிய திருவுருவமும், இதோ, இம்முறத்தில் உள்ள நெல்லில் தோன்றுவதைக் காணுங்கள். இக்குறிகளெல்லாம் எதனை உணர்த்துகின்றன? இப்பெண்ணுக்கு ''முருகு அணங்கு'' (முருகனுல் நோய்) ஏற்பட்டுள்ளது என்பது திண்ணம். (285)

**நற்ருய்:** காலனைச் செற்ற காலகாலனும், என்னிடத்து அணியனுய் எளியனுய்ப் புகுந்து நின்றவனும், ஆகிய சிவபெருமானின் திருவெண்காடு என்னும் தலத்தைப் போன்ற இப்பெண், இந்தக் குடியில் பிறந்து, வெறியாடுவித்தல் ஆகிய பெரியதொரு பழிச் செயலை, யாம் மேற்கொள்ளுமாறு செய்துவிட்டாள். இனி வேறு வழியில்லை. அந்தோ! வேலன் ஈண்டுப் புகுந்து வெறியாடுவானுக. அவ்வெறியாடலின்கண், ஐயகோ! வெள்ளாடும் பலியாக அறுக்கப் பெறுவதாக.

[வேலன் வெறியாட்டு நிகழ்த்துதல், குடியின் பெருமைக்கு இழுக்கு என்பாள் ''இப்பரிசினில் நிற்பித்த'' என வெறுப்புற்றுக் கூறினுள். வேலனின் வெறியாட்டில் நிகழும் மறி அறுத்தல் (ஆடுவெட்டுதல்), தனக்கு உடன்பாடு அன்மையின், அவ் வெறுப்புத் தோன்ற 'வெறியாடுக' என்றதனேடு அமையாது, 'மறி அறுக்க' என வேறு பிரித்துக் கூறினுள். முயற்சியின்றி எளிதாகச் செய்ததனுலும், இரக்கத்தால் மென்மையாக எற்றுதலாலும், ''காலன் புகுந்து அவியக் கழல் வைத்து, எழில் தில்லை நின்ற மேலன்'' என்று சிறப்பித்தார். பாலன் என்னும் ஆண்பாற் சொல் ஈண்டுப் பெண்பால் குறித்து வந்தது.] (286).

**தலைவி: (தனக்குள்):** பிரமனும் திருமாலும் முறையே வானில் உயரப் பறந்து சென்றும், நிலத்தின் கீழ்ப்புக்குத் தாழ்ந்து சென்றும், தேடிக் காண இயலாத சிவபிரானின் சிற்றம்பலத்தைத் தொழாத பாவிகளைப் போலத் துயரமுற்று, வெறியாடல் எடுத்தும், மறியின் உயிரைப் போக்கியும்கூட, காதல் நோயால்

ஏற்பட்ட நமது பசலை நிறம் நீங்காவிட்டால், அயலார்கள் யாது பேசுவர்? 'இவள் முருக ணங்கு உற்ருள் அல்லள். எவனே ஓர் ஆட வனையே இவள் களவிற் காதலித்துள்ளாள்' என்றன்ரே, என் களவொழுக்கம் உணர்ந்து கொண்டு, அயலார்கள் என்னை இகழ்வர்? நம்முடைய பசலை நிறம், தலைவரின் பால், நாம் கொண்ட காதல்நோயால் விளைந்தது ஆதலின், அஃது அதற்குச் சிறிதும் தொடர்பு இல்லாத வெறியாட்டு ஆகிய வேருெரு கார ணத்திஞல் நீங்குமோ? நீங்கின், 'இவள் நம்பால் உண்மையிற் காதல் கொண்டவள் அல்லள்' என்றன்ரே, நம் தலைவர் நம்மைப் பற்றித் தவருக நினைத்துவிடுவர்? அதன்பின் அந்தோ! அவருக்கு நாம் என்ன உறவும் அன்பும் உடைய மாவோம்? நம் பசலை நிறம் நீங்குதல், நீங் காமை யாகிய இருதிறத்தாலும், நாம் உயிர் வாழ்தல் அரிது, இனி என்செய்வோம்? (287)

தலைவி: (தனக்குள்): சிவபிரானின் தில்லை யைத் தொழாதவர்களைப் போல, நான் என் காதல் நோயால் பெரிதும் வருந்துகின்றேன். ஆயினும், இதனை என்னேடு பிரிவற ஒன்றியிருக் கும் உயிர்போன்ற தோழியாகிய இவளுக்கும் கூட, நாணத்திஞல் வெளிப்படச் சொல்ல முடி யாமல் இருக்கின்றேன். சொல்லாமலே வாளா இருந்து விட்டாலும், வேறு வழியில் யான் உயிர் வாழ்தல் இயலாது. மணற் குன்றுகள் நிறைந்த துறையை உடைய தலைவன்பால் மிகவும் காதல்கொண்ட யான், மிக மறைவான இக்காதலை, என் உயிர்போலும் தோழியாகிய இவளுக்கு, என் நாணத்தைத் துறந்து குறிப் பாகவேனும் சொல்லிவிடக் கடவேன். இறை யருள் தலைக்கூட்ட நம்மைப் புணர்ந்து சென்ற காதலர், உண்டாக்கியது இக்காதல் நோய். இந் நோயைத் தீர்க்கத் தகுவோர், அக் காதலரே ஆவதல்லது, அதற்குச் சிறிதும் தொடர்பில் லாத முருகனே பிறரோ, அதனைத் தீர்த்தல் எங்ஙனம்? தீர்ப்பின், அஃது எத்துணை இழிவு! (288)

ஒளி வீசும் குழையை அணிந்த தோழியே! என்னுடைய மனத்தையும் வாயையும் விட்டு நீங்காத, சிவபிரானின் தில்லையை வாழ்த்து பவர்கள், எவ்வளவு தூய்மை உடையவர் களோ, அவ்வளவு தூய்மை யுடையவள் யான். எனக்குச் சிறிதும் தீங்கு கரந்த உள்ளம் இல்லை. ஒருகால் நீ என்னை நம்பவில்லையாயின், நீ நம்பும்படி நினைக்குக் கடுமையான சூள் (சபதம்) செய்து தருகின்றேன். என்னை அயலார்கள் ஏசுவதாயின் ஏசுக; ஊர்மக்கள் நகுவதாயின் நகுக; நம் அன்னையும் வெகுள்வதாயின் வெகுள்க; இவர்கள் மட்டுமேயன்றி, நீயும் என்னை முனிவதாயின் முனிக. யான் நடந்த தனை நடந்தபடி நின்பாற் கூறுகின்றேன். கேட்பாயாக. (289)

ஆருயிர்த் தோழியே! முன்னெருநாள் நாமும் நம் தோழியருமாகக் கடற்கரைச் சோலையின்கண் மணற்சிற்றில் அமைத்து விளை யாடிக் கொண்டிருந்தோம். அதுபோது அவ் விடத்தே, இளமையும் அழகும் மிக்க தோன்ற லாகிய ஓர் ஆண்மகன் வந்தான். வந்த அவன் ''அழகிய வளையல்களை அணிந்த பெண்களே! நுங்களுடைய மணலால் அமைத்த வீட்டிற்கு யான் விருந்தினனுக வந்துள்ளேன். நும்மு டைய மணல் வீட்டில் சிறிது தங்கி, உணவு கொள்ள விரும்புகின்றேன்'' என்று சொல்லி நின்ருன். அச்சமயத்தில், சிவபிரானது புலி யூர் எல்லையின்கண் கீழ்க்காற்று எழுந்து மிகுதியாக வீசிற்று. அதனுல் கடல்நீர், கரை மேலே மிகுதியாகப் பொங்கிப் பெருகிச் சீறி வந்து மோதுவதாயிற்று. அப்போது அவ் அலை வெள்ளத்தில் அழுந்தி நான் இறந்து போகாமல் என்னைக் கையாற் பற்றி அணைத்து, என் உயி ரைக் காப்பாற்றி, எனக்கு என் உயிரைக் கொடுத்து விட்டு, வீரக் கழலணிந்த அவ் வெற்றித் திருமகன், கண்டல் என்னும் மரங்கள் மிகுதியாக வளர்ந்து அழகு செய்கின்ற அக் கடற்கரைச் சேரியின்கண் சென்று மறைந்தான். இதுவே நிகழ்ந்த செய்தி. இதனையான் நினக்கு ஒளிவு மறைவு இன்றி, நிகழ்ந்தது நிகழ்ந்தபடி உள்ளவாறு எடுத்துக் கூறிவிட்டேன். இனி நீ தக்கது செய்வாயாக!

['தோன்றல்' என்றதனுல், தலைவி தலைவ னது இளமை அழகு பெருமை குடிச்சிறப்பு முதலியவற்றைக் குறித்தாள். 'கழலவன்' என்றதனுல் தலைவனின் வீரமும் வெற்றியும் குறிக்கப்பட்டன. யான்அவனைத் தேடிச் சென்றிலேன், என்னை அவன்தேடிக் கொண்டு வந்தான் என்பாள் 'வந்துநின்றபொழுது' என் ருள். வந்த விருந்தினரை விலக்குதல் முறை யன்று ஆகலின் விலக்காதிருந்தேன் என்பாள் ''உண்டலுற்றேம் என்று வந்துநின்ருன்'' என்ருள். தலைவனின் பெருமித வுணர்வைப் புலப்படுத்த ஒருமையால் அன்றிப் பன்மை யாற் கூறினுள். கடலின் அலை பெருகியதற்குக் காரணம் கூறுவாள். 'கொண்டல் உற்று ஏறும் கடல்' என்ருள். கொண்டல்-கீழ்த் திசைக் காற்று. அவன் செய்த நன்றி இது என்பாள் ''எம் உயிர் கொண்டு தந்தான்'' என்ருள். என்னுயிரைத் தான் கொண்டான், தன்னு யிரை எனக்குத் தந்தான் என்பது கருத்து. முதன் முதற் கண்ட அளவிலேயே ஈருயிரும் ஒருயிராயின ஆதலின் 'எம் உயிர்' என்ருள் என்றலும் ஒன்று. இதனுல் மெய்யுறு புணர்ச்சி யும் கூறினுளாயிற்று. நன்றி மறப்பது நன் றன்று ஆகலானும், உற்ருர்க்குரியர் பொற் றெடி மகளிர் என்பது உலகியல் ஆகலானும், யான் அத்தலைவனைக் காதலிக்கின்றேன், யான் அவனையே மணத்தற்கு உரியேன் என்று, நீ செவிலித்தாய் நற்ருய் முதலிய நம்மவர் களுக்குக்கூறி, ஆவனவற்றை விரைந்து செய்க என்பது இப்பாடலின் கருத்து.] (290)

—(தொடரும்)

# காஞ்சியில் திருமால் கோயில்கள்

'மகாவித்வான்'

திரு. பி. ப. அண்ணங்கராச்சாரிய சுவாமிகள் அவர்கள், காஞ்சிபுரம்

''காசி முதலாகிய நன்னகரியெல்லாம்கார் மேனி யருளாளர் கச்சிக் கொவ்வா'' என்றும், ''முத்தி தரும் நகரேழில் முக்கியமாங் கச்சி'' என்றும் ஆன்ரேரால் புகழப் பெற்ற காஞ்சி புரத்தில் விளங்கும் விஷ்ணு ஆலயங்களைப் பற்றிச் சுருக்கமாக ஈண்டு எழுதப்படுகிறது. சின்ன காஞ்சிபுரத்திலும், பெரிய காஞ்சிபுரத் திலும் சேர்ந்து பதினெட்டு விஷ்ணு க்ஷேத்திரங் கள் விளங்குவதாகப் பிரசித்தியுள்ளது. ஆனல் ஆழ்வார்களின் பாடல் பெற்ற தலங்கள் பதி ஞன்கே யென்றும், மற்றைய நான்கும் புராணத் தலங்களே யென்றும் பெரியோர் கூறுவர். அந்த நான்கு தலங்களைப் பற்றி முடிவில் தெரி விக்கப்படும். ஆழ்வார் பாடல் பெற்றவை பதிஞன்கு தலங்கள் : அவையாவன :

1. திருக்கச்சி அத்திரிகிரி
2. திருவெஃகா
3. அட்டபுயகரம்
4. வேளுக்கை
5. திருத்தண்கா
6. ஊரகம்
7. நீரகம்
8. காரகம்
9. கார்வானம்
10. பரமேச்சுவர விண்ணகரம்
11. பவளவண்ணம்
12. நிலாத் திங்கள் துண்டம்
13. கள்வனூர்
14. பாடகம்.

### 1. திருக்கச்சி அத்திரிகிரி:

தேவப்பெருமாள் சந்நிதி என்றும், வரத ராஜசுவாமி கோயில் என்றும் வழங்கப்பெறுவது இத்தலமேயாகும். அருளாளன், பேரருளா ளன், வரதன், வரதராசர், தேவராசர், பெருந் தேவி மணவாளன் என்றிங்ஙனே பல திருநாமங் கள் கொண்டவர் இத்தலத்து எம்பெருமான். நான்முகக் கடவுள், திருமாலை நேரிற் கண்டு மகிழ ஆவல் கொண்டு, புஷ்கர க்ஷேத்திரத்தில் தவம் புரிய, அங்கே தீர்த்த ரூபியாகக் காட்சி தர, அதில் திருப்தி பெருமல், மீண்டும் நைமி சாரணியத்தில் தவம் புரிய, அங்கே அரண்ய ரூபியாகக் காட்சிதர, சங்கும் சக்கரமும் சிரித்த முகமுமான நிச ரூபத்தையே காண விரும்பி, ''சத்ய விரத க்ஷேத்திரத்திலே அபயமேத வேள்வி புரிந்து காணப்பெறுக'' என்னும்ஆகாய வாணியைப் பெற்ற அங்ஙனமே அசுவமேத யாகம் நிகழ்த்திப் புண்ணியகோடி விமானத் தோடு ஓமத் தீயினின்றும் தேவப்பெருமாள் வெளிப்பட்டுத் தோன்றிக் கிரேதயும் முதலாகக் காட்சி தந்தருள்வதாகப் புராண வரலாறு. பூதத்தாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் பாடின தலம்.

வடமொழியில் காஞ்சி என்று பெயர் ; அது தென்மொழியில் கச்சி எனத் திரிந்தது. தலபுராண சுலோகத்தின்படி, பிரமன் ஆராதித் தவிடம் என்பதே வடமொழிப் பெயர்க்கும் தென்மொழிப் பெயர்க்கும் பொருளாதலால், ஆழ்வார் பாசுரங்களில், கச்சியென வரும்இடங் களெல்லாம் தேவப்பெருமாள் எழுந்தருளி இருக்கும் திருப்பதிக்கே மங்களாசாசனம் என்று கொள்ளக் குறையில்லை. ஆசாரியர்களில் ஆள வந்தார் ஒரு முத்தக சுலோகமும், திருக்கச்சி நம்பிகள் எட்டு சுலோகமும், கூரத்தாழ்வான் நூறு சுலோகமும், வேதாந்த தேசிகன் ஐம்பது சுலோகமும் அருளிச் செய்து இப்பெருமானை வாழ்த்தினர்.

### 2. திருவெஃகா :

இத்தலத்து எம்பெருமானுக்கு வேகா சேது என்று வடமொழித் திருநாமம். வேக வதிக்கு அணையாய்க் கிடந்தவர் என்பது அதன் பொருள். வேகாசேது என்னும் பதத்தின் ஏக தேசமாகிய வேகா என்பது வெஃகா என்ரு யிற்று—'வெஃகணை' என்கிற திருப்பெயரும் உள்ளது. முந்தின தலத்து எம்பெருமாஞகிய தேவப்பெருமாளை நேரில் காண விரும்பிய பிரமன் அசுவமேத யாகம் தொடங்கியபோது, ஒரு காரண விசேடத்தினுல் தன் மனைவியான சரசுவதியைத் துணை கொள்ளாமலே வேள்வி புரிய நேர்ந்தது. அப்போது அசுரர்களின் தூண்டுதலால் சரசுவதியானவள் வேகவதி என் னும் நதி வடிவமெடுத்துப் பெருகி வந்து, வேள்விக்கு இடையூறு விளைக்கத் தேடினவள விலே, பிரமனுடையவும் மற்றும் அமரர் முனி வர் முதலானேருடையவும் வேண்டுகோளுக்கு இரங்கி, எம்பெருமான் பேரருள் கொண்டு ''சதுர்முகனர் வேள்விதனைச் சதிர்கெடுக்கச் செறிந்தோடுங் கதியுடைய வேகவதிக்கு அணை யாக வந்து உதித்தோய்'' என்றும், ''அணியான வேகவதி அலையோடு கோண்டோடி யாலிக்க அணையாக் கிடந்தபெருமாள்'' என்றும் போற்று மாறு குறுக்கே சயனிக்க, சரசுவதி நாணமுற்று அந்தர் வாகினியாய்த் தரைக்குள் மறைந்து சென்று விட்டாள் என்று புராணங் கூறும். இப்பெருமானுக்கு வடமொழியில் யதோக்த காரி என்றும், தென்மொழியில் சொன்னவண் ணஞ் செய்த பெருமாள் என்றும் திருநாமம் வழங்கும். இத்தலத்தின் வடபுறத்திலுள்ள திருப்பொய்கைமலே, தாமரை மலரில், பொய் கையாழ்வார் திருவவதாரம் செய்தருளினர்.

திருமழிசையாழ்வார் இத் திருப்பதியில் சில பல ஆண்டுகள் எழுந்தருளியிருந்து இப்பெருமாளுடைய பரம சௌலப்பிய குணத்தைக் கணிகண்ணனென்றும் சீடனோடுங் கூட அனுபவித்த வரலாறு குரு பரம்பரைப் பிரபாவம் முதலிய நூல்களில் மிகப் பிரசித்தம். வேதாந்த தேசிகர் இத்தலத்து எம்பெருமானைப் பத்து சுலோகங்கள் கொண்ட வேகா சேது துதியினால் தோர்த்தரித்தனர். மணவாள மாமுனிகள் துறவுநிலை கொள்வதற்கு முன்பு இல்லற நிலையில் ஓர் ஆண்டு இத்தலத்தில் எழுந்தருளியிருந்து ஸ்ரீ பாஷ்யப் பிரவசனம் செய்தருளினார். அதனால் இத்திருப்பதியில் மட்டும் மாமுனிகளின் திருக்கோலம் ஞான முத்திரையோடு திகழும், பொய்கையார் பேயார் திருமழிசைப்பிரான் நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் ஆகிய ஐவர் பாடல் பெற்ற தலம் இது.

### 3. அட்டபுயகரம் :

எட்டுத் திருக்கர களிலும் எட்டு ஆயுதங்களை ஏந்தியுள்ளதனால், அட்டபுயன் என்று சுவாமிக்குத் திருநாமம். அவன் எழுந்தருளியிருக்கும் இடம் அட்டபுய அகரம் ; அஃது அட்டபுயகரம் என மருவிற்று. நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில் அட்டபுயங்கம் என்றார் பிள்ளைப் பெருமாளையங்கார். பேயாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் பாடின தலம்.

### 4. வேளுக்கை :

அட்டபுய சன்னிதிக்கும் தீபப்பிரகாச சன்னிதிக்கும் இடையில் விளங்கும் இத்தலம். சிங்கப்பெருமாள் கோயிலென்றும், அழகியசிங்கர் சன்னிதி என்றும் இத்தலத்திற்குப்பிரசித்தி. காமாசிகா என்று தலபுராணத் திருநாமம். வேளுக்கை என்று ஆழ்வார் பாடல். 'வேள் இருக்கை' என்னும் இரண்டு சொற்கள் கூடி வேளுக்கை என்று மருவிற்று. வேள்—காமம்; அதாவது இச்சை ; அதனால் எழுந்தருளியிருக்கும் இடம் வேளுருக்கை. காமாசிகா என்னும் வடமொழிப் பெயர்க்கும் இதுவே பொருள்.

### 5. திருத்தண்கா:

இது தீபப் பிரகாசர் சன்னிதியென்றும், விளக்கொளி கோயில் என்றும் வழங்கும். ஆழ்வார் பாடலில் திருத்தண்கா என்று உள்ளது. குளிர்ந்த சோலை என்பது இதன் பொருள். இத்தலத்திற்கு வேதாந்த ஆசிரியர் இட்டருளின சரணாகதி தீபிகை என்னும் துதியில் தண்கா என்னுந் திருநாமமே இமோபவனம் என்றும் சிசிரோபவனம் என்றும் மொழி பெயர்க்கப்பட்டு உள்ளது. ஆசிரியரின் திருவவதாரம் இத்திருப்பதியின் பரிசரத்திலேயாயிற்று. இஃதே இத்தலத்திற்குத் தன்னேற்றம். திருமங்கையாழ்வார் ஒருவருடைய பாடலேயுள்ளது.

### 6. ஊரகம், 7. நீரகம், 8. காரகம் 9. கார்வாணம்:

இந்நான்கு திவ்விய தேசங்களும் உலகளந்த பெருமாள் சன்னிதி என்கிற ஒரு தலத்திலேயே காட்சி தருவன. உரகம் என்னும் வட சொல் ஊரகம் என நீண்டது. உரகம் என்று ஆதிசேடனுக்கு வடமொழிப் பெயர். ஆதிசேட ரூபியான எம்பெருமானும் இங்கே மகா வரப்பிரசாதியாய்ச் சேவை சாதித்து அருள்வதால் ஊரகத்தான் சன்னிதியென்றே இத்தலம் வழங்கப்பெறும். இப்பெருமாள் மட்டும் மூவர் பாடல் பெற்றவர் ; பேயார் திருமழிசைப் பிரான் திருமங்கையாழ்வார். நீரகம் காரகம் கார்வானம் என்றும் இம்மூன்று தலங்களையும் திருமங்கையாழ்வார் திருநெடுந்தாண்டகத்தில் ''நீரகத்தாய் . . . உலக மேத்துங் காரகத்தாய் ; கார்வானத்துள்ளாய்'' என்று ஒரே பாசுரத்தில் பாடியுள்ளார்.

### 10. பரமேச்சுவர விண்ணகரம் :

வைகுண்டப் பெருமாள் சந்நிதி யென்று வழங்கப்பெறும் இத்தலம். திருமங்கையாழ்வார் ஒருவரே பதிகம் பாடினர். காஞ்சிபுரத்தில் பதிகம் பாடப் பெற்ற தலங்கள் இரண்டே. இத்தலமும் திருவட்டபுயகரமும்.

### 11. பவளவண்ணம், 12. நிலாத் திங்கள் துண்டம், 13. கள்வனூர்:

இம்மூன்று தலங்களையும் திருமங்கையாழ்வார் ஒருவரே திருநெடுந்தாண்டகத்தில் பாடினர். அதில் 'பவளவண்ணா நீரகத்தாய் . . நிலாத் திங்கள் துண்டத்தாய் —கள்வா '' என்று குறித்துள்ளார். நிலாத் திங்கள்துண்டப் பெருமாள் ஏகாம்பரநாதர் சன்னிதியிலும், கள்ளப் பெருமாள் காமாட்சியம்மன் சன்னிதியிலும் காட்சி தருகின்றனர்.

''உள்ளுவாருள்ளத்தாய்'' என்கிற திருமங்கையாழ்வார் பாசுரத்தைக் கொண்டு உள்ளுவாருள்ளம் என்கிற திருத்தலமும் உண்டென்பர், சிலர். ஆனால் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதியில் இத்தலத்திற்குப் பாசுரம் பாடவில்லையாதலால் கை கூப்பி நிற்கிறோம்.

### 14. திருப்பாடகம் :

பாண்டவ தூதர் சன்னிதி. வீற்றிருந்த திருக்கோலத்தில் இவ்வளவு திருவளர்த்தியான திருமூர்த்தி எங்கும் இல்லை. பாடு—அகம், பாடகம்; பாடு என்பது பெருமை. பெருமை தோற்ற எழுந்தருளியிருக்கும் தலம் என்று பொருள். ஸ்ரீ கிருஷ்ண பகவான் பாண்டவ தூதனாய்த் துரியோதன சபைக்கு எழுந்தருளின காலத்தில் அவன் செய்த சூழ்ச்சிக்கு விசுவரூபம் எடுத்த வரலாறு மகாபாரதப் பிரசித்தம். திருமங்கையாழ்வார் அவ்வரலாற்றினைப் பெரிய திருமொழியில் (9—1—8) ''அரவு நீள் கொடியோன் அவையு ளாசனத்தை அஞ்சிடா தேயிட, அதற்குப் பெரிய மாமேனி அண்ட முடுருவப் பெருந்திசையடங்கிடநிமிர்ந்தோன்'' என்கிற பாசுரத்தினால் பாடியுள்ளார். இத்தலம் பூதத்தார் பேயார் திருமழிசைப்பிரான், திருமங்கையார் என்னும் நான்குஆழ்வார்களின் பாடல் பெற்றது.

ஆக இப்பதினான்கு திவ்விய தேசங்களும் ஆழ்வார் பாடல் பெற்றவை. முகுந்தப் பெருமாள், நரசிங்கப் பெருமாள், உள்ளுவாருள்ளத்தான், பச்சைவண்ணர் இந்நால்வரின் தலங்கள் புராண வரலாறு பெற்றவை.

# தாமரைக் கண்களால் நோக்காய்

( அடியார்க்கு நல்லான் )

''பண்டை நாளாலே நின்திரு வருளும்,
பங்கயத் தாள்திரு வருளும்
கொண்டு, நின் கோயில் சீய்த்துப்பல் படிகால்
குடிகுடி வழிவந்து ஆட்செய்யும்
தொண்டரோர்க்கு அருளிச்சோதிவாய் திறந்து,உன்
**தாமரைக் கண்களால் நோக்காய்**
தெண்டிரைப் பொருநல் தண்பணை சூழ்ந்த
திருப்புளிங் குடிக்கிடந் தானே''

—நம்மாழ்வார்.

**பாடலின் பொருள் :**

''தெளிந்த அலைகளையுடைய தாமிரபரணி யாறு பாய்கின்ற, குளிர்ந்த நீர்வளம் மிக்க, வயல்களால் சூழப்பெற்ற, திருப்புளிங்குடி என்கின்ற திருத்தலத்தில், பள்ளிகொண்டருள்பவனே! உன்னுடைய திருவருளையும், தாமரை மலரில் வீற்றிருக்கின்ற பெரிய பிராட்டியாருடைய திருவருளையும், பண்டை நாள் முதலாகவே அடைந்து, நின்னுடைய திருக்கோயிலில் திருவலகிடுதல் மெழுகுதல் முதலிய தொண்டுகளைச் செய்து, தொன்றுதொட்டு வழிவழியாக அடிமை செய்து வருகின்ற தொண்டர்களாகிய எங்கள்பால் இரக்கம் கொண்டு, ஒளிமிக்கு அழகிய நின் திருவாயைத் திறந்து, இனிய நல்லுரைகள் பலவற்றைக் கூறி, உன்னுடைய தாமரை மலர் போன்ற திருக்கண்களால் எம்மை நோக்கியருள்வாயாக!'' என்பது, இப் பாடலின் திரண்ட பொருள்.

உம்மைத் தவிர வேறு புகல் அற்ற அடியேம்பால் இரக்கங் கொண்டு, ஏதேனும் ஓர் ஈர நற்சொல் அருளிச் செய்யவும், எம் பிறவித் துயர் வெப்பம் தீரும்படி குளிர நோக்கியருளவும் வேண்டும் என்பது, இப் பாடலின் கருத்து.

**பாடற் பொருள் நலங்கள் :**

(1) முதல் இரண்டு வரிகளாலும், ஆழ்வார் தொன்று தொட்டு நெடுங்காலமாக வழி வழியே தொண்டு பூண்டொழுகும் தம்முடைய இயல்பினைக் குறிப்பிடுகின்றார். திவ்விய தம்பதிகள் எனப்படும் திருமாலும் திருமகளும் ஆகிய இருவரின் திருவருளையே துணையாகக் கொண்டு, நித்தலும் கோயில் தொண்டு புரிந்து வரும் நற்குடிப் பிறப்பில் தோன்றப் பெற்ற தமது பெருமையை, விதந்து பேசுகின்றார்.

(2) ''எதிர்சூழல் புக்கு எனைத்தோர் பிறப்பும் எனக்கே அருள்கள் செய்ய விதி சூழ்ந்ததால், எனக்கேல் எம்மான் திரிவிக்கிரமனையே'' என்று அருளிச் செய்தவர் ஆகையாலே, ''பண்டை நாளாலே நின் திருவருள் கொண்டு'' என்று அருளிச் செய்தார். பெரிய பிராட்டியின் முயற்சியும் பரிந்துரையும் காரணமாகவே, பெருமாளின் திருவருள் வாய்த்தமையால், ''பங்கயத்தாள் திருவருளும் கொண்டு'' என்று மொழிந்தருளினர்.

(3) முற்சொலற் பாலதை முன்னும், பிற்சொலற் பாலதைப் பின்னும் சொல்ல வேண்டுவதே முறை. அம்முறையில் பங்கயத்தாள் திருவருளை முன்னரும், பெருமாளின் திருவருளைப் பின்னரும், குறிப்பிட்டிருத்தல் வேண்டுமாயினும், காரியத்தை முன்னே சொல்லி, காரணத்தைப் பின்னர்க் கூறுவதும் ஒரு வகை முறை யாதலின், ''நின் திருவருளும் பங்கயத்தாள்திருவருளும் கொண்டு'' என்று அருளிச் செய்தார்.

(4) குடிகுடி வழிவந்து ஆட்செய்யும் தம் தொண்டின் திறம் கூறுவார், ''நின் கோயில் சீய்த்து'' என்றார். இறைவன் எழுந்தருளியிருக்கும் திவ்விய தேசங்களில் திருவலகிடுதல் மெழுகிடுதல் கோலமிடுதல் முதலியன பலவும், சிறந்த தொண்டுகளாக இத் தொடரால் குறிக்கப் பெற்றன.

(5) இறைவனுக்குத் தொண்டு பூண்டு ஒழுகுதல் சிறப்புடைத்தேயாயினும், அவ் இறைவனுக்கு வழிவழியே, பரம்பரை பரம்பரையாகக் குடிகுடி ஆட்செயும் சூழலிற் பிறந்து, தொண்டு புரிந்து ஒழுகுதல் மிக்க பெரும் சிறப்புடையதாதலின், ''பல்படி கால் குடிகுடி வழிவந்து ஆட்செய்யும் தொண்டர்'' என்று சிறப்பித்து விதந்தோதினர்.

(6) ''தொண்டனேற்கு'' என்று ஒருமையாகக் கூறாமல், ''தொண்டரோர்க்கு' என்று பன்மையாகக் கூறியது, தம்மோடொத்த பிறரையும் சேர்த்துக் கொள்ளும் பரந்து விரிந்த மனப்பான்மையால்.

(7) தமக்கு ஏதேனும் இனிய நல்ல சொற் கூறியருளுதல் வேண்டுமென்பார், ''சோதிவாய்

திறந்து'' என்றார். பூ அலருமா போலே வாய் திறக்கவும், அப்போது திருமுகத்தில் மலர்ச்சியும் செவ்வியும் மிளிரவும் வேண்டும் என்பார் ''சோதிவாய்'' என்றார்.

(8) இங்ஙனம் சோதி வாய் திறந்து கூறும் நல்ல இனிய சொற்களில் தோற்றாத பாசமும் பரிவும், பார்வையிலே நன்கினிது புலப்படும் படி குளிர நோக்கிக் கடைக்கணித்தருளல் வேண்டும் என்பார், ''உன் தாமரைக் கண்களால் நோக்காய்'' என்றார். இறைவனின் திருவருட் கடைக்கண் நோக்கம் படுதலால், எல்லா நலன்களும் இனிது விளையும் என்னும் உண்மை இதனால் வலியுறுத்தப் பெற்றது.

**கவிதைச் சுவைத் திறன் :**

இங்ஙனம் மொழிக்கு மொழி தித்திப்பாக அமைந்துள்ள இச்சிறந்த பாடல், கற்போர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு களிதுளும்பச் செய்வதாகும். காணுந் திறனற்ற குருடரும், கேட்கும் திறன் இழந்த செவிடரும், பேசும் நலம்பெறாத ஊமையரும், நடக்கமாட்டாத முடவரும், உலகிற் பலர் உளராதல் போலவே, கவிதைத் திறத்தையும், இலக்கியக் கலைநலத்தையும் சுவைத்து உணரமாட்டாத மனப்புலக் குறையரும், உலகில் மிகப் பலர் உண்டு. **என்றி டேவிட் தோரே** என்னும் பேரறிஞர் ஒருவர் கூறுவதுபோல, ஒரு கோடி மக்களில் யாரேனும் ஓரிருவர் மட்டுமே கவிதையின்பம் நுகர வல்லவராக விளங்குவர்.(†) திருவள்ளுவப் பெருந்தகையார் மொழிந்ததனை அடியொற்றி, ''மலரினும் மெல்லிது **செய்யுள்**; சிலர் அதன் செவ்வி தலைப்படுவார்'' என நாமும் குறிப்பிடலாம். 'உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே' என்று தொல்காப்பியம் என்னும் பழந் தமிழ் இலக்கணம் கூறுவதற்கேற்ப, கலைநலப் பொருளியல்புகளைச் சுவைத்துணரும் திறம் பெற்ற ஒரு சில அறிஞர் பெருமக்களுக்கே, சிறந்த கவிதையின் சொற்பொருட் சுவைத் திறங்கள் புலனாகும். சிறந்த பெருமக்கள் இருவர் இப்பாடலின் பொருள் நலனை எங்ஙனம் நோக்கிச் சுவைத்து அநுபவித்தனர் என்பது, இங்கு நாம் அறிந்து மகிழ்தற்பாலது.

---

(†) "The millions are awake enough for **physical labour;** but only one in a million is awake enough for effective **intellectual exertion,** only one in a hundred millions to a **poetic rapture** or spiritual experience."

—**Henry David Thoreau,**
Where I Lived & What I Lived For.

**தேவப்பெருமாள் அரையர் :**

திருவரங்கம் பெரிய கோயிலில் பிள்ளைதேவப்பெருமாள் அரையர் என்பவர் ஒருவர் இருந்தார். அரையர் என்பவர்கள், திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களைப் பெருமாள் திருமுன்பு இசையுடன் பாடி அபிநயம் பிடித்துப் பொருள் விளக்கம் புரிபவராவர். அத்தொண்டு புரிந்து வந்த பிள்ளைதேவப் பெருமாள் அரையர், ஒரு நாள் பெருமாள் திருமுன்பு இத் திருப்பாசுரத்தைச் சேவிக்க நேர்ந்தது. அங்ஙனம் சேவிக்கையில் 'உன் தாமரைக் கண்களால் நோக்காய்' என்னும் தொடரை, ஒரு முறை சொல்லி நிறுத்தாமல், எம்பெருமான் தம்பால் இரக்கம் கொண்டு கடைக்கணித்துத் தம் குறைகளையெல்லாம் போக்கி உய்வித்தருளல் வேண்டும் என்னும் வேண்டுகோள் புலப்பட, 'நோக்காய்—நோக்காய்' என்று பலகாலும் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டு, மேல்வரிக்குப் போகமாட்டாமல், தன்வயம் இழந்து நின்றார். பெருமானின் தாமரை மலர் போன்ற கண்களின் அழகில் ஈடுபட்டு, பக்திமேலிட்ட பரவச உணர்ச்சியால், அவர் அங்ஙனம் செய்துஉள்ளம் உருகி மகிழ்ந்தார்.

**திருவரங்கப் பெருமாள் அரையர் :**

அப்போது அத்திரளில் வீற்றிருந்த அவர் தம் திருத் தந்தையாரான ஆழ்வார் திருவரங்கப்பெருமாள் அரையர் என்பவர் எழுந்திருந்து, ''பிள்ளாய்? நீ செய்வது என்? எம்பெருமான் திருவுள்ளம் புண்படும்படி, இங்ஙனே 'நோக்காய் நோக்காய்' என்று பலகாலும் சொல்லி நிர்ப்பந்திக்கலாமோ? அழகிய மிடற்றைத் தந்து, நல்ல பாடலைத்தந்து, மற்றும் பொருட்செல்வம் மக்கட் செல்வம் முதலிய செல்வங்களை எல்லாமும் பெருமாள் நினக்குத் தந்தருளியிருக்க, அவர் ஒன்றும் செய்யாதவர்போல் நினைத்து, இன்னமும் நோக்காய் நோக்காய் என்றால், இஃது என்னே? நன்றி கொன்ற அபசாரமாம் அன்றோ? மேலே பாடுக! என்று பணித்தருளினார்'' என்பது வரலாறு.

**முடிவுரை :**

இவ்விரு பெரு மக்களின் திருவுளப் பாங்கு இருந்தபடியையும், இவ்விருவரும் வெவ்வேறு வகையில் இப்பாடற் பொருளில் தோய்ந்து ஈடுபட்ட திறத்தினையும், இவ்வரலாற்றுச் சுவை நிகழ்ச்சி உணர்த்துதல் காணலாம். அருளிச் செயற் பாசுரங்களில், நாம் எங்ஙனமெல்லாம் அன்பு கொண்டு ஈடுபட்டு அநுபவித்தல் வேண்டும் என்பது, இதனாற் புலனாகும்.

# "நீத்தார் பெருமை"

தவத்திரு. அழகர் அடிகளார் அவர்கள்,

(மாம்பாக்கம் குருகுலம், மதுராந்தகம்-603 306.)

(1) நீத்தார் என்பவர் நல்லொழுக்கத்தில் நடந்து அதனுல் அகப்பற்று விட்ட அறவோர் ஆவர். இவர் இல்வாழ்க்கையரே. 'பற்றறுதல்' என்பது அக உணர்ச்சி, புறத்தில் துறத்தல் அன்று. திருவள்ளுவருக்கு அகத்தில் பற்ருத புறத்துறவு பிடிக்காது. அதனை அவர் 'கூடா ஒழுக்கம்' என்பார். அதை ஒரு குற்றச் செயலாகவும் படிற்றெழுக்கமாகவும் பழிப்பொழுக்கமாகவும் கூறுவார். நெஞ்சத்தில் துறக்க வேண்டும் என்பது அவர் கருத்து.

பற்று நீத்தல் என்பது, உலகத்திலும் உடம்பிலும் உடற் கருவிகளிலும் சூழஉள்ள பொருள்களிலும், தன் உயிரிலும், அவா அறுத்தலாகும் ; எல்லாவற்றையும் பிறர்க்கும் தனக்கும் பயன்கொள்ளும்போது, பயன்படாமல் இருப்பவற்றில் பற்று அற்றுவிடும். எடுத்துக்காட்டாக ஒன்று சொல்லலாம்; உடம்பையும் உலகத்தையும் உயர்ந்த வகையில் பயன்படுத்துவதாலுல் அவற்றைக் கொண்டு திருவருட் செயல்களில் ஈடுபட வேண்டும் ; அவற்றைப் பயன்படுத்தும் முறை இது. இவ்வாறன்றி, அவற்றைப் படைத்த இயற்கையின் நோக்குக்கு மாருக அவற்றைச் செயல்படுத்துதல் பற்ருகும்; தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் எனப் பிறர்க்கும், தான் எனத் தனக்கும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பிறர்க்காவன முதலிற் செய்துவிட வேண்டும்.

அருள் முறை அல்லாதவற்றிற் கெல்லாம் பயன்படுத்தினுல், அது மாருகும்; நோக்கம் அறிந்து செய்யும் தவறு. இங்ஙனம் நல்லொழுக்கம் ஒழுகி அதனுல் இயல்பாகவே பற்றுக் குறைந்தவர் அறவோர். இல்வாழ்வார் நல்லொழுக்கத்தில் ஒழுக ஒழுகத் தானே பொருள்களில் பற்று வைத்தல் நீங்கி வரும்.

நல்லொழுக்கம் என்பது திருவருட் செயல்களில் அன்பு வைத்து, அந்த அன்போடு பொருள் முதலியவற்றைப் பிறர்க்கும் தனக்கும் அருள் நெறியிற் பயன்படுத்திக் கொண்டு, அப்படியே தொடர்பாக நடந்து வருதல் ; ஒழுக்கம் என்பது இங்ஙனம் நல்லொழுக்கத்தைக் குறிக்கும். ஒழுக்கம் தொடர்ந்து நடத்தல் ; அருள் நெறியில் இவ்வாறு தொடர்ந்து நடக்கவேண்டும். அத்தகைய சான்ருேர் பெருமையையே நூல்களெல்லாம் தமக்கு வழிகாட்டியாகக் கொள்ளும்; நூல்களின் முடிவு இத்தகையது. நூல்களில் கூறும் சிறந்த பொருள்களுள் அகப்பற்று நீத்து, ஒழுக்கம் மிக்கவராய் இருக்கும் சான்ருேரையே அவை முதன்மையாகக் கொள்ளும்.

(2) இத்தகையோர் பெருமைக்கு உலகத்தில் ஓர் அளவே இல்லை. துணைக் கூறின் என்றது, அளவு கூறுதலைக் குறித்தது. இவர்கள் பெருமைக்கு அளவு எது? இல்லை என்பதைப் புலப்படுத்தவே திருவள்ளுவர் ஒன்று கூறுகிருர். அறவோர் பெருமையைக் கூறுங்கள் என்ருல், வையத்து இறந்தவரை எண்ணிக் கொள்ளுங்கள் என்று சொல்லுகிருர். இது சுவையாய் இருக்கிறது ; இரண்டும் அளவு கூற முடியாதது என்பது கருத்து; பிறந்தவரில் இன்று இருப்பவரும் உண்டு; இறந்து போனவரைக் கணக்கெடுத்தலில் முடிந்த முடிவு இருக்கிறது ; ஆதலால் அப்படிக் கூறினர்.

கருவில் இறந்துபோதலும் பிறவும் உண்டாதலால், 'வையத்து' இறந்தாரை என்ருர். ஆண் பெண் உடம்புகள் யோகம் புரிவதற்கும், யோகத்தால் கரு உண்டாக்குதற்குமே உள்ளன; அப்படிப் பயன்படுத்தாமல், வெறுங் காமத்துக்காகப் பயன்படுத்துவது பற்றைக் காட்டும் ; எதற்காக எது அமைந்ததோ அந் நோக்கம் அறிந்து அதனைப் பயன்கொள்ளும்போது, பற்றற்றதாய் முடியும்.

இல்வாழ்க்கையில் உள்ளோர் இதனை அறிந்து துணைவியின் இடத்தில் காமங் கொள்ளாமலும், காமப்பற்று அற்றும், 'மக்கட்பேறு ஓர் அறம்' என்று கருதியும், இருவரும் பிரிவு இன்றி அன்பு மிக்குத் தொடர்ந்து ஒழுகி வர வேண்டும். இத்தகையோர் அறவோர் ஆவர். அவர் அந்தணர் என்றும் பெயர் பெறுவர் ; அவர் பெருமைக்கு அளவு ஏது? இலக்கியங்களில் இவரே முந்தி நிற்பர்.

நீத்தார் பெருமையை இக்குறளில் 'துறந்தார் பெருமை' என்று கூறினர் ; துறந்தார் யார் என்று விளக்கங் கூறுவதற்காக வருங் குறளில் 'அறம் பூண்டார் பெருமை' என்று நீத்தாரை அறவோர் எனக் கூறுதலும் காண்க. கடைசி குறளில், 'அறவோர் என்றே குறிப்பர்.

(3) இந்த உலகத்தில் அறத்தை மேற்கொள்ளும் பெரியோர் அதன் விளைவையும் அறிந்து மேற்கொள்ள வேண்டும். ''வழி பயக்கும் ஊதியமும் சூழ்ந்து செயல்'' (46) எனவும், ''முற்றி ஆங்கு எய்தும் படுபயனும் பார்த்துச் செயல்'' எனவும், ஆசிரியர் பின்னும் கூறுதல் காண்க.

அறங்கள் இப்பிறப்பில் மட்டும் பயன் தருவன அல்ல; மேல் மேல் பிறப்புக்களிலும் பயன் தரும். உயிர்களின் பிறப்புப் பலவாதலின், இம்மையில் செய்யும் அறம், பல பிறப்புக்களுக்கும் உதவியாய் இருக்கும் ; உயிருணர்வில் அறவுணர்ச்சி படிதலால் உயிரெடுக்கும் ஏனைப் பிறவிகளிலும் புண்ணியம் தோய்ந்து பயன் தரலாயிற்று. மறுமை என்பது அடுத்த பிறவி மட்டுமன்று ; பின் பிறவிகள் பலவற்றிற்கும் பொதுப் பெயர்; இப்படி இருமை வகையும் அறிந்து நடந்து கொள்வோர் இந்தப் பிறப்பில் எவ்வுயிர்க்கும் செந்தண்மையே பூண்டு எல்லாப் பிறவிகளிலும் உயரும் முறையில் கடமைகளைச் செய்வர் ; அவர்கள் பெருமையே உலகில் உயர்ந்ததாயிற்று.

ஆதலால் அறங்கள் செய்ய வேண்டுவோர், மறு பிறப்புக்களையும் கருதிப் பார்த்துச் செய்ய வேண்டும் என்று ஆசிரியர் தெரிவிக்கிறார். அறம் என்பது கடமை. திருக்குறளில் உள்ள எல்லா அதிகாரச் செய்திகளும் பொது என்றால், இல்வாழ்க்கை அதிகாரச் செய்திகள் அவர்களுக்குச் சிறப்பாகும்; இல்வாழ்க்கை அதிகாரங்கள் இருபது. அவற்றில் வரும் கடமைகளை அவர்கள் சிறப்பாகச் செய்ய வேண்டும்; அகப்பற்றுத் துறக்கும் நிலையில் அவர்கள் உயர்வர் ; அந்தணர் அறவோர் நீத்தார் பெரியர் எனப் படுவர்.

இல்வாழ்க்கையில் உள்ளோர் செய்யும் கடமைகள் 'இல்லறம்' எனப்படும் ; அவர்கள் அகப்பற்று முற்றும் துறக்கும்போது துறவோர் ஆவர் ; அந்நிலையில் அவர்கள் செய்யும் செயல்கள் அறங்கள் எனப்படுவதில்லை. 'துறவறம்' என்றோ, துறவை அறம் என்றோ திருவள்ளுவர் எங்கும் கூறவில்லை ; இல்லறங்களே அறம் எனப்பட்டன; 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்று திருக்குறள் கூறும். ஆதலால், திருக்குறள் முழுதும் இல்வாழ்வார்க்கே உரியது என்பதும் பெறப்படும். பாயிரத்தில் நீத்தார் எனப்படுபவரும் இல்வாழ்க்கையிலேயே தக்க கடமைகளைச் செய்து கொண்டு அறவோராய்த் திகழ்பவர் ஆவர்.

இங்ஙனம் ஒழுக்கத்தால் நீத்தலும் இல்லத்தில் அறவோராய் இருத்தலும் எல்லாப் பிறப்புகளின் நிலையும் தெரிந்து இவ்வுலகில் அறங்களைச் செய்தலும் மக்களுக்குக் கடமையாயின ; அவர்கள் பெருமையே உலகில் உயர்ந்தது என்பது திருமறைக் கருத்து.

(4) செயல்கள் புரியும்போது அறவோர் ஐந்து பொறிகளையும் அடக்கி ஆண்டு செய்வர்; தீயவைகளை அடக்கிக் கொள்வர்; அருள் நெறிகளில் ஆண்டு கொள்வர் ; மெய்ஞ்ஞானம் என்பது அதற்கு உதவும் ; ஞானமிருந்தால் அப்படி நிகழும் ; அறவோர்க்கு மெய்ஞ்ஞானம் எளிதாய் வாய்க்கும். அதன் திண்மையினால் பொருள்களை அடக்கி ஆள்வர்.

இந்த உலகத்தில் ஐம்புலன்களை அடக்கி ஆள்வோர் தக்க தவமுடையோர் ஆவர் ; ஏனென்றால் புலன்களை அடக்கி ஆளுதல் அத்துணை எளிதன்று ; அதனாலேயே புலன்களை யானைகளாகத் திருக்குறள் உருவகம் செய்தது ; தோட்டி என்று அங்குசம் குறிக்கப்படுவதனால் இது தெரிகிறது. யானைக்குள்ள பெரிய வலிவு புலன்களுக்கு இருக்குமென்றாலும், 'அறிவுடையார் எல்லாம் உடையார்' ஆனதனால் ஞானத்தினால் அந்த யானைகளையும் அடக்கி ஆளமுடிகிறது. மனிதர்க்கு ஞானம் என்பது அத்துணைச் சிறந்தது.

ஒரு யானையை அடக்கி ஆளச் சிறிய அங்குசம் போதும்; அந்தக் கருவிக்குத் தோட்டி என்று பெயர்; அது உறுதியாய் இருந்தால் யானையை அடக்கி ஆளலாம் ; அப்படித்தான் அறிவும் உறுதியாய் இருக்க வேண்டும். இந்த உலகில் அறிவினால் புலன்களை உறுதியோடு அடக்கி ஆள்பவர் வீட்டுலகத்துக்கு வித்தாவர் என்று திருக்குறளில் வருகிறது ; அங்கே முளைத்துக் கிளைத்து ஓங்குவர் என்பது கருத்து; இங்கும் போற்றுதல் பெறுவர்.

(5) மனிதனுக்கு ஆற்றல் என்பது, புலன் ஐந்தும் அடக்கி ஆள்வதிலேதான் அமைகிறது; ஞான ஆற்றல் பதிந்தவர்களுக்குத்தான் எதுவும் செய்ய அரிதாகாது ; எளிதாய் மிகுந்து வரும்; அத்தகையவர் இவ்வுலகத்தில் இருக்கிறார் என்பதற்கு, ஒரு அடையாளம், காலத்தில் வேண்டுமளவு இயல்பாகவே மழை பொழிவதுதான்; அவர்கள் இருக்குமிடத்தில், மண்ணாலும் நீராலும் தீயாலும் காற்றாலும் கேடுகள் நேர மாட்டா ; உலகம் இதனை உணர்ந்தால் நாட்டில் சான்றோர்கள் விளங்கப் பாடுபடுவது மிகுதியாய் இருக்கும்.

இந்திரன் என்பது மழையே; வானோர்கள் தலைவனாகிய இந்திரன் வானத்தில் விளங்கும் மேக மண்டலங்களுக்கு அதிதேவன் ; இவ்வுலகத்திலும் 'நரேந்திரன் ', 'கஜேந்திரன்', 'மிருகேந்திரன்' எனப் பெயர்கள் வழங்குவதனால் வானவர்கள் தலைவனே இங்குக் குறிக்கப்படுகிறவன் என்பதற்காக அகல் விசும்புளார் கோமானாகிய இந்திரன் (தேவேந்திரன்) என்று சிறப்பிக்கப்பட்டான் ; இந்திரனே என்பது மழைக்கு ஆகுபெயர் ; அவனால் இயக்கப்படுதலின்.

(6) புலனடக்கிய பெரியோர்கள்தாம் செயற்கரிய செயல்களைச் செய்வார்கள்; செயற்கரியன என்பது பிறர் செயற்கரியன ; பிறர் செய்யாதன என்பது பொருள்; பிறர் எல்லா

ரும் செய்த செயல்களையே செய்வது அறவோர்க்குச் சிறப்பன்று.

நாட்டுக்குச் செய்ய வேண்டிய செயல்கள் மற்றவரால் செய்ய முடியாதன எவ்வளவோ உள்ளன ; சான்றோர்களாலேதாம் அவைகள் அமைய முடியும் ; பொறிகளை அடக்குந் திறன் அதற்கு முதன்மையாதலின் நீத்தார் பெருமையில் இவ்வுண்மை கூறப்பட்டது. அரிய செயல்களைச் செய்யாதார் சிறியர் என்பது தானே பெறப்படுதலோடு, தமக்குரிய கடமைகளையும் செய்யாமல் சோம்பலாய் மயங்கிக் கிடப்பவர் பலர் ; அவரெல்லாம் சிறியரே ; சிறுமையுடையோரே!

(7) சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பது, நீர் தீ காற்று வானம் மண் என்னும் ஐந்து பூதங்களின் மூலங்கள் ; ஐந்து பொறிகளின் புலன்களாகவும் இவை உணரப்படும் ; இந்த நுட்பப் பூதங்களைக் கொண்டு உலகத்தின் விரிவுகளையெல்லாம் காணக்கூடுமாதலால் 'ஐம்பொறிகளை யடக்கியாளும் பெரியோரே உலகத்தின் வகைகளை அறிந்தவராவர் ; அவர்களுக்கு உலகம் கட்டுப்படவுங் கூடும் ; ஐந்தின் வகை தெரிவான் கண்ணதே உலகு என்பதில் இந்த உண்மையும் தெரிகிறது.

ஆக, மேல் வந்த நான்கு குறள்களால் ஐம்பொறி யவிக்கும் சான்றோர் நிலை விளக்கப்பட்டது. இந்த உலகத்திலேயே அவர் வீடு பேறுடையார் (சீவன்முத்தர்) என்பது நான்காம் குறளிலும், அத்தகையோர் இருக்கின்றனர் என்பதற்கு அடையாளமாய் அவர் சூழலின் வேண்டுமளவு காலத்தில் மழை பொழியும் என்பது ஐந்தாம் குறளிலும், பிறர் செய்யாத செயல்களையே செய்து வர அவர்கள் உள்ளம் நாடுமென்பது ஆறும் குறளிலும், ஐம்பொறிகள் மட்டுமே யன்றி, உலகு முழுவதும் அவர்கள் செல்வாக்குக்குக் கட்டுப்படும் என்பது ஏழாம் குறளிலும் புலப்பட்டன.

(8) அறவோரை எட்டாம் குறளில் நிறைமொழி மாந்தர் என்று திருமறை ஆசிரியர் குறிக்கிறார் ; அறவோர் வாய்மொழியே அவர் பெருமையைக் காட்டுமென்பது அவர் கருத்து, அவர் வாய்மொழிகள் மறை மொழிகளாகும்; அந்த மறைமொழிகளே மந்திரம் எனவும் சொல்லப்படும் என்று தொல்காப்பியர் குறிப்பர். ஆற்றல் நிறைந்த மொழி அறவோர் வாக்கு; ஆதலின் அது மறைமொழியாயிற்று ; அதாவது மந்திர மொழியாயிற்று. மந்திரம் என்பது தன் பயனைக் கட்டாயம் பயந்து விடும் மொழியாகும் ; பயன் மறைந்திருப்பதனாலேதான் அத்தகைய நிறைமொழிகள் மறைமொழிகள் எனப்பட்டன.

(9) அறவோரைக் குணமலை என்றும் கூறிவிடலாம் ; மலையின் உச்சியில் இருப்பவர் என்னும் பொருட்டு 'ஏறி நின்றார்' என்றார் ; அதற்குமேல் ஏற இடமில்லையாதலின் நின்றார் எனவும் வந்தது; அவர்களுக்கு வெகுளி உண்டாதல் இயல்பன்று. எல்லாம் திருவருட்செயல் என்று எண்ணியிருப்பவராதலால், வெகுளி உண்டாதல் இல்லை ; பிறர் திருந்தும்பொருட்டு, யார்க்கும் இடையூறு இல்லாத வகையில், ஒரோவொருகால் வெகுளி உண்டாதல் கூடும் ; அப்படி உண்டானால் தன் பயனை அது நொடி நேரத்தில் தந்தே விடும். அவர்கள் சினத்தை எப்படிப்பட்டவராலும் தடுத்தல் இயலாது.

மெய்யுணர்வு அவர் சினத்தை உடனே ஆற்றிவிடக்கூடும் ; வெறும் அறிவுக்கு இயல்பாய் வெகுளி தோன்றிவிட்டது. மெய்யுணர்வின் இயல்பு அதனை நிறுத்திவிடும்; நொடி நேரங்கூட நிகழாதபடி நிறுத்திவிடும்; அறவோர் நிறைமொழி மாந்தராதலால், அந் நிலை வாயாத பிறரால் அதைத் தடுப்பது இயலாததாயிற்று. அறவோரின் வாய்மொழி மறைமொழியாதலும் அவர் வெகுளி உடனே பயன் தந்து விடுதலும் அவர் பெருமையையே காட்டின.

(10) இத்தகைய அறவோர் 'அந்தணர்' எனவுங் கூறப்படுவர். அப்படிச் சொல்வதற்குத் திருவள்ளுவர் ஒரு காரணமும் காட்டிவிட்டார். ''எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்' என்பது, அக் காரணம் ; 'அந்தண்மை' என்பதற்குச் 'செந்தண்மை' என்பதுங் கருத்தென்று அக் காரணத்தால் தெரிகிறது ; 'செந்தண்மை' நடுவு நிலைமையைக் காட்டும் ; எவ்வுயிர்க்கும் என்றதனால் சிற்றுயிர்களுக்கும் என்பது விளங்கும்; இனிமை செய்தலில் நடுவு நிலையாதலால், அதனை 'அழகிய தண்மை' என்றார். வெகுளி உண்டாதலும் அந்த நடுவு நிலைமைத் தண்மையினாலேயே என்று அறிதல் வேண்டும்; பிறர் இப் பெயர்க்கு உரியோர் அல்லர்; எவ்வுயிர்க்கும் செந்தண்மை காட்டுதல் ஓர் அறம் ; ஆதலால் அறவோர் என்றும் கூறினர். ஆகவே, 'அந்தணர்' 'அறவோர்' என்னும் இரண்டு பெயர்களும் ஒழுக்கத்தால் அகப்பற்று நீங்கிய இல்வாழ்வார்க்கு உரியவாயின.

# எண்அணி அமைந்த நுண்ணியற் செய்யுள்

## முன்னுரை:

ஒரு சிறந்த கவிதை என்றால், அதன்கண் உவமை உருவகம் முதலிய அணிவகைகளுள், ஏதேனும் ஒன்றுதல் இனிது அமைந்திருத்தல் வேண்டும். ''அணியிலாக் கவிதை பணியிலா வனிதை'' என்பது பழமொழி. ஒரு பெண்ணை அழகுபடுத்த, தோடு வளை சிலம்பு முதலிய பல வகை நகைகள் இன்றியமையாது வேண்டப் படுதல்போல, ஒரு கவிதை அல்லது செய்யுளைச் சுவைப்படுத்த உவமை உருவகம் முதலிய அணி வகைகள் இன்றியமையாது வேண்டப்பெறும் என்பது, மேலைப் பழமொழியின் கருத்தாகும்.

## எண் அணி

செய்யுளுக்குரிய அணிவகைகள் பலவற்றுள், எண்அணி என்பது ஒன்று. அஃதாவது ஒன்று இரண்டு மூன்று முதலிய பல எண்கள், ஒரு செய்யுளில் ஏற்ற பெற்றியில், கவிஞன் கையாளும் சொல் சொற்றொடர்களில் கவின் மிக அமைந்து வரும் திறனாகும்.

''ஒன்றவன் தானே; இரண்டவன் இன்னருள்;
நின்றனன் மூன்றினுள்; நான்குணர்ந்தான்; ஐந்து
வென்றனன்; ஆறு விரிந்தனன்; ஏழ்உம்பர்ச்
சென்றனன்; தான்இருந் தான் உணர்ந்து எட்டே''

எனவரும் திருமூலர் திருமந்திர முதற்செய்யுளின்கண், ஒன்று முதல் எட்டு வரையில் உள்ள எண்கள், முறையே குறிப்பிடப் பெற்றிருத்தல் காணலாம். இதுபோலவே,

''ஒருகோட்டன் இருசெவியன் மும்மதத்தன்
நால்வாய் ஐங்கரத்தன், ஆறு
தருகோட்டு அம்பிறை இதழித் தாழ்சடையான்,
தரும்ஒரு வாரணத்தின் தாள்கள்,
உருகுஉட்டு அன்பொடும் வணங்கி, ஓவாதே
இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திருகுஉட்டும்; அயன்திருமால் செல்வமும்
ஒன்றோ என்னச், செய்யும் தேவே!''

எனவரும் சிவஞானசித்தியார் காப்பு முதற் செய்யுளும், எண்ணணி என்னும் நலம் அமைந்து அழகுற்று விளங்குகின்றது. இச்செய்யுளின் பொருள் வருமாறு:

## பொழிப்புரை:

''ஒரு தந்தம், இருசெவி, மும்மதம், நால்வாய் (தொங்குகின்ற துதிக்கை), ஐந்து கைகள் ஆகியவற்றை உடையவனும், கங்கை யாகிய ஆறு-வளைந்த அழகிய பிறை-கொன்றை மாலை அணிந்த தாழ்சடை-ஆகியவற்றை உடைய சிவ பெருமான் பெற்று அளித்தவனும், யானை முகம் கொண்டவனும் ஆகிய விநாயகப்பெருமானின் திருவடிகள், தம்மை உருகிப் பெருகுகின்ற அன்புடன் வணங்கி, இடையறாமல் இரவும் பகலும் நினைத்துத் தியானிப்பவர்களின் அறிவைப் பற்றிய ஆணவ மல இருளைப் போக்கி நீக்கும்; அது மட்டுமேயன்றிப் பிரமன் திருமால் முதலியவர்களின் பெரும் செல்வமும் வாழ்வும் கூட, ஒருபொருள் ஆகுமோ? என்று இகழ்ந்து ஒதுக்குமாறு, மிக மேலான சிவஞானச் செல்வத்தையும் சிவானந்தப் பெருவாழ்வையும், அவர்கள் எளிதாக அடையச் செய்யும்'' என்பது, இப்பாடலின் திரண்ட பொருள். இனி இதன்கண் அமைந்துள்ள நுண்பொருட் குறிப்புக்களை ஒரு சிறிது ஆராய்வோம்.

## நுண்பொருள்கள்:

*(1)* விநாயகப்பெருமான், கஜமுகன் என்னும் அசுரனை அழித்தற்கு யானை வடிவில் தோன்றியருளினர். மேலும், அவன் படைகளால் அழியாத வரம்பெற்றிருந்தமையின், தமது தந்தங்கள் இரண்டனுள், வலப்பால் தந்தத்தினை ஒடித்து, அவனைக் கொன்றார். அதனால் அவருக்கு 'ஏகதந்தர்' எனப் பெயர் வழங்கும். ஆதலால் 'ஒரு கோட்டன்' என்று இங்குக் குறிக்கப் பெற்றார். இறைவன் ஆண் பெண் அலி ஆகவும், அவை அல்லாமலும் விளங்குவான். அம்முறையில் ஒருபுறம் தந்தம் இருத்தலால் ஆணாகவும், மறுபுறம் தந்தம் இல்லாமையால் பெண்ணாகவும், இங்ஙனம் இருபாலும் ஒருசேர விரவியிருத்தலின் அலியாகவும், இவற்றுள் எதுவாகவும் தனியே இல்லாமையின் இம்மூவகை நிலைகளைக் கடந்தவனாகவும், விநாயகப் பெருமான் விளங்குகின்றான் என்பது 'ஒரு கோட்டன்' என்பதனால் உணர்த்தப்பெற்றது.

*(2)* விநாயகர், தமது ஏகதந்தமாகிய ஒரு கோடு கொண்டு, வியாசமுனிவரின் வேண்டுகோட்படி, மேருமலையில் மகாபாரதம் எழுதினர் என்பது வரலாறு. எழுத்தாளராகிய விநாயகர், தாம் எழுதத் தொடங்கும் சிவஞானசித்தியார்நூல் இனிது நிறைவேறுதற்கு அருள்செய்தல் வேண்டி, ஆசிரியர் அவரை 'ஒரு கோட்டன்' என்று சிறப்பித்தார்.

*(3)* இறைவனை வணங்கப் புகுவோர், முதற்கண் அவனது திருவடிகளையே வணங்கப்

புகுவர். அதுவே மரபு நெறி. ஆயினும் இங்கு ஆசிரியர் செவிகளைக் குறித்தார். திருஞான சம்பந்தர் 'தோடுடைய செவியன்' என்று தொடங்கியதும் இங்குக் கருதத்தகும். எல்லா உயிர்களுக்குமே இரு செவிகள் உளவேனும், யானைக்கு உள்ள இரு செவிகள் மிகப் பெரியன வாய் இருத்தலும், அவைகள் பிரணவம் ஆகிய ஓங்காரத்தின் உருவ அமைப்பினை நினைப்பித்த லும் கருதி, 'இருசெவியன்' என்றார். இரு— பெரிய, இரண்டு. விநாயகர் பிரணவ வடிவின ராதல் பற்றியும், பிரணவம் கூறியே வேதாக மம் ஓதுதல் முறையாதல் பற்றியும், 'இரு செவியன்' என்று விநாயகப் பெருமானைத் தியா னித்தார்.

(4) யானைக்குக் கன்னமதம் கபோல மதம் பீஜமதம் என்னும் மும்மதங்கள் பெரு கும். அம்முறையில், விநாயகர் இச்சை கிரியை ஞானம் என்னும் மதங்களை உடையவராகக் கொண்டு 'மும்மதத்தன்' என்றார். இதனால் தம்முடைய விழைவு அறிவு செயல் ஆகிய மூன்றனுடன், விநாயகரின் விழைவு அறிவு செயல் ஆகிய மூன்றும் கலந்து இயக்குதல் வேண்டிப் பணிந்தார்.

(5) யானைக்குச் சிறப்பு உறுப்பாகிய தும்பிக்கை இங்கு 'நால்வாய்' எனப்பட்டது. 'நால்வாய்' என்பது, நான்கு என்னும் எண்ணினை யும், நாலுதல் (தொங்குதல்) ஆகிய செயலையும் உணர்த்தும் வகையில், இரு பொருள் பொருந்தக் குறிக்கப்பெற்றது. யானைக்குக் கை வாய் மூக்கு என்னும் பலவாக வும் ஒருசேரப் பயன்படுவது, 'தும்பிக்கையாகிய நால்வாய்'. தாம் நூல் இயற்றுதற்குப் பல வகைகளிலும் துணை புரிதல் வேண்டி, விநாய கரை 'நால்வாய்' என்று ஆசிரியர் நினைவு கூர்ந்தார்.

(6) பொதுவாகத் தெய்வத் திருவுரு வங்கள், நான்கு கைகளுடன் விளங்கும். இரு கைகளை உடைய மனிதர்களின் ஆற்றலைவிட, மிகப்பெரிய பேராற்றல் உடைமையினை விளக் கும் அடையாளமாக, நான்கு கைகளுடன் தெய்வத் திருவுருவங்கள் திகழும். ஆனால் விநாயகர்க்கு ஐந்து கைகள் அமைந்திருப்பது, அவர்தம் தனிப்பெருஞ் சிறப்பை உணர்த்தும். ஆக்கல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களையும் செய்தருள வல்ல வர் என்பதனை, விநாயகரின் ஐந்து கைகளும் குறிக்கும். ஐந்தொழில் புரியும் ஆற்றல் மிக்க விநாயகர், தாம் இயற்றும் நூலை, நன்கினிது நிறைவேறச் செய்தருள்வர் என்பது குறிப்பு.

(7) பேராற்றல் பெற்றிருத்தல்-அடைந் தாரைக் காத்தருள்தல்-தனிப் பெருந் தலைமை யில் திகழ்தல்-எளிவந்தருளும் இயல்புடைமை என்பன, தலைவர் எனப்படுவோர்க்குரிய சால்பு நலங்களாகும். இவையனைத்தையும் உடைய வன் சிவபெருமான் என்பதனை வலியுறுத்த ''ஆறு, தருகோட்டு அம் பிறை, இதழித் தாழ் சடையான்'' என்றார்.

[நில்லாத நீர் சடைமேல் நிற்பித்தமை, பேராற்றல். திருவடியில் விழுந்து பணிந்த சந்திரனைச் சடையில் அணிந்து வாழ்வித்தமை, அடைந்தாரைக் காத்தருளும் பேரருள். இதழி (கொன்றைமலர்) அணிந்தமை, பிரணவப் பொருளுக்குத் தானே உரியவனாகும் தனிப் பெருந் தலைமை. தாழ்சடையனாதல், எளிவந்த ருளும் இயல்பு.]

(8) கங்கையின் செருக்கை அடக்கியும் பிறையை வாழ்வித்தும், முறையே கொடி யோர்த் தெறுதலும், செவ்வியோர்க்கு அளித்த லும் (துஷ்ட நிக்கிரகமும், சிஷ்ட பரிபாலனமும்) செய்த பெருமான் என்று உணர்த்த ''ஆறு தருகோட்டு அம்பிறை இதழித் தாழ் சடையான்'' என்றார் எனினுமாம்.

(9) மகனறிவு தந்தையறிவு ஆகலின், சிவபெருமானாகிய தந்தையின் பெருமையைக் கூறி, விநாயகரின் பெருமையைச் சிறப்புற விளக்கினார்.

(10) முதன் முதலில் மனித இனம், உலகின் நடுப்பகுதியில், தமிழ்நாட்டில், மலைப் பகுதியாகிய குறிஞ்சித் திணையில்தான் தோன்றி யது என்று, ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். யானை குறிஞ்சித் திணைக்குரிய கருப்பொருள் களுள் ஒன்று. குறிஞ்சி நிலத்தில் தோன்றி வாழ்ந்த மனிதன், யானையைக் கண்டு வியப்பும் நயப்பும் எய்தினான். அதனால், தான் வழிபடும் கடவுளையும் யானையின் உருவம் உடையதாகக் கருதினான். யானை வடிவாற் பெரியது, கடவுள் இயல்பாற் பெரியவர். யானை வலிமை மிகுந் தது, கடவுள் ஆற்றல் மிக்கவர். யானை அன்பு செய்தற்கும், அச்சப்படுதற்கும் உரியது; கடவுளும் பயபக்திகளுக்கு உரியவர். யானை நலம் புரிந்து பழகினால் எளிவந்து உதவிகள் புரியும். அதுபோலக் கடவுளும் தன்பால் அன்பு செய்பவர்களை அருள்புரிந்து காப்பர். யானை தன்பாற் குறும்பு செய்பவர்களைச் சினந்து ஒறுக்கும்; கடவுளும் தன்னை நினையாது கெடும் தீயவரைக் கடிந்து ஒறுப்பர். இங்ஙனம் ஒரு வகையில் யானையின் இயல்புகளோடு ஒத்த இயல்புடையவராகக் கொள்ளப்பட்ட கடவுளே விநாயகர் எனப் போற்றப் பெற்றார். வாரணத் தின் (யானையின்) முகம் உடைய விநாயகர், வாரணம் (யானை) என்றே சுட்டிச் சிறப்பிக்கப் பெற்றார்.

(11) பிற யானைகள் அங்குசத்தால் அடக்கிப், பாசத்தால் கட்டப் பெறும். விநாய கர் அத்தகையர் அல்லர் ஆதலால், தாமே தம் கைகளில் அங்குசமும் பாசமும் ஏந்தியுள் ளார். யானைக்குப் பாகனாகிய தலைவன் ஒருவன் இருப்பான், அவன் யானையை இயக்குவான். அங்ஙனமின்றி விநாயகர் ஆகிய யானை, தாமே தலைவராய்த் தமக்குத் தலைவராவார் எவரும் இல்லாமல், எல்லாரையும் எல்லாவற்றையும் இயக்கியருள்வர். ஆதலின் ஒப்புயர்வற்ற தனிச் சிறப்புள்ள யானை என்னும் கருத்தில், அவர் ''ஒரு வாரணம்'' எனப்பட்டார்.

(12) முகத்தால் யானையாயினும், குறுந் தாள்களால் பூதகணமும், உடலால் மனித கணமும், கைகளால் தேவகணமும் ஆக விளங்கு தல் பற்றி, விநாயகரை ''ஒரு வாரணம்'' என் றார் எனினும் அமையும்.

(13) விநாயகரின் இரு தாள்களும் முறையே முற்றறிவு, முற்றுத் தொழில் எனப் படும். சிவஞானசித்தியார் ஆகிய நூலை இயற்றத், தமக்கு முற்றறிவும் முற்றுத்தொழிலும் அமைதற் பொருட்டு, விநாயகரின் திருவடிகளை ''ஒரு வாரணத்தின் தாள்கள்'' என்று சிறப்பித்தார்.

(14) வணங்குதல் இன்றியமையாதது என்பதும், அதன் இயல்பு இஃது என்பதும் கூறுவார், ''உருகு ஒட்டு அன்பொடும் வணங்கி'' என்றார். வணங்குதற்கு உருக்கம் நிகழவேண்டும்; உருக்கம் நேர்ந்தால் அது பெருக்கமாகும்; உருக்கமும் பெருக்கமும் அன்பின் காரண காரியமாய் நிகழும். இதனை உணர்த்த, அன்பினை ''உருகு ஒட்டு அன்பு'' என்றார். 'ஓடு' என்பது எதுகை நோக்கி 'ஒட்டு' என்று வந்தது. உருகு ஓடு என்பன முறையே, உருகுதல் ஓடுதல் (பெருகுதல்) என்னும் பொருள் குறித்தன.

(15) உருகிப் பெருகும் அன்புடையவர்களை ''உணர்வோர்'' என்றார். உணர்தல்-நினைத்தல், தியானித்தல். தியானித்தல் இடையறாது நிகழவேண்டும் என்பார், 'ஓவாதே' என்றும், 'இரவு பகல் ஓவாதே' என்றும் விளக்கமாகக் குறிப்பிட்டார். இரவு பகல் ஓவாது நினைத்துத் தியானித்தலையே:

''நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையாது ஒருபோதும் இருந் தறியேன்''

என்று, தமது திருவதிகை வீரட்டானத்துத் தேவாரத் திருப்பாடலில், திருநாவுக்கரசர் பெருமானும் விதந்தெடுத்து விளங்க மொழிந்தருளினார்.

(16) இங்ஙனம் இரவு பகல் ஓவாது (ஒய்வின்றி) உணர்ந்தால், அவ்வுணர்தலின் பயன்யாது என்பார்க்குச் ''சிந்தைத் திருகு ஒட்டும்'' என்றார். திருகு, திருக்கு-மாறுபாடு, கோணல்.

''பெருக லாம்தவம்; பேதைமை தீரலாம்;
திருகல் ஆகிய சிந்தை திருத்தலாம்;
பருக லாம்பரம் ஆயதோர் ஆனந்தம்;
மருக லான்அடி வாழ்த்தி வணங்கவே''

எனவரும் திருநாவுக்கரசரின் பிறிதொரு சிறந்த தேவாரப் பாடலும், ஈண்டு இயைபு நோக்கிச் சிந்தித்து இன்புறத் தக்கது.

(17) ''சிந்தைத் திருகு ஒட்டும்'' என இம்மைப் பயனுங் கூறியவர், ''அயன் திருமால் செல்வமும் ஒன்றோ என்னத் தேவே செய்யும்'' என்று மறுமைப் பயனும் உடன் கூறினார். ஒன்றோ என்ன-ஒருபொருளோ என்று சொல்லி வெறுத்து இகழ. 'ஒன்றோ' என்னும் ஓ காரம், ஒன்றன்று என்னும் எதிர்மறைப் பொருளில் வந்தது. தேவே செய்யும்-மிக மேலான சிவமாம் தன்மைப் பெருவாழ்வினையே அடையச் செய்யும். 'தேவே' என்பது விளிவேற்றுமையன்று; இரண்டன் வேற்றுமைச் செயப்படு பொருள். தேவு-சிவத்தன்மை. இதனால் விநாயகர் வழிபாட்டின் பயன் கூறப்பட்டது.

(18) இனி இறுதியாகப் பிறிதொன்றும் இங்குக் கருதுவதற்கு உரியது. சிறந்த பெரியோர்கள், என்றும் யாண்டும் கூறியதனையே மீண்டும் கூறுவாரல்லர். இன்றியமையாமையாற் கூற நேர்ந்த வழியும், அதனைப் புதுமையும் சுவைமையும் தோன்றவே கூறுர். அதற்கேற்ப, ஆசிரியர் இவ்விநாயக வணக்கமே பரபக்கத்திலும் கூறினர் ஆயினும், கூறியதே கூற விரும்பாமல்,

''ஐங்கர நாற்றோள் முக்கண்இரு பாதப்
பரியதொரு நீள்கோட்டுப் பெரிய பண்டிக்
கயந்தன் அடிக்கமலங்கள் நயந்து போற்றிக்
கருத்திலுற இருத்திமிகக் காதல் செய்வாம்''

என்று, இச்செய்யுளின் வேறுபடவும் நயமுறவும் அருளிச் செய்திருத்தல், அறிந்து இன்புறத் தக்கது. புறச்சமயங்களை மறுக்கும் பரபக்கமாதலின் 5-4-3-2-1 என்று அங்கு இறங்கு முகமாகவும்; தம் சமயக் கொள்கையினை நிலைநிறுவும் சுபக்கமாதலின் 1-2-3-4-5-6-7-8 என்று இங்கு ஏறுமுகமாகவும், விநாயக வணக்கச் செய்யுட்களை ஆசிரியர் அருள்நந்தி சிவனார் அமைத்திருக்கும் அருமைப்பாடு, பெரிதும் வியந்து மகிழ்தற்குரியது.

## முடிவுரை:


சிவஞான சித்தியார் என்னும் செந்தமிழ்த் தத்துவஞானநூல், எத்துணை நுட்பமும் திட்பமும் சுவைமையும் புலமையும் அமைந்து விளங்குவது என்பதனை, யாவரும் இனிது உணர்தற்கு, எண்ணணியில் அமைந்த, இந்த நுண்ணியற் செய்யுளே போதிய சான்றாகும். இத்தகைய சிறந்த இனிய சிவஞானசித்தியார் என்னும் தெய்விகத் தத்துவஞானத் தமிழ் நூலை, நம் தமிழர் அனைவரும் நயந்தினிது கற்றுப் பயன்கொண்டு, வையத்து வாழ்வாங்கு வாழ்வார்களாக!

— **ஆசிரியர்.**


சென்னை-600 008
15863



சென்னை பல்லாவரத்திற்கு அருகில் உள்ள அனகாபுத்தூரில் நடைபெற்ற தேவார ஓதுவார்கள் சங்க மாநாட்டில், அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமையிலும், திரு. சி. இராமலிங்கம், எம்.எல்.சி. அவர்கள் முன்னிலையிலும், 'அமுதசுரபி' ஆசிரியர் திரு. விக்கிரமன் அவர்களும், 'திருக்கோயில்' ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல். அவர்களும் உரை நிகழ்த்துதல். [12-2-78]



பதிவு எண். எம். 7039



விழுப்புரம் அருள்மிகு கயிலாசநாதர் கோயில், மற்றும் அருள்மிகு வைகுண்ட வாசப் பெருமா[illegible] திருக்கோயில்களுக்கு, அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ. ஏ. எஸ். அவர்கள் வருகை தருதல்.



வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் கோட்டம், சென்னை-600002.